கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

# 139

சித்திரை 2020

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



சாத்திரி. மலரன்னை. ஏ.எஸ்.சற்குணராஜா. மு.தயாளன். ந.ரவீந்திரன். சிவராஜா ஒசாநிதி. ச.புஸ்பலதா.
எம்.கே.முருகானந்தன். சி.ஜெய்சங்கர். இ.சு.முரளிதரன். இரா.சுலக்ஷனா. தெணியான். சித்தாந்தன்.
மீரா சிவகாமி. பா.வானதி இலங்கா திலகம். நா.நவராஜ். இ.ராஜகிருபன்.
கொற்றை பி.கிருஷ்ணானந்தன்.

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2020 - சித்திரை

# பொருளடக்கம்




## கட்டுரைகள்

**ஆழப்பதிந்த நினைவுத் தடத்துக்கு உரியவராக நீர்வை!**
ந.ரவீந்திரன் - 03

**குமரன் ஆசானின் கவிதைகள் ஓர் அறிமுகம்**
சிவராஜா ஓசாநிதி - 10

**இன்றும் காலனிய தந்திரோபாயம்**
ச.புஸ்பலதா - 17

**மருந்தால் வருத்தம்**
எம்.கே.முருகானந்தன் - 26





**வங்களாதேஷ்: புதிய தேசத்தின் குரல் சில கவிதைகளும் சிறு முன்னுரையும்**
சி.ஜெயசங்கர் - 41

**சொற்களில் "Helihopter Shot" அடிக்கும் கவிஞர் ச. முகுந்தன்**
இ.சு.முரளிதரன் - 44

**பாடுமீன் புத்தகத்திருவிழா ஓர் அனுபவப்பகிர்வு**
இரா.சுலக்ஷனா - 46

**திரும்பிப்பார்க்கிறேன் -13**
தெணியான - 48

## சிறுகதைகள்

சாத்திரி - 06
மலரன்னை - 13
ஏ.எஸ்.சற்குணராஜா - 19
கரவை மு. தயாளன் - 32

## கவிதைகள்

மீரா சிவகாமி - 09
பா.வானதி இலங்கா திலகம் - 16
சி.ஜெயசங்கர் - 23
நா.நவராஜ் - 40
இராஜகிருபன் - 47





## நேர்காணல்


சித்தாந்தன் - 27

## கதைஇல்லாக் கதைகள்

கொற்றை பி. கிருஷ்ணானந்தன் - 43

## அட்டைப்படம்

நன்றி இணையம்

# ஜீவநதி

**2020 சித்திரை இதழ் - 139**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/-
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி
## (கலை இலக்கிய மாத சஞ்சிகை)


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

# கொரோனா பாதுகாப்பு

உலகில் மக்களை இயற்கை உலுக்கும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி நிகழ்ந்த வண்ணமே உள்ளன. விஞ்ஞான கண்டு பிடிப்பு, மருத்துவ வசதி, தொடர்பாடல் யுகம் என்பவற்றுக்கும் அப்பால் இயற்கை என்பது யாராலும் கட்டுப்படுத்த முடியாதது என்பதை மீண்டும் நாம் உணர்கின்றோம். இருப்பினும் இந்நோய் ஒரு தொற்று நோய் என்பதால் நாம் இந்த நோய்க்குரிய தடுப்பு மருந்து கண்டு பிடிக்கும் வரையில் பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியம். ஆனால் மனிதனது அடிப்படைத் தேவைகளில் முதல் இடம் வகிக்கும் உணவுத் தேவை பூர்த்தி செய்யப்படாதவிடத்து உணவுக்கான தேடலில் கட்டுப்பாடுகளை மீறி மனிதன் செயற்படுவான் என்பதும் நாம் புரிந்து கொள்ள வேண்டியதொன்று. ஊரடங்கு தொடர்ந்து நீண்ட நாட்களாக அமுலில் இருந்தால் தினக்கூலிக்கு செல்லும் மனிதர்கள் நிலை என்ன? நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன தான் ஆனால் அது அவர்களது பசியை போக்கவல்லதா? அவர்களது பிற தேவைகளை யார் பார்த்துக் கொள்வது? ஊரடங்கை தளர்த்துவதாலும் அபாயமே... விடை தெரியாத இந்த பயணத்தில் மக்கள் அடையும் இடர்களைத் தீர்ப்பது எவ்வாறு எனத் தெரியாது உலகமே தவிக்கின்றது. தமிழர்களாகிய நாங்கள் விருந்தோம்பல் பண்பில் முன்னிற்பவர்கள் என்ற வகையில் உணவு, பணம், பொருள் உள்ளவர்கள் பிறர்க்கும் இவ்விடர்வேளையில் அனைத்தையும் பகிர்ந்து வாழ வேண்டும். மக்கள் கூடும் இடங்களை தவிர்த்து வீடுகளில் தங்குவதே தமக்கும் பிறர்க்கும் நாம் செய்யும் பெரிய உதவியாகவும் அமையும். வீட்டில் தங்கியிருக்கும் காலத்தில் கைத்தொழில் முயற்சிகளிலும், வீட்டு தோட்டம், தமது வளவை சுத்தப்படுத்தல், வாசிப்பு, வீட்டை ஒழுங்கு படுத்தல், கலைகள் பழகுதல், படைப்பு முயற்சிகள் என பல முயற்சிகளில் ஈடுபடலாம். எல்லாவற்றிற்கும் மேலாக சுத்தத்தை பேணுதலும் கடவுள் பக்தியும் அவசியமானதாகும் விஞ்ஞானக் கண்டு பிடிப்போடு கூடிய இறை வழிபாடே நம்மை காக்க போகிறது என்பதில் ஐயம் இல்லை.

- க.பரணீதரன்

## ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ் - பூபாலசிங்கம் புத்தகசாலை,
புக்லப் - திருநெல்வேலி,
செட்டித்தெரு - பூபாலசிங்கம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி
ஸ்ரீலங்கா புத்தகசாலை - நல்லூர்

# ஆழப்பதிந்த நினைவுத் தடத்துக்கு உரியவராக நீர்வை!


ஐம்பதாம் ஆண்டுகளின் கடைக்கூறில் அரசியல் செயற்பாட்டாளர் என்ற வாழ்நெறியை வரித்து அறுபதுகளின் தீவிர தொழிற்சங்கப் போராட்டங்களின் உலைக்களத்தில் பெற்ற அனுபவங்களை எழுத்தாக்கம் செய்து முற்போக்கு இலக்கிய முன்னோடிகளில் ஒருவராக மடைமாற்றம் பெற்றார் நீர்வை.

■ ந.ரவீந்திரன்

ஓய்வின்றி இயங்கிய நீர்வைப் பொன்னையன் தனது செயற்பாட்டை நிறுத்திக்கொண்டு எம்மிடம் இருந்து விடைபெற்று விட்டார். அவர் எம்மிடையே ஏற்படுத்திச் சென்ற தாக்கம் பற்றி நிறையவே பேச வேண்டும். முதற் பதிவாக சில வார்த்தைகள்.

அறுபதாம் - எழுபதாம் ஆண்டுகள் இடதுசாரி இயக்கத்தின் உச்சநிலைக் காலம். அதன் செயற் பாட்டாளர்கள் இன்று எம்மைவிட்டு நீங்கியபடி உள்ளனர். அவர்கள் முன்னெடுத்த போராட்டங்களின் விளைவாக ஏற்பட்ட பல மாற்றங் களின் அறுவடையினாலேயே பின்னரான பல்தேசக் கொம்பனிகள் எழுச்சி பெற்று உலகைச் சூறை யாடிக் கொள்ளை நோய்க்குப் பலிக் கடாவாக்கிவிட்டுள்ள இன்றைய நிலையில் ஓரளவாவது மனுக்குலம் மீட்சிபெற வழி காட்டும் அமைப்பாக் கங்களை ஏற்படுத்தித் தந்திருந்தது. நீர்வை பொன்னையன் (1930.03.24 - 2020.03.26) தனது 90 வது வயதில் எம்மிடம் இருந்து விடை பெற்றுச் சென்றுள்ளார். இறுதிவரை சமூக ஊடாட்டத்துடனிருப்பதன் அடை யாளமாக நெருங்கிய தோழர் களுடன் தொடர்பாடியபடி இருந்த ஆளுமையை "இயற்கை எய்தினார்" என்றோ "காலமானார் (காலமாக ஆகினார்)" என்றோ கூறுவது பொருத்தமற்றது. மரணம் நெருங்கிய நோயிலிருத்தல் கணப்பொழுது நெருக்குவாரத்திலும் தனது சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிடுவதற்கான செயற்பாட்டில் ஈடுபட்டவாறு இருந்தவர் அவர். மாலை இதயம் இயக்கத்தை நிறுத்தவுள்ளதை நம்பியிருக்க இயலாவகையில் காலையில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் திக்குவல்லை கமால் உடன் தொலைபேசி ஊடாக உரையாடியவர் நீர்வை.

கொல்கத்தாவில் (மேற்கு வங்கம்) பட்டப்படிப்பை முடித்து நாடு திரும்பியவர் உத்தியோகங்களைத் தேடும் சராசரி வாழ்வை நாடாது நேராக கொம்யூனிஸ்ட் கட்சிக்



காரியாலயத்துக்கு சென்று தோழர் கார்த்திகேசனை சந்தித்து அரசியல் வேலைக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தவர் நீர்வை பொன்னையன். வாலிபர் சங்கத்தில் தலைமைப் பொறுப்பையும் தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தில் முழுநேர இயக்கச் செயற்பாட்டையும் ஏற்று இயங்கினார். தொழிலாளர்களை அணிதிரட்டிப் போராட்டங்களில் ஒருமுகப் படுத்திய வேளையில் விவசாயிகளை ஒருங்கிணைத்து விவசாயச் சங்கம் வாயிலாக பிரச்சினைகளை முகங்கொள்ள வழிப்படுத்துவதற்கும் உதவினார் நீர்வை. விவசாயிகள் - தொழிலாளர்கள் - மத்தியதர வர்க்க ஊழியர்கள் எனப் பலதரப்பட்ட மக்களோடு ஊடாடிப்பெற்ற வாழ்வியல் அனுபவங்களை எழுத்தாக்கம் செய்ய அவசியமுள்ளதனை உணர்ந்தபோது ஒரு எழுத்தாளராக நீர்வை பரிணாமிப்பை எட்டினார் (பெரும்பாலான எழுத்தாளர்கள் இலக்கியவாத உணர்வை முன்னுரிமை உடையதாக வரித்துக் கொண்டு இயங்கத் தொடங்கிய மறுபக்க இன்னொரு பணியாக சமூகச் செயற்பாட்டை முன்னெடுத்ததாக சொல்வதில் இருந்து வேறுபட்டு, தனது அரசியல் பணி அனுபவ நிர்ப்பந்தமே தன்னை எழுத்தாளராக மாற்றியிருந்தது என நீர்வை சொல்லி வந்துள்ளார்).

ஐம்பதாம் ஆண்டுகளின் கடைக்கூறில் அரசியல் செயற்பாட்டாளர் என்ற வாழ்நெறியை வரித்து அறுபதுகளின் தீவிர தொழிற்சங்கப் போராட்டங்களின் உலைக்களத்தில் பெற்ற அனுபவங்களை எழுத்தாக்கம் செய்து முற்போக்கு இலக்கிய முன்னோடிகளில் ஒருவராக மடைமாற்றம் பெற்றார் நீர்வை. எழுபதாம் ஆண்டுகளில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன்னெடுத்த பல காத்திரமான செயற்பாடுகளில் அவரது தீர்க்கமான அனுபவச் செழுமையும் செயற்பாட்டு வேகமும் வழி காட்டி முன்னெடுக்கும் பாத்திரத்தை வழங்கி இருந்தது. முன்னதாக அரசியல் உலைக்களத்தில் எழுத்து இணைவுபெற்று இயங்கியது போன்றே எழுபதுகளைத் தொடர்ந்து எழுத்தாளர் இயக்கச் செயல் வேகம் முனைப்புற்ற காலத்தில் அரசியல் உணர்வு இரட்டைப் பிறப்பாக தொடர்ந்து அவருடன் வந்துள்ளது.

அறுபதாம் எழுபதாம் ஆண்டுகளில் முற்போக்குவாதிகள் மக்கள் சக்தியை அணிதிரட்டிப் போராடிய அக நிலையும் புற நிலையாக சோசலிச நாடுகள் பல உருப்பெற்று மக்கள் விடுதலைக்கான பல தளங்களில் வென்றெடுக்கப்பட்ட அமைப்பாக்கங்களும் காரணமாக முதலாளித்துவ நாடுகளின் ஆட்சியாளர்கள் மக்கள் நல அரசுகளை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். பொதுக்கல்வி முறை ஏற்படுத்தப்பட்டதோடு, மருத்துவம் - சுகாதாரம் - போக்குவரத்து - வங்கி என்பவற்றை அரசு பொறுப் பேற்று தனியார் சுரண்டலுக்கான களங்களாக அவை மாறிவிடாமல் பார்த்ததனாலேயே இன்று பல்தேசக் கொம்பனிகளின் வேட்டைக்காடாக எமது நாடுகள் மாறிய உலகமயமாதல் சூழலில் மோசமாக நொடித்துப் போகாமல் எம்மைப் பாதுகாத்து நிற்கின்றன. குறிப்பாக, இன்றைய புதிய கொரோனா எனும்கொள்ளை நோயில் இன்னும் மோசமான அழிவு ஏற்பட்டு விடாமல் பாதுகாப்பதில் அப்பொதுத் துறைகளின் பங்களிப்பு இல்லையென்றால் என்ன ஆகி இருக்கும் என்பதை இன்றைய அமெரிக்க சமூகம் எதிர்நோக்கி இருக்கும் நெருக்கடியோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கண்டுகொள்ள இயலும்.

அறுபது - எழுபதாம் ஆண்டுகளில் முற்போக்கு இடதுசாரி அணி இலங்கை அரசியலின் தீர்மானகரமான சக்தியாக இருந்தது. மக்கள் விடுதலை பெற்று பொதுவுடைமைப் புத்துலகம் படைக்கப்படுவது விரைவில் சாத்தியமாகும் எனும்படியான உச்ச நிலையை இடதுசாரிகள் பெற்றிருந்தார்கள்.

அந்த உச்ச நிலையில் நின்று நிதானித்து மாறி வரும் உலகச் சூழ்நிலை மாற்றங்களைக் கவனங் கொண்டு ஏற்ற புதிய பாதைகளை வடிவமைக்கத் தவறி ஒவ்வொரு கருத்து வேறுபாட்டின் பேரால் உடைந்து சிதறிப் பல அமைப்புகளாக மாறிப் போயிருந்த அவலம் காரணமாகவே பல்தேசக் கம்பனிகள் வடிவில் முதலாளித்துவம் மீள் எழுச்சிபெற இயலுமாயிற்று.

எழுபதுகளின் நடுக்கூறில் தோழர் சண்முகதாசன் தலைமையிலான கொம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து நான் செயற்பட்டபோது அவர் தோழர்கள் கார்த்திகேசன் - வி.ஏ.கந்தசாமி ஆகியோரது கட்சி அணியில் இருந்தார். பிரதான எதிரியை விடவும் பிளவு பட்டு வேறாகியுள்ள சக தோழமை அமைப்புகளையே அதிபயங்கர எதிரியாக கணித்து செயற்பட்ட அக்கால நிலவரம் காரணமாக நீர்வை அவர்களோடு எந்த தொடர்பும் இன்றியே இயங்கி வந்தேன். புத்தாயிரமாம் ஆண்டின் பின்னரே அவர் என்னோடு முதன்முதலில் உரையாட முன்வந்தார்.

அப்போது விபவியில் அவர் செயற்பட்டார். டானியல் நினைவுக் கூட்டம் ஒன்றில் என்னை உரையாற்றக் கேட்டார். எனது கட்சியும் உரையாற்றுவதை அனுமதித்திருந்தது. டானியல் பற்றிய கட்டுரை, நான்கு முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் (டானியல், என்.கே.ரகுநாதன், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன்) முன்னிறுத்தப்பட்ட “முற்போக்கு இலக்கிய எழுச்சி” என்ற தனி நூல், கைலாசபதி பற்றிய நூல் என்பவற்றை நான் எழுதி அவரது முற்போக்கு எழுத்தாளர் மன்றம் வாயிலாக வெளியிடுவதற்கு களம் அமைத்த செயற்பாடுகள் வாயிலாக அவருடனான ஊடாட்டம் எனக்கு அதிகரித்து வந்தது. சில வருடங்கள் நீடித்த அந்த உறவில் விமரிசனம் - சுயவிமரிசனம் சார்ந்து எங்களிடையே ஆரோக்கியமான பகிர்வுகள் சாத்தியப்படலாயிற்று.

வேறும்பல கோட்பாட்டு - நடைமுறைப் பிரச்சினைகளால் கட்சிசார நபராக நான் இயங்க நேர்ந்த சந்தர்ப்பத்திலும் தனது அமைப்பில் என்னை உள்ளீர்க்க அவர் முயன்றாரில்லை; மட்டுமல்லாமல், வேறுபட்டு பொதுவான வெகுஜன அமைப்பொன்றை நாங்கள் உருவாக்க முனைந்தபோது அதிலே செயற்பட முன் வந்தார். அவரவர் தமது அமைப்புகளில் இயங்கியபடி இணைந்து செயற்படும் பொது அமைப்பாகவே எங்களுடைய அமைப்பைக் கட்டமைப்பதற்கு அவரது வழிகாட்டல் பேருதவியாக இருந்தது. அதன் சஞ்சிகை “புதிய தளம்” அவரையும் ஆசிரியர் குழுவில் இணைத்துக்கொண்டு வெளிவந்தது.

“புதிய தளம்” முதல் இதழ் அவரது தலைமையில் கொழும்பில் வெளியிடப்பட்டது. இரண்டாவது இதழும் பெரும் வரவேற்புடன் வெளிவர இயலுமாயிற்று. பலரும் அந்த இதழையும் அத்தகைய பொதுவான வெகு

ஜன அமைப்பொன்றையும் வரவேற்ற ஆரோக்கியமான சூழல் வளர்ந்து வந்தது. நீர்வையும் மிக மகிழ்வோடு கலந்துகொண்டு அவற்றின் வளர்ச்சியைத் துரிதப் படுத்த உழைத்தார். புதிய வேலைப்பாணி ஒன்றை அவர் விரும்பிய அளவில் அவரது பழைய தோழர்கள் எல்லோராலும் உடன்பட இயலவில்லை. பழைய "விடாப்பிடி உறுதியில்" இருந்து பின்வாங்கிப்போகிறார் எனக் கண்டிக்கப்பட்டார். பிரதானமாக இரண்டாவது இதழில் வெளிவந்த தோழர் எம்.ஏ.சி.இக்பால் அவர்களது பேட்டி சார்ந்த விவாதம் இத்தகைய சந்தேகங்களை அவர் மீதும் ஏற்படுத்தி விட்டிருந்தது.

பேட்டியில் சண் தலைமையிலான கட்சி பிளவுபட்டு போனமைக்கு கட்சி அமைப்பில் நிலவிய தவறு பற்றி எந்த சுயவிமரிசன நோக்குமின்றி விலகியோரது தவறு (துரோகம்) மட்டுமே காரணம் என்று இக்பால் கூறியிருந்தார். அந்த துரோகப் பட்டியலில் நீர்வை பெரிதும் மதிக்கும் தோழர்கள் கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி ஆகியோர் பெயர் களுடன் மணியம் தோழரின் பெயரும் இடம்பெற்று இருந்தன. முன்னதாக ஆசிரியர் குழுவில் அந்தப் பெயர்ப்பட்டியலை நீக்கும்படி நீர்வை வலியுறுத்தினார். பேட்டியாளர்களது கருத்தை சுதந்திரமாக அனுமதிப்போம், அடுத்தடுத்த இதழ்களில் உண்மை வரலாற்றை வெளியிடுவோம் என நாங்கள் கேட்டுக் கொண்டதால் அவர் சம்மதித்தாராயினும் அவருக்கு உடன்பாடற்ற விடயமாக அது இருந்தது. அடுத்த இதழில் இந்த இடைவெளியை நிவர்த்திக்கும் பேட்டி - கட்டுரைகளை வெளியிட முயன்றும் இயலாமல் போயிற்று. இதழ் பயணமும் தொடரவில்லை; அமைப்பின் செயற்பாட்டையும் நிறுத்த நேர்ந்தது. இங்கு வலியுறுத்த வேண்டி இருப்பது, புதிய பாணி வேலை முறையொன்றை நீர்வை எவ்வளவு ஆர்வத்தோடு நாடி நின்றார் என்பதுதான்.

இந்தப் புதியபாணி வேலைமுறை என்பது தனது இறுதிக் காலங்களில் தோழர் கே.ஏ.சுப்பிர மணியம் வலியுறுத்திய ஒன்று. கட்சி தொடர்ந்து பல பிளவுகளைச் சந்தித்து ஏற்பட்டுள்ள வரலாற்றுத் தவறினால் தனி அமைப்பொன்றே சரியானது என்று வீம்புக்கு நில்லாது பரந்துபட்ட வெகுஜனத் தளம் ஒன்றை கட்டியெழுப்புவதன் வாயிலாக கட்சி அமைப் பும் புத்தாக்கம் பெற வேண்டும் என்பது மணியத்தார் கருத்தாக இருந்தது. இதுபற்றி நிறையவே நீர்வைக்கு கூறியிருந்தேன். அவரும் மணியம் தோழர்மீது பழைய மதிப்புணர்வை வெளிப்படுத்தினார். ஆயினும், அவரது "நினைவலைகள்" நூல் வந்தபோது தோழர் மணியம் பற்றி மிகத்தவறான பதிவுகளை வெளியிட்டார். அந்த நூலின் சரவை நோக்கை (புரூவ் ரீடிங்) நான் செய்திருந்தேன். நான் கூறிய பல விடயங்களைக் கவனங்கொள்ளாமல் எழுதியுள்ளார் என்ற ஆதங்கத்தில் எழுத்துப் பிழைகளைமட்டும் திருத்திக் கொடுத்தேன். நூல்வந்த பின்னர் கடும் விமரிசனங்கள் எழுந்தன. நான் மெய்ப்புத் திருத்தியபோதாவது (அதற்கான நன்றி அறிவிப்பு நூலில் இடம்பெற்று இருந்தது) இந்த தவறைச் சுட்டிக்காட்ட வில்லையா என்ற கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. அது பற்றி எனது மனவருத்தத்தை வெளியிடும்போது நீர்வையும் அதையே கூறினார், நீங்கள் சொல்லியிருந்தால் மாற்றியிருப்பேன் என்று- முன்னரே எழுதி வந்த காரணத்தால் இடையில் நீங்கள் வலியுறுத்தியவை கொண்டு மாற்றத்தை செய்யாது விட்டேன் என்றார். என்னளவில் அவ்வளவு சொல்லியும் மாற்றவில்லையே என்று கருதி வாழாதிருந்த எனது தவறும் மன்னிக்க இயலாததாயினும் இதற்காக அவர்மீது கடும் கண்டன விமரிசனத்தை நேரில் நான் முன்வைத்தேன். அந்த விடயத்தில் மிக கடுமையாகவே நான் நடந்திருந்தேன். என்மீதான பலமுனைத் தாக்கங்களின் வேகத்தை அவர்மீதான பாய்ச்சலாக நான் ஆக்கிக் கொண்டேன்; உறவு முறிந்தால் நல்லதுதான் என்ற அளவுக்கு! அவை யனைத்தையும் மிகப் பொறுமையாக உள்வாங்கினார் - அடுத்த பதிப்பொன்றில் திருத்திக் கொள்வேன் என்றார். அத்தகைய புதிய பதிப்பு வராத போதிலும் நடைமுறை யில் என்னுடனான உறவை வலுப்படுத்தியதன் வாயிலாக பழைய தோழமைகள் சிதறி ஏற்படுத்திய வரலாற்றுத் தவறைத் திருத்த வேண்டிய அவசியத்தை தனது சக தோழர்களுக்கு உணர்த்தினார்.

சென்ற வருட இறுதியில் கடும் சுகவீனம் காரணமாக மகள் வீட்டில் தங்கியிருந்த போது தன்னை வந்து சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார். வெள்ள வத்தையில் அவரது வீட்டுக்கு போய்ப் பார்க்கலாம் என்று எண்ணியிருந்த நிலையில் உடனடியாக கொள்ளுப்பிட்டி யில் உள்ள மகள் வீட்டில் சென்று பேசினேன் - அங்கு எல்லோரும் செல்ல இயலாது என்பதால் மகளுடைய தொலைபேசி இலக்கத்தைக் கூட எல்லோருக்கும் அவர் கொடுப்பதில்லை. முன்னதாகவே எனக்கு அதனை அவர் தந்திருந்தார். கோட்பாட்டு மோதல்களுக்கு அப்பால் பொது உடன்பாட்டில் இருந்த இலட்சிய அக்கறை காரணமாக தனது சகபாடியாக என்னை அவர் அங்கீகரித்திருந்தார் எனும் இந்த அம்சம் நெகிழ்வைத் தருவது. அவரையும் என்னையும் கோட்பாடு கடந்து உறவாடினோம் எனக் கண்டிக்கும் அவரது தோழர்களும் எனது சக பாடிகளும் இதன் ஆழகலங்களை உணர்வார் களா? பொதுமைப்புத்துலகம் காண்பதே எம்மனை வரதும் ஒரே இலக்கென்றால் சிற்சில கோட்பாட்டுப் பேதங்களுக்காக முட்டி மோதுவது அந்த இலட்சியத் துக்கே பெருங்கேடு விளைவிக்கிற செயல் என விளங்கிக் கொள்ள வேண்டாமா?

இறுதிக் காலங்களில் ஓர் தந்தையைப் போல அவரை நேசிக்கவும் கைபிடித்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் அளவிற்கு அவருடன் நெருங்கியிருந்தேன். தொலைவில் இருக்கும் எனக்கு அவர் நினைவுகள் அழுத்துகிறது. எவ்வாறாயினும், தோழர் நீர்வைப் பொன்னையன் அவர்களே - நீங்கள் இளமைத் துடிப்புடன் செயற்பட்டுக் காண விழைந்த அந்தப் புத்துலகை - இறுதித் தளர்வுற்ற உடல்நிலைக் காலங்களில் அடுத்த தலை முறையினரான எங்களிடம் புதிய வேலைப் பாணியாக மாற்றும் கைங்கரியத்துக்குரிய செயற்பாட்டு அம்சங்களை தொடர்ந்து செயற்பட்டு வளர்த்தெடுப்போம் எனும் உறுதிமொழியை புரட்சிகர அஞ்சலியுரையாக முன்வைக்கிறேன்!

"சூழ்ந்திடும் இருள் அகல்வதும் உறுதி!
சுடர்விடும் விண்மீன் வருவது உறுதி!"

# நானும் அவனும்

சாத்திரி

இரவு பன்னிரண்டை தாண்டிக் கொண்டிருந்தது. வெளியே இடி மின்னலோடு பெரு மழை. "நீ சாப்பிட்டால் சாப்பிடு இல்லாட்டி பட்டினியா படு." ,என்று சொல்லிவிட்டு உணவை ஒரு தட்டில் போட்டு மைக்கிரோவானில் வைத்து விட்டு மனைவி படுக்கைக்கு போய்விட்டார். இன்னொரு கிளாஸ் குடித்து விட்டு சாப்பிடலாமென நினைத்து படுக்கையறை கதவு சாத்தும் சத்தம் கேட்டதும். மெதுவாக போத்தலை திறந்து கொஞ்சம் விஸ்கியை கிளாசில் ஊற்றி விட்டு காஸ் வெளியேறும் சத்தம் கேட்காமல் சோடாவை திறப்பதெப்படி என யோசித்துக் கொண்டிருக்கும் போதே இடி இடித்த சத்தத்தில் சட்டென்று சோடாவை திறந்து கிளாசில் ஊற்றி ஒரு இழுவை இழுத்து விட்டு கணணியை திறந்தேன். ஏனென்றால் இப்பிடியான சந்தர்ப்பங்களில் தான் எனக்கு கற்பனை தானாக வந்து கொட்டி ஏதாவது எழுதத் தோன்றும்.

அபோதான் கண்களை கூச வைக்கும் ஒரு பெரு மின்னல். சாத்தியிருந்த யன்னலையும் ஊடறுத்து அறை முழுவதையும் பகலாக்கிச் செல்ல மழையின் கோரம் அதிகரித்திருந்தது. அடுப்படியில் திறந்திருந்த கதவு காற்றுக்கு அடிக்கும் சத்தம் கேட்டு அதை சாத்தி விட்டு வரலாமென எழுந்து போயிருந்தேன். ஏ்னெனில் அது பின்னால் உள்ள சிறிய தோட்டத்துக்கு செல்லும் பாதை. மழையின் கோரத்தால் எலியோ பூச்சிகளோ அதுவழியாக உள்ளே வந்துவிடும். கதவை சாத்திக் கொண்டிருக்கும்போது இதுவரை நான் கேட்டிராத பெரும் இடியோசை. சின்ன வயதில் நான் சொன்ன அருச்சுனா (ஆ)பத்து நினைவுக்கு வருமளவு சத்தம். அதே நேரம் மின்சாரமும் போய்விட, மீண்டுமொரு மின்னல். அப்போதான் அந்த உருவத்தை தோட்டத்தில் பார் த்தேன் .

கொஞ்சம் திகைத்துப் போயிருந்தாலும். கடவுளையோ பேயையோ நம்புகிறவனில்லை என்பதால் யாரோ கள்ளன் தான் வந்திருக்கிறான் என நினைத்து இருட்டில் தட்டித் தடவி வந்து என் போனை எடுத்து அதிலிருந்த டோச் வெளிச்சத்தை அடித்தபடி கள்ளன் வந்தால் தாக்குவதுக்காக கதவுக்கு பின்னாலேயே மறைத்து வைத்திருந்த கொட்டனை இறுக்கி பிடித்தபடி டோச் வெளிச்சத்தில் தோட்டத்தை பார்த்தேன். கொட்டும் மழையில் நெடிய கறுத்த ஆடைகளேதுமற்ற அம்மணமான அந்த உருவம் நின்றிருந்தது. அண்ணாந்து பார்த்தேன். மழைத்துளிகள் என் கண்ணில் வீழ்த்து மங்கலாக தெரிந்த அந்த உருவத்தை எங்கேயோ பார்த்த மாதிரியிருந்தது .

"என்னடா நலமா?" என்று என்னைப் பார்த்து அது கேட்ட அதே நேரம் அதன் பின்னாலிருந்து வெளிவந்த சிவந்த கண்களையுடைய பெரிய கறுத்த நாயொன்று என் மீது பாய்ந்து அதன் கால்களை என் மார்பில் வைத்து முகத்தை நக்க தொடங்க, அது வரை என் பின்னாலேயே பதுங்கியிருந்த என் பூனை மீனு பயத்தில் மழையென்றும் பாராமல் தோட்டத்தில் பாய்ந்து பின்மதிலையும் தாண்டி ஓடி விட்டிருந்தது.



இப்போ எனக்கு நினைவுக்கு வந்து விட்டிருந்தது.

"ஓ நீயா...? எத்தனை வருடங்களாகி விட்டது. என்ன இப்பிடி திடீரெண்டு? சரி உள்ளே வா" என்றதும்,

அவன் வாசலால் குனிந்து உள்ளே வர நாயும் பின்னாலேயே உள்ளே வந்தது. அதுக்கிடையில் நான் ஓடிப்போய் படுக்கையறை கதவு சாத்தியிருக்கிறதா என்று சரி பார்த்து விட்டு வந்தேன். நனைந்து போயிருப்பாய் என்றபடி துவாயை எடுத்து நீட்டிய போது அவன் உடல் காய்ந்து விட்டிருந்தது. நாய் மட்டும் உடலை ஒரு உதறு உதறி விட்டு படுத்துக் கொண்டது. சோபாவில் சரிந்திருந்தவனின் இடுப்பில் துவாயை போட்டு விட்டு,

"எத்தனை வருசமாச்சு? எப்பிடி என்னை தேடி வந்தாய்?" என்றேன்.

"இத்தனை வருசமாச்சு என்னை நீ தேடி வந்தாயா?" முறைத்தான்.

"எனக்கு ஊருக்கு வர முடியாது. ஆனா உன்னைப்பற்றி அடிக்கடி அம்மாவிடம் விசாரிப்பேன்.

"என்ன சொல்லுவா...?"

"புளிய மரத்தடியில வெறும் சூலமா ஒரு கொட்டிலுக்கு கீழ இருந்த உனக்கு இப்ப வசதி வாய்ப்பு எல்லாம் வந்திட்டுதாம். கோயில் கட்டி கும்பாபிசேகம் செய்து ஐயர் வந்து பூசை செய்யுறா ராம்" எண்டு சொன்னா.

"வேற என்ன சொன்னவா?"

"சின்னதா ஒரு தேரும் செய்து கொண்டிருக்கினமாம்?"

"அதுவும் உண்மை தான். அதை விட வேற ஒண்டும் சொல்லேல்லையோ?

"இல்லையே...?"

"நான் குடியிருந்த புளிய மரத்தையே தறிச்சுப் போட்டாங்கள்."

"அட நாசமறுப்பு... என்னத்துக்கு தறிச்சவங்கள்?"

"எனக்கு கோயில் கட்ட தான்."

"அந்தப்பெரிய மரத்தை எப்பிடி தறிச்சவங்கள்?"

"மிசின் வைச்சு அரிஞ்சு தள்ளிட்டான்கள்."

"அட கடவுளே ...."

"ஓம்... கூப்பிட்டனியே?"

"இல்ல. ஓம்... நீ கடவுள் எண்டதை ஒரு செக்கன் மறந்து போனன்.மிச்சத்தை சொல்லு..."

"நான் செவிடு எண்டு நினைச்சு ஒவ்வொரு நாளும் சவுண்ட் பொக்ஸ் வைச்சு பாட்டு போடுறாங் கள். விளங்காத சமஸ்கிருதத்தில பூசை வேறை..."

"ஏன் உனக்கு சமஸ்கிருதம் விளங்காதோ...?"

"அடேய்... நான் தமிழ்க்கடவுளடா. எனக் கெதுக்கு சில்லெடுத்த சமஸ்கிருதம்? அதுவும் அவன் எனக்கு கணபதி கோமத்தை சொல்லிக் கொண்டு, இடைக்கிடை வைரவராய நமகா எண்டு அடிச்சு விட, விசர் சனமும் அது வைரவர் மந்திரமெண்டு நினைச்சு கும்புடுதுகள். அதைவிட மோசம் இப்போவெல்லாம் பச்சையரிசி பொங்கல் அவல் மோதகம். எனக்கே சுகர் வந்திடும் போலவிருக்கு. வடை எப்போவாவது ஒருதரம் கண்ணுல காட்டுறாங்கள். அதையும் படைசுப்போட்டு தொட்டால் சுடுவேன் எண்டு ஐயர் தீபத்தை முகத்துக்கு முன்னாலேயே காட்டுறான்."

சரி ...உலகம் முழுக்க சுத்தி நாய் களைச்சுப் போய் விட்டுது. அதுக்கு கொஞ்சம் தண்ணி வைக்கிறாயா?என்றதும் நான் ஓடிப்போய் பூனையின் கிண்ணத்தை கழுவி தண்ணீரைஅதில் வைத்ததும் நாய் லபக் லபக்கென்று குடித்துக்கொண்டிருக்கும்போதே வேறொரு லபக் லபக் சத்தம் கேட்டது திரும்பிப் பார்த்தேன். மேசையிலிருந்த விஸ்க்கியை போத்தலோடு எடுத்து அண்ணாந்து விழுங்கிக்கொண்டிருந்தான்.

"வைரவா நீயா...?" என்றதும் பெரிய மீசையை வருடி விட்டு,"என்ன நீயா நானா" எண்டு. உன் பாட்டன் எனக்கு தினமும் சிரட்டையில் கள்ளும் நண்டு மீன் பொரியல் என படைத்து விட்டுத்தான் அவனே சாப்பிடுவான். விசேட நாளில ஆட்டுக்கறியும் கிடைக்கும். ம்... அதெல்லாம் ஒரு காலம்." பெருமூச் சொன்றை விட்டான்.

"ஒரு உடுப்பு கூட போடாமல் இவ்வளவு தூரம் வந்திருக்கிறியே வெட்கமாயில்ல?"

இல்ல...ஏனென்டால் பட்டுத் துணியில எனக்கு கோவணம் வேற கட்டி விடுறாங்கள். அதுதான் எனக்கு வெட்கமாயிருக்கு.

குளிரேல்லையோ எண்டு கேட்டாலும் இடக்கு முடக்கா ஏதும் பதில்தான்வரும். சரி, இவ்வளவு தூரம் என்னை எதுக்கு தேடி வந்தனி?"

"எனக்கு நீயொரு கோயில் கட்டவேணும்."

நான் அதிர்ந்துபோய்,

"வைரவா என்ன விளையாடுறியா?"

நானிருக்கிறதே வாடகை வீடு. கனடாப்பக்கம் போய்ப் பார். அங்கைதான் ஐயப்பன் தொடக்கம் அம்மா பகவான்னெண்டு ஊர் பேர் தெரியாதவனுக்கெல்லாம் கோயில் கட்டி வைச்சிருக்கிறான்கள். கட்டாயம் உனக்குமொரு கோயில் யாராவது கட்டியிருப்பான்கள்."

"இப்பதானே சொன்னான் உலகம் முழுக்க சுத்தி வாறனெண்டு. அவுஸ்திரேலியா தொடக்கம் கனடா வரை ஒரு வைரவர் கோயில் கூட இல்லை."

"என்னட்டை அவளவு வசதியில்லையே வைரவா?"

நீ நினைக்கிற மாதிரி பெரிய கோயில் எல்லாம் வேண்டாம். எதோ ஒரு மரத்துக்கு கீழை ஒரு சூலம் மட்டும் போதும். எந்த சத்தம் சந்தடியுமில்லாமல் இருந் தாலே போதும். நீ விரும்பினா விஸ்கியோ வோட்காவோ அப்பப்போ ஒரு வடை மாலை அது போதும். மொத்தத் தில என்னை நிம்மதியா இருக்க விட்டாலே போதும்."

"உனக்கொரு ஐடியா சொல்லவா?"

"ம் சொல்லு..."

"எதுக்கு கோயில் குளமெண்டு அலையாமல், பேசாமல் பேஸ் புக்கில ஒரு அக்கவுண்ட் திறந்து அதிலையே குடியிருக்லாமே...?"

வைரவர் விழுந்து விழுந்து சிரிக்க நாய் வேற "அவ்..." என்று உளையிட்டது.

"எதுக்கு இப்ப சிரிக்கிறாய்?"

"அடேய் நான் பேஸ் புக்கில் குடியிருக்க தொடங்கினால் ஒவ்வொரு நாளும் ஒரு செல்பியாவது போடுவேன். அப்போ உங்கள் பிழைப்பு என்னாவது?"

"அதுவும் உண்மைதான் வைரவா உன் உயரத்துக்கும் கலருக்கும்..அதுக்கும் எல்லா லைக்கும் உனக்குத்தான் விழும். அதை விட உலகத்தில் உள்ள எல்லா வடையும் மாலையா வந்து உன் கழுத்தில தான் விழும்."

வைரவர் மீண்டும் சிரித்தார்.

"சரி வைரவா உனக்கு வீட்டு தோட்டத்திலேயே நான் கோயில். ச்சே... ஒரு சூலம் நடுகிறேன். கவலைப்படாதே." என்றதும் எழும்பி மீண்டும் விஸ்கி போத்தலை வாயில் வைத்து உறிஞ்சி விட்டு வெளியே போக, நாயும் பின்னல் ஓடவே மீண்டும் ஒரு பெரும் மின்னல் தோன்றி மறைய அதன் வெளிச்சத்தில் கண்ணை மூடி திறந்து பார்த்தேன். வைரவரையும் அவரின் வாகனத்தையும் காணவில்லை.

வைரவ ராசாவே உன் அற்புதமே அற்புதம். உன் நாமத்தின் பெயராலே. உன் வார்த்தையின் பெயராலே . சாத்தான்கள் விலகியோடட்டும். என்று வாய் முணு முணுக்க தொடங்க,

வைரவர் வீட்டுக்கு வந்திட்டுப்போனதை இப்பவே உடனே ஓடிப்போய் மனிசியை தட்டியெழுப்பி சொல்லமா எண்டு யோசித்தாலும்,

"ச்சே... சும்மா தண்ணியை போட்டிட்டு புலம்பாதை..." எண்டு எட்டி உதை விழும். நாளைக்கு பக்குவமா எடுத்துச் சொல்லலாமெண்டு என்று நினைத்து பேசாமல் படுத்து விட்டேன்.

ஆனாலும் நித்திரை வரவில்லை. வைரவருக்கு சூலம் நடுறதெண்டால் அவருக்கு பிடிச்சது பொதுவா புளிய மரம்தான். இந்த ஊரில, ஏன் இந்த நாட்டிலையே புளிய மரமில்லை. வீட்டு தோட்டத்தில நிக்கிறது ஒரு வாழை மரம். அடுத்தது தோடை மரம். வாழை மரத்துக்கு கீழை சூலத்தை நட முடியாது. ஏனென்டால் குளிர் காலத்தில அது பட்டுப்போகும். அப்பிடி நிண்டு பிடிச்சாலும் குலை போட்டதும் வாழையை வெட்டும் போது வைரவருக்கும் வெட்டு விழும். அதால தோடை மரத்துக்கு கீழயே நடலாம். அதுவும் புளித்தோடை தான். புளிக்கு புளி வைரவருக்கும் லொக்கேசன் செட்டாகும். சூலத்துக்கும் சிரமப்பட தேவையில்லை. கனகாலமா கார் கராச்சுக்குள்ள நீள இரும்புக் கம்பியொண்டு கிடக்கு. அதை இரண்டா வெட்டி ஒண்டை வளைச்சு மற்றதை நிமித்தி நடுவிலை ஒட்டி விட்டா போதும். வைரவர் ரெடி என்று நினைக்கும் போதே அந்த மகிழ்ச்சியில் நித்திரையாகிப் போனேன்.

காலை கண்விழித்தபோது மனிசி குளியலறையில் பல் தீட்டிக்கொண்டிருந்த நேரம் வைரவர் வந்ததை சொல்லலாமா என்று யோசித்தேன். வேண்டாம் எல்லா கடவுளையும் கிண்டலடிக்கிறதா எனக்கு மேல ஒரு குற்றச்சாட்டு இருக்கு. அதால சூலத்தை தோடை மரத் துக்கு கீழ நட்டு. வடை மாலை போடும்வரை சஸ்பென் சாக வைத்து விட்டு சொல்லாமென நினைத்து. அவரிடம் போய்,

"என்னப்பா எனக்கு கொஞ்ச நாளாவே வடை சாப்பிட வேணும் போலவிருக்கு." எண்டதும் வாயிலிருந்த பிரஸ்சை எடுத்து விட்டு தொட்டியில் துப்பியவர்,

"உனக்கு எப்ப பாத்தாலும் இதே நினைப்பு, அதுவும் காலங் காத்தாலை." என்று அக்கிளில் ஒரு குத்து விழுந்தது.

மீண்டும் பல்லு தீட்ட தொடங்கியவரிடம்,

"இல்லை உண்மையாவே உளுந்து வடை சாப்பிட வேணும்போலவிருக்கு வேலை முடிஞ்சு வந்ததும் பத்து வடையாவது சுட்டு வைக்கேலுமோ?" என்றதும், மீண்டும் பிரஸ்ஸை வாயிலிருந்து எடுத்து தொட்டியில் துப்பியதுமே குத்து விழலாமென நினைத்து சட்டென்று இரண்டடி பாய்ந்து நின்று கொண்டேன்.

"சரி சரி போ..." என்றார். தோட்டத்தில் வந்து நின்று தோடை மரத்துக்கடியில் எந்த பக்கமாக வைரவரை நடலாமென யோசித்தாலும், நம்ம வைரவருக்குத்தான் வாஸ்து ஆகமம் எல்லாம் கிடையாதே எதோ ஒரு பக்கம் ஊன்றி விட்டா போதும். மரத்தடியை கொஞ்சம் சுத்தம் செய்து விட்டு வேலைக்கு கிளம்பி விட்டிருந்தேன். மனம் முழுதும் வைரவர் நினைப்பிலேயே நிரம்பியிருந்தது. போகும் வழியில் இருந்த தேவாலயத்தின் உச்சியில் இருந்த சிலுவை கூட சூலம் போலவே தெரிந்தது. பிதா, சுதன், பரிசுத்த வைரவரின் பெயராலே ஆமென் என்று சூலம் போட்டுக் கொண்டேன்.

வேலை முடிந்து வீடு வந்ததுமே வடை வாசம் மூக்கை துளைத்தது. வண்டியை விட்டிறங்கி கராச்சுக்குள் புகுந்து இரும்பை தேடத் தொடங்கியிருந்தேன். காணவில்லை. தேடிக்கொண்டிருக்கும்போதே அங்கு வந்த மனைவி,

"என்ன வேலையால வந்ததும் கராச்சுக்குள்ள நோண்டிக்கொண்டிருக்கிறியள்?"

"இங்கின ஒரு இரும்புக்கம்பி கிடந்தது. அதை தான் தேடுறன்..."

"அதுவா...? கன காலமா கிடந்தது கறள் பிடிச்சுப்போய் கிடக்கெண்டு பழைய சமான் லொறி வரேக்குள்ள எடுத்து போட்டிடேன்."

எனக்கு நேற்றிரவு விழுந்த இடிச்சத்தம் இப்போ காதில் கேட்டது.

"வைரவா ஏனிந்த சோதனை? இருந்த ஒரேயொரு இரும்புக்கம்பியையும் மனிசி தூக்கி எறிஞ்சிட்டுது. நான் என்ன செய்வேன்? புதுசா கம்பி வாங்கி உனக்கு சூலம் செய்து கோயில் வைக்கிற அளவுக்கு என்னட்ட வசதியில்லை என்னை மன்னிச்சுக் கொள்." என்று வேண்டி விட்டு சுட்ட வடை வீணாகிப் போக கூடாது தானே என்பதுக்காக அதை தூக்கிக் கொண்டு போய் தோட்டத்தில் உள்ள மேசையில் வைத்து விட்டு சாப்பிட கதிரையில் அமர்ந்ததும், எங்கேயோ இருந்த தேனீ ஒன்று விர் என்று வடையில் வந்து குந்த,

"கன காலத்துக்கு பிறகு நானே இப்பதான் வடை சாப்பிட போறேன்.ச்சே...போ." என்று நான் கையால் விசுக்கி கலைக்க, வேகமாகமேலே எழும்பி ஒரு சுற்று சுற்றி விட்டு என்னை நோக்கி வந்தது.

ஐயோ...சாமி கண்ணை குத்திட்டுது என்று கண்களை பொத்தியபடி கத்தினேன்.

# இது உன் உலகம்

இளைஞனே இது உன் உலகம்...!
இயற்கையும் இனிமையும் உனக்காக
இருந்தும் ஏன் வாழ்க்கையை
மொழியற்ற பாஷையாக மாற்ற மௌனமாய் அழுகிறாய்...!

சிந்தி உனக்காக கடமையும்
உனக்கான பொறுப்புகளும் காத்து கிடக்கிறது
உன் இளைய தோள்களில்
குப்பைத் தொட்டி, சுமைகளை இறக்கி வீசு

பார்... பார்...! "பார்" எல்லாம் முடைநாற்றம் வீசுகிறது
எதனால் இந்த அசிங்கம்
மனிதத் தோலைப் போத்திய விலங்குகள் எத்தனை
மனிதத்தை விற்று விலங்கியல் வாழ்கிறது.

கலாசாரம் எரித்து கண்டதே வாழ்க்கை...!
கொண்டதே கோலம்...!
காமம் ஒழுக்கத்தினை சாப்பிட்டு ஏப்பமிடுகிறது
ஆதலாற்தான் பெண் உடல்கள் இம்சைப்படுகிறது

முதியோர்கள் உறவற்ற அநாதைகள் முதியோர் இல்லத்தில்
குழந்தைகளை கூட பாலியல் நோய் தாக்குகிறது
பௌத்தறிவு தொலைந்து பகட்டு வாழ்வு விலை போகிறது
சேற்றுத் தவளைகளாய் மனித வாழ்வு அர்த்தப்படுகிறது.

போதையால் போதம் இழந்த மனித உயிர்கள் எத்தனை
தொழில்நுட்ப வளர்ச்சியினால் தொலைந்து போனது
மனிதன் தான்

இளைஞனே புரிந்து கொண்டாயா?

நிறுத்து உலகைக் காக்கும் கடமை உனக்கே உரியது

முகமூடிகளை கழட்டி வீசு
உலகத்தை புதுப்பி
போதையில் இருந்து காப்பாற்று
காமத்தினை கழற்றி எறி
உன் உதிரத்தில்
அன்பு ஆர்வம் அறம் ஒழுக்கம்
என்பவற்றை எழுதி வை
நேர்மை என்ற வழியில்
உன் கலாசாரத்தால் சுவாசி
கல்வி சிறகு கொண்டு
தேசம் எங்கும் பற...!
உன் உதயம் உண் கிழக்கு
உன்னால் வடிவமைத்து கொள்...!
வாழ்வு உனக்கே!
இப்பூமியும்...!!!



■ மீரா சிவகாமி

# குமரன் ஆசானின் கவிதைகள் ஓர் அறிமுகம்

■ சிவராசா ஓசாநிதி



மலையாள நவீன கவிதையின் மும்மூர்த்திகளில் ஒருவராகப் போற்றப்படும் குமரன் ஆசான் கேரளத்தில் காயிக்கரை எனும் ஊரில் ஈழவ சாதியில் 1873ம் ஆண்டு 4ம் மாதம் 12ம் திகதி நாராயணுக்கும், காளியம்மைக்கும் மகனாகப் பிறந்தார். இவர் தனது ஏழாவது வயதில் பாடசாலைக் கல்வியைத் தொடங்கி சமஸ்கிருதப் பாடங்களைக் கற்றார். பின்னர் வேறொரு பாடசாலையில் கல்வி பயின்று ஆங்கிலம் மற்றும் வடமொழிகளில் தேர்ச்சி பெற்றார். இவ்வாறு தமிழ், சமஸ்கிருதம், வடமொழி, ஆங்கிலம், மலையாளம் என்னும் மொழிகளில் தேர்ச்சி பெற்றார். இதனால் இளம் வயதிலேயே கவி புனையும் வல்லமை பெற்றிருந்ததால் "பாலகவி" என அழைக்கப்பட்டார். விஞ்ஞான லந்தாயி என்ற பாடசாலையில் கல்வி கற்கும் போது "வள்ளி விவாகம்" என்ற கவிதையையும், "உஷாகல்யாணம்" என்ற செய்யுள் நாடகத்தையும் எழுதியுள்ளார். 1904இல் "விவேகோதயம்" என்ற பத்திரிகையில் இணைந்து சமூக ஒற்றுமைக்கான முயற்சியையும் இலக்கியப் பணிகளையும் மேற்கொண்டார்.

குமரன் ஆசான் மனித வாழ்க்கையின் நிலையாமை பற்றிய தத்துவங்கள், சாதி ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழித்தல், நாட்டின் விடுதலை, காதல், தொடர்பான கவிதைகளை இயற்றியுள்ளார். அத்தோடு இவருடைய கவிதைகளில் நவீன வடிவில் கவிதைகளைப் படைத்திருப்பினும் பழைய மரபை கைவிடாத தன்மை, வர்ணனைகள், உரையாடல் பாங்கு, நாடகப் பண்பு, உணர்ச்சி வெளிப்பாடுகள், உயிர்த்துடிப்பான பாத்திரங்கள், கருத்தாழம் என்பவற்றையும் காணக்கூடியதாக உள்ளன.

குமரன் ஆசான் ஒரு வாடிய பூவை உவமையாக வைத்து வாழ்க்கையின் அநித்தியத்தை "வீணபூ"(1908) என்ற கவிதையினூடாக எடுத்துக் காட்டியுள்ளார். தரையில் வதங்கிக் கிடக்கும் ஓர் உதிர்ந்த மலரின் தன்மையைக் கொண்டு மனித வாழ்க்கையின் தற்காலிகமான நிலைமை பற்றிய தத்துவங்களை ஒவ்வொன்றாக தாவர வர்க்கத்தின் உவமையைக் கையாண்டு வெளிப்படுத்தியுள்ளார். இக்கவிதையில் பூவை ஒரு ராணியாக உவமித்து பின்னர் ஒரு பெண்ணாக உவமிக்கின்றார். இக்கவிதை "ஆ" என்று தொடங்கி "கஷ்டம்" என்று முடிவடைவதனால் இவை இரண்டும் பாட்டின் உள்ளடக்கம் துன்பம் என்பதை சுட்டி நிற்கின்றது. இரக்கம், எளிமையால் நலிந்து வாடுவது ஆகிய இரண்டு தொனிப்பொருளில் இக்கவிதை அமைந்துள்ளது. இதனை பின்வரும் கவிதை வரிகள் வெளிப்படுத்தியுள்ளன.

"பாவம்! மலரே. உன்னையும் தீண்டினானே
கருணையற்ற விதி தன் கொடுங் கையினால்
காசே கடவுள் எனும் வேடனும் கண்டோ
கழுகென்னும் கிளியென்னும் பாகுபாடு"

இக் கவிதை புதிய உருவமும் வண்ணமும் கொண்டுள்ள

தோடு மலையாள இலக்கியத்தில் நிகழ்ந்த ஒரு பெரும் புரட்சி எனலாம். வடிவமைதியில் பாவத்தில் இதுவரை வந்த கவிதைபோலல்லாது புதுப்பாணியில் அமைந்தது. மேல்நாட்டுப் பாணியில் கவிஞனின் மன நிலையை பிரதிபலிக்கும் சிறுகவிதைகள் என்ற வரிசையில் இக்கவிதையே முதன்முதலில் வெளி வந்துள்ளது. இக்கவிதை குறித்து மகாகவி உள்ளூர் பரமேசுவர ஐயர், சாகித்திய சரித்திரம் என்ற நூலில் "வீணபூ மலையாள இலக்கியத்தில் ஒரு தனிப் பாதையை வகுத்தது. அனேக கவிஞர்கள் அதற்குமுன் மேலைநாட்டு இலக்கியத்தை அறிந்திருந்தனர். ஆனால் அவர்கள் வழக்குப்படி ஒரு பொருளை எடுத்துக்கொண்டு அதைப்பற்றிய தீர்க்கமான வர்ணனையாக கவிதை புனைவதை முதன் முதலில் எடுத்துக் காட்டியவர் குமரன் ஆசான். இலக்கிய வானில் பிரகாசத்துடன் மின்னும் ஒரு தாரகைதான் "வீணபூ" என்று குறிப்பிட்டுள்ளார்.

மனிதருடைய பிறப்பு, இறப்பு இவை பற்றிய தத்துவ சிந்தனைகள், அன்பு ஒன்றே இவ்வுலகில் நிலையானது என்னும் தத்துவத்தை "ப்ரோதனம்" என்ற கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார். தனது நண்பரும் கவிசிரேஷ்டருமாகிய ஏ.ஆர். ராஜராஜ் வர்மா இறந்த பொழுது தனக்கு ஏற்பட்டுள்ள துக்கத்தின் வெளிப் பாடாகவே இக்கவிதை அமைந்துள்ளது. குமரன் ஆசான் தனது நண்பரைப்பற்றிக் கூறும் இடங்களை உணர்ச்சி மிக்கதாக அமைந்துள்ளதோடு இரங்கற் பாவாகவும் இக்கவிதையை அமைத்துள்ளார். இக்கவிதையில் இருந்து சில வரிகள் பின்வருமாறு.

"உன் தாராள கற்பனையும் மை உலராத பேனாவையும்
வாணியின் ஊழியத்திற்கே உதவினாய். பேரன்பன் நீ
உன் ஸித்திகள் உனது நூல்கள், அவற்றின் வழியே
பாணினிபோன்று உலகுக்கோர் ஆசிரியனானாய் நீ"

இவருடைய "கருணை" என்ற கவிதை மனித வாழ்வின் அடிப்படைத் தத்துவ விமர்சனத்தை முழுமையாக வெளிப்படுத்திய கவிதையாக இடம் பெற்றுள்ளது. இக்கவிதையில் ஒரு கணிகையின் வழ்க்கையினூடாக நிலையில்லா வாழ்வு எடுத்தியம் பப்பட்டுள்ளது. உண்மை அன்பு ஒன்றே நிலையானது என்றும், அதன் முதிர்ந்த உருவத்தை இறப்பிற்குப் பின்னரே காணக்கூடும் என்றும், புத்தம், தர்மம், ஸிங்கம் என்னும் மூன்றினிடத்தும் அடைக்கலம் புகுந்தவர்களுக்கே முக்தி கிடைக்கும் என்றும் இக்கவிதை கூறியுள்ளது. கருணையால் வாழ்க்கையின் இறுதித் தருணத்திலும்கூட முத்தி கிடைக்கலாம் என்பதனை இக்கவிதை வழி எடுத்துக்காட்டியுள்ளார் குமரன் ஆசான். கேரள சிருங்காரக் கவிதைகளின் மத்தியில் இக்கவிதை புதிய மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது. மிகுதியான நாடகப் பண்பும், உவமை அணி களும் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக இக்கவிதையி லிருந்து சில வரிகளைக் குறிப்பிடலாம்.

"மெல்ல ஒரு புறம் சாய்ந்தும், ஜரிகை மின்னும் பட்டாடை
முட்டாக்கு ஒரு வசத்தாக்கியும்,
வைரத்தோடுகள்மின்னல் போட்டியிடும்முல்லை மலரணிந்த
கருங்குழற் கற்றைகள் சற்றே காணுமாறும்
ஜவ்வாது பொட்டிட சந்திரபிம்ப முககமல
மாங்கையாள் வீற்றிருந்தாள்
..............................
பிடஞ்சு மண்டி நில்குன்று. பிடிச்ச தூநீர் திளங்கும்
ஸ்படிக்குப்பியில் இட்ட பரல்மீன்போல
..........................................
ஹ! சுகங்கள் வெறும் ஜாலம்! ஆறறிவு நியதிதான்
தராசு பொங்குவதும் தானே தாணு போவதும்"

குமரன் ஆசான், இவ்வுலகில் மனிதனுடைய மனதைவிட நுண்ணியது எதுவும் இல்லை. உள்ளுணர்வு, வெளியுணர்வு என்று வேறுபட்ட நிலை களையெல்லாம் கடந்து மனித உள்ளத்தின் ஆழத்திற் குச் சென்று அதன் துடிப்பையெல்லாம் "ஸீதா" என்ற கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார். இக்கவிதை வான்மீகியின் ஆச்சிரமத்தில் வாழ்ந்து வரும் ஸீதாதேவி தன்னுடைய நிலையைப்பற்றி ஆலோசிப்பதும், பழைய நினைவுகளை மீட்டிப்பார்ப்பதுமாக உள்ளது. அத்தோடு இக்கவிதை வரிகள் கருத்தாழம் மிக்கதாக அமைந் துள்ளன. உதாரணமாக இக்கவிதையில் இருந்து சில வரிகள் பின்வருமாறு.

"மண்ணை ஆள்வதற்கு வல்லவர்
மன்னன் தம்பிகள் அல்லவோ?
ஸஹதர்மிணி யோடொத்துப் புவியிலே
ஏகமாய் வாழ இடம் இல்லையோ?"

சாதி ஏற்றத்தாழ்வை நீக்கியுள்ளதையும் இவருடைய கவிதைகளில் காணலாம். "துரவஸ்தை" (1923) என்ற கவிதையில் நம்பூதிரி என்ற சாதியைச் சேர்ந்த பெண்ணையும் புலையன் சாதியைச் சேர்ந்த ஆணையும் இணைத்து சாதி ஏற்றத்தாழ்வை நீக்கியுள்ளார். சாதி என்பது வாழ்வின் எதிரி என்பதை அறிவுறுத்தியுள்ளதோடு சாதி வேறுபாடுகள் செயற்கையானவை மனிதப் பண்பிற்கு புறம்பானவை என்பதை எல்லோரும் உணரும் வகையில் இக்கவிதை யில் எடுத்துக்காட்டியுள்ளார். இதனை பின்வரும் வரிகள் வெளிப்படுத்தியுள்ளன.

"கவலையின்றிக் களித்துத்திரியும்
இணைப் புறாக்களைக் காணுங்கள் -அவை
கண்டாலறியாத வேற்றுமைகள் காட்டி
தமக்குள் சாதிச் சமய வழக்குகள் தொடுப்பதில்லை
கண்டபின் எல்லோரும் ஓர் நிறை
ஓர் குலம் என்பதும் அவற்றின் சட்டம்
மேன்மையும் தாழ்வும் சிறிதுமில்லை
மாற்றுக நம்முடைய சட்டங்களை ! இன்றேல்
மாற்றும் சட்டங்கள் நம்மையே"

"சண்டாள பிட்சுகி" (1923) என்ற கவிதையும் சாதி ஏற்றத்தாழ்வை நீக்கியுள்ளது. தாழ்த்தப்பட்ட சண்டாள குலத்தைச் சேர்ந்த பெண்ணை புத்தர் தனது சிஷ்யையாக ஏற்றுக் கொள்கிறார். இதை விரும்பாத உயர்சாதியினரையும் புத்தர் நல்வழிப்படுத்துகிறார். புத்தரின் வாயிலாக சாதி எனும் இழிநிலைகளை விட்டு



குமரன் ஆசானின் கவிதைகள் கேரளக் கவிஞர்களின் சிருங்காரத் தன்மையில் இருந்து தத்துவார்த்தரீதியில் மனித வாழ்க்கையின் நிலையாமையை வெளிப்படுத்தியுள்ளதோடு சாதி ஏற்றத் தாழ்வு, நாட்டின் விடுதலை வேட்கை, காதல் முதலானவற்றையும் வெளிப்படுத்தியுள்ளன. அத்தோடு இவருடைய கவிதைகளில் நவீன வடிவில் கவிதைகளைப் படைத்திருப்பினும் பழைய மரபை கைவிடாத தன்மை, வர்ணனைகள், உரையாடல் பாங்கு, நாடகப் பண்பு, உணர்ச்சி வெளிப்பாடுகள், உயிர்த்துடிப்பான பாத்திரங்கள், கருத்தாழம் என்பவற்றையும் காணக் கூடியதாக உள்ளன.

அன்பையும், இரக்கத்தையும் வளர்க்க வேண்டும் என இக்கவிதையினூடாக வெளிப்படுத்தியுள்ளார். அன்பின் முக்கியத்துவத்தை பின்வரும் கவிதை வரிகள் முன்வைத்துள்ளன.

"ஆசையை விட்டு மாந்தர் மன்னா
அன்பை வளர்க்க வேண்டும்
அன்பாற் பிறந்த உலகம்
அன்பாய் வளர்வது அதுவே
அன்புதான் இன்பப் பாதை
அன்புதான் பாரின் மேன்மை..."

நாட்டின் விடுதலைக்காக மக்கள் எப்பாடு பட்டும் வீறுகொண்டெழ வேண்டும் என்பதை உருவகமாக "ஒரு உள்போதனம்" என்ற கவிதையில் குமரன் ஆசான் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இதனை பின்வரும் கவிதை வரிகள் வெளிப் படுத்தியுள்ளன.

"ஸ்வாந்திரம் தன்னே அமிர்தம்
ஸ்வந்திரம் தன்னே ஜீவிதம்
பரதந்திரம் மானிகளுக்கு
மிருதியேக்கால் பயானகம்"

"நளினி", "லீலா" என்னும் இரண்டு கவிதைகளும் காதல் கவிதைகளாக அமைந்துள்ளன. நாற்பத்தைந்து வயது நிரம்பியும் திருமணம் செய்யாமல் உள்ள நிலையில் காதல் சார்ந்த உணர்வுகளை இக்கவிதைகள் வெளிப்படுத்தியுள்ளன. கவிதை மரபை ஒட்டி காவியத்தின் உவமையை "நளினி" என்னும் கவிதையில் குமரன் ஆசான் முன்வைத்துள்ளார். தாமரையின் தலைவன் சூரியன் என்பதுபோல நளினியாகிய தாமரையின் காதலன் திவாகரனாகிய சூரியன் என உவமித்து இருவருக்கும் இடையிலான காதலை வெளிக்காட்டியுள்ளார். குமரன் ஆசான் நவீன இலக்கிய நடையைப் பின்பற்றி உணர்ச்சிகளுக்கு அழுத்தம் கொடுத்த போதிலும் பழைய மரபையும் கைவிடாத நிலையிலும் கவிதைகளை எழுதியுள்ளார். இதற்கு "நளினி" என்னும் கவிதை சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

"துறவியாய் இருந்த போதும் உனை மறவாமல் நான்
உனக்காய் தவமிருந்தோன், இன்றுனைக் கண்டேன்
தன்யை யானேன் நீ என்னை
நினைத்திருந்தாலும் இல்லாவிடினும்"

இக்கவிதையில் நளினி திவாகரனை காதலிக்கிறாள். எனினும் நளினியின் காதல் தோல்வியடைவதனால் துறவு பூணுகிறாள். இறுதியில் திவாகரனின் முன்னால் மரணத்தை தழுவுகிறாள். இவ்வாறு உடலுறவிற்கு மேற்பட்ட காதலையும் சிருங்காரத்தையும் இணைத்து வெளிப்படுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குப் பின்பு "லீலா" எனும் கவிதையை எழுதியுள்ளார். நளினியின் கதை ஆசானின் சொந்தக் கதையாக அமைய "லீலா" பிரசித்தி பெற்ற பாரசீகக் கவிஞர் நிஸாமி எழுதிய லைலா மஜ்னுவின் தழுவலாக அமைகிறது. திருமணத்தின் பின்பும் தனது காதலனை நினைத்துக் கொண்டிருப்பதோடு தனது கணவன் இறந்த பின்பு காதலனைத் தேடிச்சென்று அவனுடன் மரணிக்கிறாள். "நளினி" மற்றும் "லீலா" என்னும் இரண்டு கவிதைகளும் ஓரங்க நாடகமாக அமைந்துள்ளது. உதாரணமாக "லீலா" என்னும் கவிதையிலிருந்து சில வரிகள் பின்வருமாறு.

"பிரணய பரவசே சுபம் நினக்கு
உணருக உண்டொரு திக்கில் நின் பிரியன்
குணபதி நெடுமோகன நித்திரை விட்டு
உணருக நான் ஸகி உன் மாதவி"

அத்தோடு "லீலா" என்னும் கவிதையின் கதையினை பேச்சும் வர்ணனையுமாக குமரன் ஆசான் நகர்த்திச் செல்கிறார். இதனை பின்வரும் கவிதை வரிகள் வெளிப்படுத்தியுள்ளன.

"நினைந்த வெல்லாம் நடப்பதுமில்லை
ஆசைக்கோர் அறவுமில்லை வாழ்க்கை
விசை தீர்ந்த கருவி போன்றது
ஈசன் நினைப்பதை யாரோ அறிவார்?"

இவ்வாறு குமரன் ஆசானின் கவிதைகள் கேரளக் கவிஞர்களின் சிருங்காரத் தன்மையில் இருந்து தத்துவார்த்தரீதியில் மனித வாழ்க்கையின் நிலையாமையை வெளிப்படுத்தியுள்ளதோடு சாதி ஏற்றத் தாழ்வு, நாட்டின் விடுதலை வேட்கை, காதல் முதலானவற்றையும் வெளிப்படுத்தியுள்ளன. அத்தோடு இவருடைய கவிதைகளில் நவீன வடிவில் கவிதைகளைப் படைத்திருப்பினும் பழைய மரபை கைவிடாத தன்மை, வர்ணனைகள், உரையாடல் பாங்கு, நாடகப் பண்பு, உணர்ச்சி வெளிப்பாடுகள், உயிர்த்துடிப்பான பாத்திரங்கள், கருத்தாழம் என்பவற்றையும் காணக் கூடியதாக உள்ளன.

நடுநிசி. இருளின் அமைதியை கிழித்துக் கொண்டு எங்கோ தொலைவில் சேவல் கூவும் ஒலி கோமதியின் செவிப்பறையைத் தாக்கி, அவளது உணர்வலைகளை சீண்டிவிட சிந்தனைச் சிதறல்களுக்குள் முற்றாக மூழ்கியிருந்தவள் விழிப்புற்று தன்னிலை அடைகிறாள். அவளையறியாமலே நீண்டதொரு பெருமூச்சு உள்ளிருந்து வெளிப் பட்டு அவளை ஆசுவாசப்படுத்துகிறது.

"சே! நடுச்சாமம் ஆகியும் ஏன் இன்னும் எனக்கு நித்திரை வருகுதில்லை" வாய் புலம்புகிறது.

"விடிய அஞ்சு மணிக்கு வெளிக்கிட்டால்தான் முதல் பஸ்ஸை பிடித்து தர்மபுரத்துக்கு போய்ச் சேரலாம். கொஞ்ச நேரமாவது கண் அயர்ந்தால் தான் பயணத்துக்கு உடம்பு தாக்குப் பிடிக்கும்."

மனம் நினைத்துக் கொள்ள, வலிந்து கண் களை மூடிக்கொண்டு கிடக்கிறாள். பாழாய்ப்போன மனம் ஒருநிலைப்பட மறக்கிறது. மாலையில் அலை பேசி மூலம் வந்த செய்தி நினைவில் வந்து மோதுகிறது.

வழமைபோல அன்றும் கோமதி தொலைக் காட்சியில் போய்க் கொண்டிருந்த "பிரியாத வரம் வேண்டும்" தொடர் நாடகத்தில் தன்னை மறந்து லயித்திருந்தாள்.

"அம்மா!"

மகன் திலீபனின் அழைப்பு அவள் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை. விளம்பர இடைவேளை வரை திலீபன் காத்திருக்க வேண்டியதாயிற்று.

"அம்மா! ஒரு சோகமான நியூஸ்"

சற்று அழுத்திச் சொன்ன மகனை திரும்பி ஏறிட்டுப் பார்த்தாள், கோமதி

"என்ன தம்பி சொல்லுறாய்?"

"சித்தப்பா மோசம் போயிட்டாராம்"

எ..ன்..ன!

இப்போது அதிர்ச்சியுடன் அவள் தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு வந்து படுக்கையில் அமர்ந்து கொண்டாள். திலீபனும் அம்மாவின் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

பேரக்குழந்தைகளின் படிப்பிற்கு இடையூறு இல்லாதவாறு கோமதி தொலைக்காட்சிப் பெட்டியை தனது அறையிலேயே வைத்திருந்தாள்.

"எப்பவாம் எடுக்கிறது?"

"நாளைக்கு என்று சொன்னவை"

"ஓ... அவைக்கு என்ன பிள்ளையோ குட்டியோ... யாருக்காக வைச்சு காத்திருக்க வேணும்"

கோமதியின் கணவருடன் கூடப் பிறந்த ஒரே ஒரு தம்பிதான் இந்த சித்தப்பா. ஆசிரியராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். மனைவி வனஜாவும் அவரும் நீண்ட காலமாக தர்மபுரத்திலேயே வாழ்ந்து வருகிறார்கள். தொழிலுக்காக அங்கு போய் குடியேறியவர்கள் நிரந்தரமாகவே தங்கிவிட்டார்கள். அவர்கள் ஒரு அற்புதமான ஜோடி. கோயில் திருவிழா என்றும் ஊருக்குள்நடக்கும் நல்லது கெட்டது

# ஒட்டும் உறவுகள்

மலரன்னை



நிகழ்வுகளிலும் தவறாமல் பங்குகொள்ளவார்கள். ஏன் போன வருடம் கோமதியின் கணவர் இறந்தபோது கூட இருவருமாக வந்து ஒருமாதம் வரையிலும் தங்கியிருந்துவிட்டு அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியம் எல்லாம் முடித்துக் கொண்டுதான் கிளம்பினார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் தங்கியிருந்தபோது தங்களுடைய சொந்த வீட்டு காரியங்களைப் போல் எல்லாவற்றையும் இழுத்துப்போட்டு கச்சிதமாகச் செய்து முடிப்பார்கள்.

உண்மையாக சொல்லப் போனால் கோமதிக்கு கணவனை இழந்த கவலையிலிருந்து மீளுவதற்கு வனஜாவின் ஆறுதலான வார்த்தைகளும் செய்கைகளும் உறுதுணையாகின. இப்போது வனஜா கணவனை இழந்த சோகத்திலிருந்து எப்படி மீளப் போகிறாள். அவளும் கணவனும் இணைபிரியாது வாழ்ந்தவர்களாயிற்றே. எப்படி அவளது கவலைக்கு நான் ஒத்தடமாக இருக்கப் போகிறேன் என்றொரு ஏக்கம் கோமதியின் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் பொசுக்கென போய்விட்டார், தில்லைநாதன். மரணச் செலவிற்கு வனஜாவிடம் கைவசம் பணம் இருக்கிறதோ… என்னவோ. எதற்கும் கோமதி தன்னிடம் கணவனது ஒய்வூதியப் பணத்திலிருந்து சேமித்து வைத்திருந்த தொகையையும் எடுத்துச் செல்லுவதென முடிவெடுத்துக் கொண்டாள்.

மைத்துனரின் கருமங்கள் முடியும்வரை ஒரு மாத காலத்திற்கு அங்கேயே தங்கியிருந்து விட்டு வரும்போது கையோடு வனஜாவையும் அழைத்து வந்துவிட வேண்டும். அவளை அங்கே எப்படி தனியே விட்டு வைப்பது. வனஜா இங்கு வந்து எங்களோடு தங்கினால் எங்களுக்கும் உதவியாக இருக்கும். அவளுக்கும் எனது பேரப்பிள்ளைகளோடு இதமாக பொழுது போகும். கவலையை மறக்க அது ஏதுவாகும். என்றெல்லாம் கோமதியின் மனம் எண்ணியது.

நீண்ட அந்த இரவுப் பொழுதும் ஒருவாறு விடிந்தது. நித்திரையைத் தொலைத்து விட்ட கோமதியின் உடல் சோர்ந்து தளர்ந்திருந்தது. மருமகள் பவானி அவளிடம் சூடான கோப்பியை கொண்டு வந்து கொடுத்தாள். சூடச்சுட குடித்த கோப்பி கோமதியின் உடலுக்கு சற்று தென்பாக இருந்தது.

"பிள்ளை பவானி! தம்பி வேட்டி சால்வை எல்லாம் எடுத்து வைச்சவனே. அவன்தானே கொள்ளி வைக்க வேணும். வேறை யார் இருக்கினம்"

"ஓம் மாமி. எல்லாம் எடுத்து வைச்சவர்"

"பிள்ளை! தம்பி எட்டுச் செலவு முடியவும் வந்திடுவான். கொள்ளி வைக்கிறவன் அதுக்கிடையில வெளிக்கிட முடியாதெல்லே. நான் அங்கை நிண்டு தான் வருவன். பேரக்குஞ்சுகள் கவனம்"

"சரி மாமி. நான் எல்லாத்தையும் பாத்துக் கொள்ளுறன். நீங்கள் யோசிக்காமல் போட்டு வாங்கோ"

கோமதியும் திலீபனும் புறப்பட்டு விட்டார்கள். பஸ்ஸில் போகும்போது ஒரு காட்சியும் அவளது கண்களுக்கு புலப்படவில்லை. எண்ணம் முழுவதும் மரணவீட்டில் நடக்கும் நிகழ்களையே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் திலீபன் ஒரு ஆட்டோவைப் பிடித்து அம்மாவை பக்குவமாக அவர்களது வீடுவரை கூட்டிச் சென்றான். கோமதி எதிர் பார்த்ததிற்கு முற்றிலும் மாறாக நிலைமை அங்கு இருந்தது. தெருமுனையிலிருந்து வீடுவரை தோரணங் களும் வாழைகளுமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. முகப்பில் இறந்தவரது போஸ்டர் வேறு கட்டப் பட்டிருந்தது. படபடக்கும் இதயத்தை பொத்திப் பிடித்தபடி கோமதி ஆட்டோவிலிருந்து இறங்கி நடந்தாள். என்ன ஆச்சரியம்.

வீட்டில் ஒரு அழுகுரலையும் காணோம். பிள்ளைகள் இல்லாதவீடு. அதுதான் அழுவதற்கு எவரும் இல்லை என அவளது மனம் நினைத்துக் கொண்டது. ஆனால் அதுவல்ல நிலைவரம். தில்லைநாதனது உடலுக்கு ஈமக்கிரியைகள் நடைபெற்றுக் கொண்டி ருந்தது. ஓரக் கண்ணால் இதனை அவதானித்து விட்ட கோமதி கைகளால் வாயைப் பொத்திக் கொண்டு விம்மியவளாய் வனஜாவைத் தேடியபோது அவளே வந்து கோமதியை கட்டிக் கொண்டு விசும்பினாள். அழு குரல் வெளியே வரவில்லை. கிரியைகள் நடைபெறும் போது குரலெடுத்து அழக்கூடாது என்பது ஐதீகம்.

சவப்பெட்டிக்குள் கிடத்தியிருந்த தில்லை நாதனின் வெற்றுடலைக் கண்ணுற்றபோது கோமதியின் இதயமே கலங்கியது. ஆற்றொணாத் துயரத்தின் வெளிப்பாடாக கண்கள் தாரை தாரையாக நீரைச் சொரிந்தன. அவளுக்கு தனது கணவனது நினைவுகள் மீண்டது தான் காரணம். கண்களை மறைத்திருந்த நீர்த்திவலையை கைகளால் துடைத்துவிட்டு கோமதி நிமிர்ந்து சுற்றுப்புறத்தை ஆராய முற்பட்டாள்.

என்ன ஆச்சரியம். யாரோ ஒரு பையன் வெற்று மேனியில் பூணூல் தரித்து சுண்ணம் இடித்து சவக் கிரியைகளை செய்து கொண்டிருந்தான். கோமதிக்கு மனதில் ஒரே குமைச்சல். இந்தப் பையன் யாராக இருப்பான். ஒரு வேளை வனஜாவின் பக்கத்து உறவுக் காரணாயிருப்பானோ… அப்படி வனஜாவுக்கு ஒரு உறவுப் பந்தம் இருப்பதாக எனக்கு இதுநாள் வரையில் தெரியாதே. எண்ணக்குதிரைக்கு கடிவாளமிட முடியாமல் தவித்துப் போனாள். அவளது மகன் திலீபனுக்கு சித்தப்பாவின்மீது இருந்த உரிமை தட்டிப் பறிக்க பட்டுவிட்டது போன்றதோர் பிரமையில் திளைத்துப் போய் நின்றிருந்தாள்.

"இந்த வனஜாவுக்கு அப்படி என்ன அவசரம். நாங்கள் வெள்ளனக்காத்தால புறப்பட்டு வாறதுக் கிடையில பத்துமணிக்கே பிரேதத்தை எடுக்க வேணு மெண்டு ஏன் நினைத்தாளாக்கும்"

கோமதியின் மனம் அங்கலாய்த்தது. தில்லை நாதன் உயிருடன் இருக்கும்போதே அவர்தம் மனைவி யிடம்.சொல்லி வைத்திருந்தார். "நான் செத்தால் என்னுடைய பிணத்தை சுடு ஆறமுந்தி கொண்டுபோய் எரித்துப் போட வேணும். வைச்சு வேடிக்கை பார்த்து

சீரழிக்கக் கூடாது. ஒருவேளை நீர் முந்தினாலும் நான் அப்பிடித்தான் செய்வன்"

அதனால்த்தான் வனஜா கணவனது வேண்டு கோளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாள். கோமதி இது தெரிந்திருக்க மாட்டாது தானே. ஒருவாறு ஈமக்கிரியைகள் முடிவுற்று சம்பிரதாய முறைப்படி பெண்கள் வாய்க்கரிசி போட்டு தில்லைநாதனின் வெற்றுடலுக்கு பூப்போட்டு வீட்டிலிருந்து அனுப்பி வைக்க முயன்று கொண்டிருந்தனர். ஒருவித தாழ்வு மனப்பான்மையுடன் கோமதி இயங்கிக் கொண்டி ருந்தாள். வனஜா மாங்கல்யத்தைக் கழட்டியபோது அவளால் தன்னை கட்டுப்படுத்திக்கொள்ள முடிய வில்லை."ஓ" வென்று கதறியழுதவாறு வனஜாவைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

மரண ஊர்வலம் புறப்படத் தயாரான போது யாரோ பெரிதாக குரல் கொடுத்தார்கள்.

"கொள்ளிக்குடத்தை டொக்டரிடக் குடுங்கோ"

"கொள்ளி வைக்கப்பொகும் பையன் டொக்டராயிருக்க வேணும்" கோமதி எண்ணிக் கொண்டாள். பறை வாத்தியம் முழங்க பட்டாசுகள் வெடிக்க பிரேத ஊர்வலம் ஆரம்பமானது. கணவனை வழியனுப்பும் வேளையில் வனஜாவினால் பிரிவுத் துயரை கட்டுப்படுத்த முடியவில்லை. சோர்ந்து நிலத்தில் சரிந்தவள், மயக்கமுற்றாள். அங்கிருந்தவர்கள் அவளுக்கு தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவித்தனர். அப்போதுதான் கோமதி அவதானித் தாள். பெண்களினால் வீடே நிறைந்து போயிருந்தது.

அங்கிருந்த பெண்கள் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினார்கள். மளமளவென்று வீட்டை சுத்தப்படுத்தி கழுவினார்கள். ஒருத்தி வனஜாவிடன் தலையை தன் மடியியல் வைத்து கோப்பி பருகிக் கொண்டிருந்தாள்.

சுடுகாட்டிலிருந்து ஆண்கள் வந்து சேர்ந்ததும், தலை முழுகிய பின் அனைவரும் இருந்து சாப்பிட்டார் கள். கோமதிக்கு அது வியப்பைத் தந்தது. ஊரில் என்றால் இரத்த உரித்துக்காரர் மட்டுமே தொடக்கு சாப்பாட்டை சாப்பிடுவார்கள். இங்குள்ள மக்களது ஒற்றுமையான செயற்பாடு அவளைக் கவர்ந்தது.

அயல்வீடு ஒன்றிலிருந்து நிறையவே சமைத்து எடுத்து வைதத்திருந்தார்கள். வனஜாவை சாப்பிட அழைத்தபோது அவள் மறுத்தாள். "அவரும் நானும் ஒன்றாய் இருந்துதான் சாப்பிடுறனாங்கள். இண்டைக்கு நான் மட்டும் எப்பிடி" மிகுதி வார்த்தைகள் வாய்க் குள்ளேயே அடங்கிப் போயின வனஜா அவர்கள் விடவில்லை. அரவணைத்துஅவளை அழைத்துப் போய் இரண்டு வாய் ஊட்டி விட்டார்கள். கண்களி லிருந்து கண்ணீர் சொரித்து கொண்டிருக்க அவள் சாப்பிட்டாள். கோமதிக்கு எல்லா விடத்திலும் முன்னுரிமை கொடுத்து அவர்கள் நடந்து கொண்டது அவளுக்கு திருப்தியாயிருந்தது.

திலீபன் கொள்ளி வைக்காததால் அவன் அங்கு எட்டுச் செலவுவரை நிற்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மறுநாளே அவன் ஊருக்குத் திரும்பி விட்டான். கோமதிதான் அவனை அனுப்பி வைத்தாள்.

கோமதி, தான் எடுத்து வந்திருந்த பணத்தை வனஜாவிடம் கொடுக்க முற்பட்டபோது அவள் அதனை ஏற்க மறுத்துவிட்டாள்.

"அக்கா! ஊர்ச்சனங்கள்முன்நின்று எல்லாத்தை யும் செய்யினம். பிறகு எனக்கு ஏனக்கா பணம்"

கோமதிக்கு தூக்கி வாரிப்போட்டது.

"என்ன வனஜா சொல்லுகிறீர்?"

"ஓமக்கா எல்லாத்தையும் அவையே பாத்துக் கொள்ளுகினம்"

கோமதிக்கு அவளது வார்த்தைமீது நம்பிக்கை ஏற்படவில்லை. செலவிலன்றுதான் அவளுக்கு உண்மை நிலை புரிந்தது. அதிகாலையிலேயே ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளாக கொண்டு வந்து குவித்து விட்டனர். அத்துடன் மட்டும் நிற்காமல் அவர்களே சமையலையும் செய்யத் தொடங்கி விட்டார்கள். ஆண் பெண் என்ற பேதமில்லாமல் வேலைகள் கச்சிதமாக நடைபெற்றன. செலவு சுமுகமாக நடந்தேறியது.

அன்று இரவு வனஜா கோமதியுடன் வேறு இரு பெண்களும் வீட்டில் தங்கியிருந்தனர். வனஜா அலுத்துக் கொண்டாள்.

"என்னைத் தனிய இருந்து தவிக்கவிட்டிட்டு அவரும் போயிட்டார். நான் இனி உயிரோட இருந்து ஆருக்கு என்ன பிரயோசனம்"

"அம்மா! ஏன் அப்பிடிச் சொல்லுறியள். உங்களுக்கு நாங்கள் இருக்கிறம் உங்களுக்கொண்டென் டால் விட்டிடுவமா. அப்படியா நீங்கள் எங்களோடு பழகின நீங்கள்"

அந்தப் பெண்களில் ஒருத்தி சொல்ல மற்றவள் அவளை ஆமோதித்துப் பேசினாள்.

"சரியாய் சொன்னாய் சுமதி. ஐயாவும் அம்மா வும் எங்களை எப்பிடிப் பாத்தவை. என்ரை மகளின்ரை சாமத்திய வீட்டிற்கு வந்து மூன்று நாள் தங்கியிருந்து எல்லாத்தையும் நடத்தி வைச்சதே அவைதானே"

கோமதிக்கு மனதில் உறுத்திக் கொண்டிருந்த கேள்வியை கேட்டுவிட இதுதான் தருணம் எனத் தோன்றியது.

"அது சரி வனஜா. சித்தப்பாவுக்கு கொள்ளி வைச்ச பிள்ளை யார். உம்முடைய பக்கத்து சொந்தக் காரப் பையனே. நான் ஏன் கேக்கிறனெண்டால் நான் அந்தப் பிள்ளையை முந்திபிந்தி பாத்ததா ஞாபகம் இல்லை"

சுமதி, வனஜாவை முந்திக் கொண்டு பேசினாள்.

"அது வந்து பெரியம்மா... அந்தப் பிள்ளைக்கு சின்ன வயசிலையே தகப்பன் இல்லை. எண்டாலும் பெடியன் கெட்டித்தனமாய் படிச்சு கம்பஸ் என்ரர் பண்ணிப் போட்டுது. கம்பஸ்ஸுக்கு விட்டு படிப்பிக்க தாய் மனுசியால ஏலாமல் போச்சுது. இதை அறிஞ்ச ஐயா தானே செலவழிச்சு அந்தப்பிள்ளையை படிப் பீச்சுப் போட்டார். இப்ப அந்தப் பெடியன் டொக்ட ராய் பதுளை ஆஸ்பத்திரியல வேலை செய்யிறான். அவனும் லீவில வந்து நிக்கேக்க பாத்து ஐயாவும் போயிட்டார். பெடியன் தான்தான் கடமை

செய்யவேணும் என்று ஒற்றைக்காலில நிண்டது. ஏன் செத்தவீட்டுச் செலவும் அதுதான் செலவழிச்சது"

இவற்றைக் கேட்ட கோமதிக்கு இவையெல்லாம் தான் வீட்டில் அன்றாடம் பார்க்கும் தொடர் சீரியலில் நடப்பது போல இருந்தது.

மாதம் ஒன்று உருண்டோடியது. தில்லை நாதனுடைய அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று அஸ்தியும் கரைத்தாயிற்று. ஊருக்காக வாழ்ந்தவரது கிரியைகள் அனைத்தையும் ஊர் மக்களே முன் நின்று செய்து முடித்தும் விட்டனர்.

வீட்டுக் கிருத்தியம் முடிந்த மறுநாள் கோமதி ஊருக்கு புறப்படுவதாக இருந்தாள். கிரியைகளில் பங்கு பற்றி விட்டு அம்மாவையும் அழைத்துப்போக தயாராக திலீபன் வந்திருந்தான். கோமதி வனஜாவை தங்களுடன் வந்து தங்குமாறு வற்புறுத்தி வேண்டி னாள். அவளோ கோமதியின் கூற்றை ஏற்க மறுத்து விட்டாள்.

"அக்கா! அவரோடு நான் வாழ்ந்த இந்த வீட்டில அவருடைய நினைவுகளோடு வாழ்ந்து என்னுடைய மீதமிருக்கிற வாழ்நாளைக் கிழிச்சிடுவன். நான் தனிய இருக்கிறதாய் நினைச்சு கவலைப் படாதையுங்கோ. இங்கைதான் எனக்கு துணையாக எத்தனையோ பேர் இருக்கினம். அதை நீங்களே கண்ணால பார்த்திருப்பியள். தயவு செய்து என்னை வற்புறுத்தாதையுங்கோ"

கோமதியினால் எதுவும் பேச முடியவில்லை. மகனுடன் ஊருக்குப் புறப்பட்டு விட்டாள். அவளுடைய மனதில் ஒரு நெருடல் இருக்கத்தான் செய்தது. காணிப்பிரச்சினை ஒன்றை மனதில் வைத்துக் கொண்டு அவளுடைய ஒரே உடன் பிறப்பான அண்ணன் அவளுடைய வீட்டிற்கு வருவதில்லை. அவளை வழிதெருவில் பார்க்க நேர்ந்தாலும் முகத்தை திருப்பிக் கொண்டு போய் விடுவது வழக்கமாகி விட்டது. ஆனால் அங்கே... சொந்தமில்லாத பிறத்தி மனிதர்கள் என்னவாய் ஒட்டி உறவாடி ஒருவருக்கொருவர் உதவியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஏம்பலித்த மனத்தை ஆசுவாசப்படுத்த முயன்றவளது அடிவயிற்றிலிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டு காற்றுடன் கலந்து சங்கமமாகியது.

# உலகமே ஸ்தம்பிக்கிறது!


குவியும் ஊடகப் பேரோசைகளால்
குரோனாப் புதினங்கள் காதடைக்கிறது.
குறைவில்லா உணவு, பொருட்களென
குலை நடுங்க வீட்டின் உள்ளே.

குறைவான உடை, உணவுமின்றி
குடிமனைகளில் பாதுகாப்பும் இன்றி
குண்டெறிதலிலிருந்து தப்ப அன்று பதுங்கு
குழி வாழ்வு இப்படியாய் இருந்திருக்குமோ!

எத்தனையோ பேருக்கு எத்தனை சிரமமன்று!
இத்தனை சிந்தனை கொரோனாவாலெனக்கு
சுத்தமான போர் இலக்கியக்
கொத்தான அனுபவங்கள் ஒப்பீடாக.

படிப்பினையை வரப்பிரசாதமாக்கும் பெரும்
துடிப்பினைக் கொடுப்பனையாகத் தரும்
முடிப்பே குரோனாப் பிரபஞ்சம்.
மடியும் வாழ்வின் கருமாவா இது!

அச்சம் சூனியமாய் உயிரியலின்
உச்சப் பலிகள் எண்ணற்றவை!
நச்சுடைய நுண்கிருமிகள் உலகைப்
பச்சென்று கவ்வி இருட்டாக்குகிறது.
உலகமே ஸ்தம்பிக்கிறது!



பா வானதி வேதா. இலங்காதிலகம்

# இன்றும் காலனிய தந்திரோபாயம்

■ ச.புஸ்பலதா

காலனித்துவம் எனப்படுவது “பொருளாதார ஈட்டத்திற்காக ஆதிக்க வேட்கை கொண்ட நாடொன்று இராணுவ வல்லமையின் ஊடாக ஏனைய நாடுகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து அதிகாரத்திற்கு உட்படுத்தல்” எனச் சுருக்கமாக குறிப்பிடலாம்.

ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளினை போர்த்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஸ்பானியர், பிரான்ஸியர் போன்றோர்கள் அடிமைப் படுத்தி அரசியல், பொருளாதாரம், வணிகம் மற்றும் இராணுவ அதிகாரத்துடன் செயற்பட்டமையே காலனித்துவம் என்றும், சமயம், பண்பாடு, உணவு, கல்வி, கலை, விளையாட்டு என அனைத்து துறையிலும் தமது ஆதிக்கத்தினை உள்ளூர் மக்களிடத்திலே திணித்து பொருளாதார ரீதியாக நன்மைகளை பெறுவதே காலனித்துவத்தின் தூர நோக்கமாகும்.

காலனிய சிந்தனையின் ஊடாகத் தமது நோக்கினை அடைவதற்காக கல்வி, மதம், இராணுவ வல்லமை, தந்திரோபாயம், தொழிநுட்பம் என்பவற்றினை பிரதானமாக பயன்படுத்தினர். உள்ளூர் மக்களிடத்தில் பாரம்பரியமாக காணப்பட்டு வந்த பண்பாடுகள், வாழ்வியல் போக்கு, உள்ளூர் மொழி, தொழில், கலைகள், உள்ளூர் வைத்தியம் என பல்வேறு விடயங்களில் காலனித்துவ சிந்தனையினை திணித்தனர். இதனால் உள்ளூர் மக்கள் தமது பாரம்பரிய மரபுகள், உள்ளூர் கலைகள், தனித்துவம் மற்றும் சமூக அடையாளம் என்பவற்றினை படிப்படியாக இழக்கத் தொடங்கினர்.காலனித்துவத்தின் ஆதிக்கத்திற்கு உட்படுவதற்கு முன்னரும் உள்ளூர் மக்கள் தமது வாழ்க்கை ஒழுங்கில் சில ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தனர் இக்காரணியும் காலனித்துவத்தினை நிலை நாட்டுவதற்கு துணையாக அமைந்திருந்தது. பின்னர் காலனித்துவம் குறித்த உள்ளூர் மக்களினை தம்வசப்படுத்தி திட்டமிட்டு தமது ஆதிக்கத்தினை நிலைநாட்டியுள்ளது.

நகரமயமாக்கம், மத்தியதர வர்க்கம், நுகர்வுப் பண்பாடு என்பன உள்ளூர் மக்களின் வாழ்வியலினை காலனித்துவ நலன்களுக்குரியதாக வலுப்படுத்தியது.

வளர்ச்சி, நாகரீகம் அடைதல், சமூக ஒடுக்கு முறையில் இருந்து விடுபட வேண்டும் என்பன மத்திய தர வர்க்க சமூகத்தினால் வலியுறுத்தப்பட்டன. பாரம்பரியங்களின் வாழ்க்கை ஒழுங்கு, கலைச் செயற்பாடு, பொருளாதாரம் என்பன ஒரு சாரார் நன்மைக்காக கட்டமைக்கப்பட்டு தலைகீழாக்கப்படுகின்றது. இம் மாற்றத்தின் தொடக்கப்புள்ளி காலனித்துவத்தின் பெரும் வெற்றிச் செயற்பாடாகும்.

நகரமயமாக்கம் உழைப்பிலும் பண்பாட்டிலும் படைப்பாற்றல் உள்ளவர்களாக இருந்த உள்ளூர் மக்களை மாற்றியமைக்கவும் படைப்பாற்றலினை இல்லாது செய்து “மிசனரி கல்வி” என்ற முறையின் ஊடாக அறிவாற்றல், விழிப்புணர்வு, சிந்தனை வளர்ச்சி என்பதன் ஊடாக காலனித்துவ கொள்கையினை பரப்பவும் தம் இலக்கினை நிறைவேற்றும் வகையிலான ஒரு சமூகத்தினை உருவாக்கினார்கள். நகரத்தில் வாழ்பவர்களாக இவர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர்.

மத்தியதர வர்க்கம் உள்ளூர் வாழ்வியலினை விட்டு காலனித்துவ சிந்தனையான ஐரோப்பியர்களின் திட்டத்தினை வலுப்படுத்தும் வகையில் அடிமையானவர்களாக கல்வி, பொருளாதாரம், அறிவு, அரசியல் பங்கேற்பு ஆட்சி உரிமை என்பவற்றில் தம்மை உயர் சமூகமாகவும் மத்தியதர சமூகமாக காலனித்துவத்தின் மூலம் உருவாகினர் எனலாம். பாரம்பரியம், பண்பாடு, வாழ்வியல் போக்கு, உள்ளூர் மொழி, உள்ளூர் தொழில், உள்ளூர் வைத்தியம் உள்ளூர் கலைகள் என்பவற்றினை “Local” தரமற்றவை என்று கூறுபவர்களாகவும் நாங்கள் படித்த மத்தியத்தரவர்க்க மக்களாகவும் ஏனைய உள்ளூர் மக்கள் பாமரர்கள் என்று அடையாளப்படுத்தும் சமூகமாக காலனித்துவ சிந்தனையின் மூலம் உருவாக்கப் பட்டார்கள்.

இன்றைய உலகமயமாக்கல் சூழலில் நுகர்வு பண்பாடு அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவை காலனித்துவத்தின் ஊடாக பெரும் நஞ்சினை விதைத்த செயற்பாடாகவே காணப்படுகின்றது. பாரம்பரியமாக உள்ளூர் உற்பத்தியினை செய்து வரும் சமூகமாக காணப்பட்ட மக்கள் காலனித்துவத்தின் பின்னர் நுகரும் மனிதர்களாக தம்மை மாற்றிக் கொண்டனர். அதாவது விவசாயம், உள்ளூர் வைத்தியம் தொடங்கி உள்ளூர் கலைகள் வரை இன்று நுகர்வு பண்பாட்டினை வெளிப்படுத்துவத்தாக உள்ளன.

காலம் காலமாக உள்ளூர் கைத்தொழில், நாட்டு வைத்தியம், உணவு பழக்கவழக்கம், ஆடை அணிகலன், உள்ளூர் மொழி மற்றும் மகிழ்ச்சிக்கும் பொழுது போக்கிற்கும் ஆரோக்கியமான வாழ்க்கைக்குமான பாரம்பரிய சடங்கு முறைகள் மற்றும் கூத்துக் கலைகள் இன்று நுகர்வுப் பண்பாடாக மாறியுள்ளன. கலையினை பிரயோக முறையில் ஆற்றுகையினை மேற்கொண்டு திருப்தி அடைந்த மனிதர் இப்போது கலையினை நுகரும் பொருளாக மாத்திரம் மாற்ற எத்தனிக்கிறார்கள்.

காலனித்துவம் அறிமுகப்படுத்திய உணவு பழக்கவழக்கம், ஆடை அணிகலன் ஆங்கில மருத்து

வம், ஆங்கில மொழி, இயந்திர மயப்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில், மேற்கத்தேயக் கலை, பண்பாடு என்பன காலனித்துவத்தின் ஊடாக எம் மத்தியில் வந்து இன்றும் விட்டு போகாது சிந்தனை செயல் அனைத்திலும் தொக்கி நிற்கின்றது.

பண்பாட்டுக் கலப்பு காலனித்துவம் ஏற்படுத்திய பாதிப்புக்களில் அடிப்படையானது பாரம் பரிய மரபுகள் அனைத்தையும் இல்லாமல் செய்து மேற்கு ஐரோப்பிய பண்பாடு, கலாசாரம் என்பவற்றினை அறிமுகப்படுத்தியது. உள்ளூர் பாரம்பரிய பண்பாடுகள் அழியவும் இல்லாது செய்யவும் ஒரு ஆயுதமாக பண் பாட்டுக் கலப்பு மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. கால போக்கில் பூர்வீக பழக்க வழக்கம் தொடங்கி சமய, சடங்கு சம்பிரதாயம், உணவு பழக்கவழக்கம், மற்றும் கலாசார இழப்பிற்கும் ஐரோப்பிய பண்பாட்டுக் கலப்பிற்கும் காலனித்துவம் காரணமாக அமைந்தன.

"ஒற்றை பண்பாட்டு பரவலாக்கம்" எனப்படும் ஐரோப்பியர்களின் பண்பாடானது கலப்பு, பரவலாக்கம் அடைந்து இன்றும் காலனித்துவம் என்ற மரத்தினை உள்ளூர் மக்கள் மத்தியில் இருந்து அழிக்க முடியாது அதன் தாக்கத்தினை திணித்து வளர்ந்து வருகின்றது.

- உள்ளூர் கலையில் காலனித்துவத்தின் தாக்கத்தினை சுருக்கமாக நோக்கினால் கலையில் காலனித்துவத்தின் தாக்கமானது பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. உள்ளூர் கலைகளுக்கு என்று தனியான மரபினையும் மதிப்பினையும் கொண்டு காணப்பட்டன. சமூகமாக கூடி கலையினை ஆற்றுகை செய்தல், பார்த்தல், கலையினை ரசித்தல் என்ற விடயம் பாரம் பரிய கலையில் இயல்பு இது மக்களின் வாழ்வில் பிரிக்க முடியாது காணப்பட்டன ஆனால் காலனித்துவத்தின் வருகையினை தொடர்ந்து
- கூட்டுக்கலையினை தனிக்கலையாக பார்த்தல்
- பாரம்பரியமாக அழிந்து வந்த கலையினையும் கூட்டுப்படைப்பினையும் எழுத்துருவாக்கி தனி மனித படைப்பாக (தனிப்படைப்பு) தனது கலையாக உரிமைக்கொண்டாடல்.
- அனைவரும் கூடி ஆற்றுகையினை மேற் கொண்ட பாரம்பரிய (கூத்துக்கலைகள்) கலையினை ஆற்றுவோர், பார்ப்போர் கலை என பாகுப்படுத்தல் ரசனைக்காகவும் நுகர்வுக் காகவும் மட்டும் கலையை படைத்தல்.
- வாழ்வியலோடு ஒன்றித்த கலையினை வணிக நோக்காகவும் நுகர்வு கலையாகவும் மாற்றியமைத்தனர்.
- இணைப்பாக்கக் கலை அதாவது பாரம்பரிய கலையும் காலனித்துவ கலையும் சேர்ந்து உள்ளூர் கலையினை தாழ்த்தி தரமற்றதாக்கி பின் காலனித்துவத்தில் புதிய கலையாக படைக்கப்படுகின்றன.
- உள்ளூர் கலைகளை (Local Arts ) என்று கூற Local தமிழ் வடிவம் தரமற்றது இன்று தரமற்ற கலைகள், கீழ் நிலை சமூகத்தினரின் கலை என பாகுபடுத்தி தரமிழக்கச்செய்துள்ளனர்.
- பிரயோகத்தன்மை, ஆற்றுகை வெளிப்பாடு கலைஞரிடம் கற்று ஆவணமாக ஆற்றுகை மேற்கொள்ளும் முறையில் இருந்து விடுபட்டு நூலகத்திலும் தனி ஆய்வுகளிலும் எழுத்துரு வாக்கம், புகைப்படம், ஒலிப்பதிவுகள் இறு வெட்டுக்கள் என ஆவணப்படுத்தி வைக்கும் முறையாக மாறியுள்ளன.

இவ்வாறு காலனித்துவத்தின் ஊடாக பாரம்பரியக்கலையில் ஏற்பட்ட பாதிப்பினை கூறிக் கொண்டே செல்லமுடியும். அத்தோடு பல கலையின் இருப்பினை இல்லாமல் செய்துள்ளது. மேற்கு ஐரோப்பி யர்கள் உள்ளூர் கலையினை களவாடியது மட்டுமன்றி கலைப்பொருட்களினையும் எடுத்து சென்று தங்களின் கலையாக காட்சிப்படுத்தி உரிமை கொண்டாடுபவர் களாக காணப்படுகின்றனர். காலனித்துவமானது கலை யில் ஏற்படுத்திய தாக்கமானது உள்ளூர் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் பெரும்பாதிப்பாக உள்ளதுடன் பின் காலனித்துவத்தின் ஊடாக எடுத்து சென்ற கலைப் பொருளை கலை கோட்பாடாக கட்டமைத்து கல்வி முறையின் ஊடாக மீண்டும் கொடுத்துள்ளனர்.

காலனித்துவமானது மிகவும் நீண்ட காலப்பகுதி யாகக் கொண்டதொரு அதிகாரச் செயற்பாடாக அமைந்திருந்தது. ஆனால் காலனித்துவத்தில் இருந்து விடுபட்டு நீண்டகாலத்தினை தாண்டி அரசியல் ரீதியாக ஆட்சி அதிகாரத்தில் தேசம் காணப்பட்டபோதும் காலனித்துவம் ஏற்படுத்திய தாக்கமானது அரசியல், பொருளாதாரம், கல்வி, மொழி, சமயம் நம்பிக்கைகள், கலை, கலாசாரம், பண்பாடு, ஆடை, நிகழ்ச்சிகள் மற்றும் தனித்துவமான வாழ்வியல்முறை என தற்காலத்திலும் மக்களிடையே காணப்படுகிறது. காலனித்துவத்தின் பாதிப்புகளில் இருந்து உள்ளூர் மக்கள் விடுபடாத நிலையினையே குறிக்கின்றது.

காலனித்துவமானது இராணுவ ரீதியான செயற்பாடு மற்றும் கல்வி, நிர்வாக செயற்பாடுகள், செல்வங்களை சேர்த்தல் என்று அரசியல், பொருளா தார கட்டுப்பாட்டின் ஊடாக கட்டமைக்கின்றது. இன்று எம் மத்தியில் உலகமயமாக்கல், நவீனமயப்படுத்தல், பின் காலனித்துவம், பின்நவீனம் என பல விடயங்கள் தோன்றி யுள்ளதோடு காலனியமயமாக்கல் முறையானது உள்ளூர் கலைகள், சடங்குகளினையும், வாழ்வியல் நம்பிக்கை களினையும் பாமரத்தன்மை, மூட நம்பிக்கை எனவும் அறிவொளி இயக்கம் விஞ்ஞான பூர்வ மான கோட்பாடு கள் நவீனமயமாக்கலின் உள்ளிருந்து கேள்விக்கு உற்படுத்தும் செயற்படாக பின் காலனிய சிந்தனையின் தாக்கத்தினை வைத்துக்கொண்டு நோக்கும் போது காலனித்துவம் மிக உறுதியான செயற்பாடாகவே காணப்படுவதோடு நவகாலனியம் புதிய ஆக்கிரமிப்பு செயற்பாடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் நிறுவனம், பல்தேசிய கம்பனிகள் மூலமாக பொருளாதார வணிக சுரண்டல்களினை மேற்கொள்வதோடு சிந்தனை, செயற்பாடுகளிலும் கட்டமைத்துக் கொண்டிருக்கின்றது.

எனவே "காலனித்துவம் எம்மை கட்டமைப்ப தாக உள்ளதோடு காலனிய முகவர்களாக நாம் செயற்படுகின்றோம். காலனித்துவம் திணிக்கின்றதனை நாம் ஏற்றுக்கொண்டு காலனியத்திற்கு செல்வாக்கு செலுத்திக் கொண்டு இருக்கின்றோம் என்பதுதான் சிந்திக்க வேண்டிய விடயமாகும்."

**கா**லை மூன்றரை மணிக்கே நித்திரையால் எழும்பியாச்சு. குளித்து வெளிக்கிட்டு ஐந்து மணிக்குமுன் வெள்ளவத்தை சென்று பஸ் பிடித்துக் களுத்துறை சென்றுவிட வேண்டும். காலைக்கடன்கள் முடித்து உடைஅணிந்து கையில் அலுவலகப் பை சகிதமாய் அவசர அவசரமாக வெள்ளவத்தை பஸ் தரிப்பை நோக்கி நடக்கின்றேன்.

வெள்ளவத்தையிலிருந்து ஐந்து மணிக்கு பஸ் ஏறி அமர்ந்து கொள்கின்றேன்.இன்று அறப்பலாகந்த ஸ்கூல் செல்ல வேண்டும். புதிய இடம். மனதிற்குள் படபடப்பாக இருக்கிறது. நித்திரை தூக்கியடிக்க உறங்கி விட்டு எழுந்தபோது பஸ் நாகஸ் சந்தியை அடைந்து விட்டது. இனியும் நித்திரை கொண்டால் களுத்துறையைத் தவறவிட்டுவிடுவன். மெதுவாக எழுந்து நிற்கிறேன். ஆறுமணிக்கு பஸ் களுத்துறை வந்து சேர்ந்துவிட்டது. அங்கு நேபொட பஸ்சைத் தேடிப்பிடிக்க வேண்டும். ஸ்ராண்டில் ஒரு ஓரமாக நின்ற ஒற்றறைக்கதவு பஸ்ஸில் நின்று நடத்துனர் நேபொட நேபொட என்று கத்திக் கொண்டிருக்கின்றான். ஏறி பின்பகுதியிலிருந்த சீற் ஒன்றில் அமர்ந்து கொள்கின்றேன். முன்புறம் சீற் கிடைக்கவில்லை. ஆறேகால் மணிக்கு பஸ் புறப்படுகிறது. பஸ் நாகொடவில் நிற்பாட்டும்போது வைத்தியசாலை செல்பவர்கள் இறங்கிக் கொண்டனர். பஸ் நடத்துனர் ஒவ்வொருவரிடமும் கட்டணத்தை அறவிட்டுக் கொண்டு எனது சீற்றுக்கு வந்தபோது அறப்பலாகந்த என்று காசை நீட்டினேன். எனக்குப் பக்கத்தில் அமர்ந்தவர் மாத்தையா புதிதுபோல, நான் ஒருநாளும் காணவில்லை என்று வியப்புடன் பார்த்தார். ஓம் இன்றுதான் முதன்முதலில் போகிறேன். நான் களுத்துறைக் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர். எனக்கு இடம் தெரியாது என்றபோது அவரோ பயப்பட வேண்டாம். நான் ஸ்கூல் வாசலில் இறக்கி விடுகின்றேன் என்று ஒரு துணிவைக் கொடுத்தார். பஸ் சென்று கொண்டிருந்தது. ஒரு வீட்டிலிருந்து ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கையைக் காட்டிய படி செருப்பையும் கையில் தூக்கியவாறு ஓடி வருகின்றார். றைவர் பஸ்சை அவர் வந்து சேரும்வரை நிறுத்தி வைத்திருந்து ஏற்றிக்கொள்கிறார். அந்த அம்மா சீற்றொன்றில் அமர்ந்து கொண்டு காலில் செருப்பை மாட்டுகின்றார். றைவர் அந்த அம்மாவின் பெயரைச் சொல்லி அழைத்து

# நிஜம்

ஏ.எஸ்.சற்குணராஜா



அவருடன் உரையாடிக் கொண்டு பஸ்சைச் செலுத்து கின்றார். அந்த இடத்திலிருந்து ஒரு பத்து நிமிடம் பஸ் ஓடியிருக்கும், ஒரு சிறிய கடையொன்றின் முன்னால் பஸ் நிற்பாட்டப்படுகின்றது. கடையிலிருந்த வயதானவர் வெற்றிலைச் சுருளுடன் றைவரை நோக்கி வந்து அவரின் கையில் கண்ணாடிக்கூடாகக் கொடுக்க, றைவரோ முன்புறம் கிடந்த போத்தலில் இருந்த நீரை வாய்க்குள் விட்டுக் கொப்பளித்துவிட்டு மிகவும் ஆறுதலாக வெற்றிலையைக் கிழித்துப் பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை எல்லாம் சேர்த்து வாய்க்குள் போட்டு மென்று கொண்டே கடைக்காரருடன் கதைத்துக் கொண்டிருக்கிறார். இவனென்ன கடைக் காரன் றைவருக்குக் கதை குடுத்து நிற்க வைத்துக் கொண்டிருக்கிறான். நான் நேரத்திற்குப் போய்ச் சேரவேண்டும். இன்றைக்கு முதல்நாள் பிந்திப்போகக் கூடாது. கடைக்குப் பொருட்கள் வாங்க ஒருவர் வந்து கூப்பிடும் வரையிலும் இருவரும் கதைஅளந்து கொண்டிருக்கின்றனர். பஸ் புறப்பட்டு கிராமங்களினூ டாக மெதுவாகச் சென்றுகொண்டிருக்கின்றது. வேலிகளற்ற வீடுகள், சிறிய சிறிய கடைகள் எம்மைக் கடந்து சென்றுகொண்டிருக்கின்றன. இடையிடையே தரிப்புகளில் நிற்பாட்டி நேபொட நேபொட என்று கூவிக்கொண்டிருக்கிறான். இந்த வேகத்தில் போய் எத்தனை மணிக்குப் போய்ச்சேர்வானோ, மனம் அந்தரப்படுகின்றது. நடத்துனர் அருகில் வருகிறார். இன்னும் எவ்வளவு நேரம் எடுக்கும், கேள்வி யொன்றைத் தொடுக்கின்றேன். இன்னும் பதினைந்து நிமிடத்தில் நீங்கள் இறங்கும் இடம் வரும். இன்னும் கொஞ்சத்தூரம் செல்ல தெபுவன என்னும் ஊர் வரும். அடுத்தது நீங்கள் போற ஸ்கூல்தான் பதில் கூறுகின்றார். கொஞ்சத் தூரம் சென்றதும் தெபுவன பொலிஸ் நிலையம் தென்படுகின்றது. இடது புறத்தில் களுகங்கை அமைதியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. ஒரு ஐந்து நிமிடம் சென்றதும் நடத்துனர் கதவருகே வருமாறு அழைக்கிறார்.

"மாத்தையா முன்னுக்கு வாங்கோ" ஒற்றைக் கதவு பஸ்ஸின் பின்னுக்கிருந்து முன் கதவருகில் வந்து நிற்கவும் பஸ் நிறுத்தவும் சரியாக இருந்தது. நடத்துனர் றோட்டிற்கு மறுபுறம் கையைக் காட்டி "அதோ அதுதான் பாடசாலை றோட்டைக்கடந்து போங்கோ" பஸ்ஸால் இறங்கி றோட்டைக் கடந்து பாடசாலையை நோக்கி நடக்கிறேன். முற்புறம் உள்ள கதவு திறந்து கிடக்கின்றது. ஆங்காங்கே கம்பிகள் விழுந்து காணப் படும் முட்கம்பி வேலி ஒன்று முன்புறம் காணப்படு கிறது. திறந்து கிடந்த கதவினூடாக பாடசாலையின் எல்லைக்குள் காலடி எடுத்து வைத்து நோட்டமிடு கின்றேன். அலுவலகம் எங்கே? வலப்புறமாக உள்ள மண்டபம் ஒன்றின்முன்னால் நிறைகுடம் வைத்து மாலைகளும் வைக்கப்பட்ட மேசை ஒன்று தென்படு கிறது. அதனருகில் இரண்டு ஆசிரியர்கள் , இடப்புற மாகத் தனியான கட்டடம் ஒன்று தெரிகிறது. "அது தான் அலுவலகமாக இருக்குமோ?" நினைக்கையில் மாணவன் ஒருவன் அந்தப்பக்கமாக வருகிறான். "அலுவலகம் எங்கே இருக்கப்பன்" அதோ... என்று சொல்லி இடதுபக்கமிருந்த கட்டடத்தைக் காட்டு கின்றான். நடந்து வாசலை அடையவும் உள்ளிருந்து ஒருவர் வந்து எட்டிப்பார்க்கவும் சரியாக இருந்தது. நல்ல கறுத்த நிறமாகவும் மெல்லிய நீல நிற சேட் அணிந்து கண்ணாடியுடன் வயதான ஒருவர் வெளியே வந்து என்னைப்பார்த்து நீங்கள்..... என்று இழுத்தார். நான் தான் களுத்துறைக் கல்வி வலயத்திற்கு புதிதாக வந்திருக்கும் உதவிக்கல்விப்பணிப்பாளர் எனக் கூறி விட்டு நீங்கள்... என்று இழுத்தேன். " நான்தான் இப்பாடசாலையின் அதிபர் என்று கூறிக் கைகொடுத்து விட்டு வாயெல்லாம் காவிப்பல்லுத் தெரியச் சிரித்த வாறு வாங்கோ வாங்கோ என்று உள்ளே அழைத்துச் சென்றார். உள்ளே அதிபர் மேசையைச்சுற்றிக் கதிரைகள் போடப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்றில் அமரும்படி கையைக்காட்டுகின்றார். அமர்ந்தபடி வெளியே நோட்டமிடுகின்றேன். எங்கும் பச்சைப் பசேல் என்று காட்சியளிக்கும் கிராமம். அயலில் றப்பர்த் தோட்டங்கள் தெரிகின்றன. இறப்பர்ப்பால் நிரம்பிய வாளிகளைத் தலையில் சுமந்து செல்லும் பெண்களும் தூரத்தில் தெரிகின்றனர்.

இவ்வளவு காலமும் களுத்துறை வலயத்திற்கு தமிழர் ஒருவரை உதவிக்கல்விப்பணிப்பாளராகப் நியமித்ததை எனது சேவைக்காலத்தில் காணவில்லை. நீங்கள்தான் வந்திருக்கிறியள் இப்ப எனக்கு சரியான சந்தோசமாக இருக்கு, சேர் எந்த ஊர்? "நான் யாழ்ப் பாணத்தில் பருத்தித்துறை" என்று கூறிவிட்டு நீங்கள் எந்த ஊர் என்று கேள்வியைப் போடுகின்றேன். நான் மட்டக்களப்பிலிருந்து இங்கு வேலையின் நிமித்தம் வந்து இப்போ இங்கு செற்றிலாகி விட்டேன். என் பெயர் ராமநாதன். நான்தான் உங்கள் வலயக்கல்விப் பணிப்பாளரின் மகனுக்கு ஆங்கிலம் படிப்பிக்கிறேன். என்னுடன் அவர் நல்ல மாதிரி என்று தன்னைப்பற்றிச் சொல்லி விட்டு, நீங்கள் இங்கு வந்துவிட்டு உடனே மாற்றல் எடுத்துப் போய்விட வேண்டாம். கொஞ்சக் காலம் இருந்து இங்குள்ள மக்களுக்கு சேவை செய்து விட்டுப் போங்கோ என்று ஒரு விண்ணப்பத்தையும் வைக்கிறார். அந்தக்காலம் இங்குள்ள பாடசாலைகளில் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள்தான் படிப்பித்தார்கள். இப்போது இங்குள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுகின்றது. புதிதாக நியமனம் பெறுபவர்கள் ஆறு மாதத்திற்குள் யாராவது அரசியல் வாதியைப் பிடித்து மாற்றலாகிச் சென்று விடுகின்றனர். இதனால் பிள்ளைகள் படிப்பதில் பெரிய இடைஞ்சல் , இந்தப் பிள்ளைகள் இங்கேயுள்ள றப்பர் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகள், வறுமைப்பட்டதுகள். களுத்துறை வலயத் தமிழ்ப் பாடசாலைகளின் நிலையைப் புட்டு வைக்கின்றார். பயப்படாதையுங்கோ நான் ஆறுமாதத்தில் ஓடிவிட மாட்டன் என்று சொல்லிவிட்டு என்ன இன்று விசேடம் ஏதாவது இருக்கா ? நிறைகுடம் வைத்திருக்கு. மாலையும் வைத்திருக்கிறார்கள் என்று அதிபரிடம் வினாவ அவரும் ஓம் எங்கள் பாடசாலையிலிருந்து நடனத்தில் தேசியமட்டப் போட்டிக்கு ஒரு மாணவி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு நடனம் பழக்க இங்கு யாரும் இல்லை. வேறுபாட ஆசிரியைகள்தான் பழக்கி இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்கள். தேசிய மட்டப் போட்டிக்கு ஏற்றமாதிரிப் பழக்க இவர்களால் ஏலாது. எனவே தெரிந்தவர் ஒருவர் மூலம்

கலாசாரத் திணைக்களத்துடன் கதைத்து ஒரு ஒழுங்கு செய்துள்ளேன். இப்ப ஒன்பது மணிக்கு வருவார்கள். இந்தப்பிள்ளைக்கு மட்டுமல்ல இங்கு நடனம் எடுக்கும் பிள்ளைகளுக்கும் மூன்று நாள் வகுப்பு எடுக்க வுள்ளார்கள். அதான் அவர்களை வரவேற்க இந்த ஏற்பாடு. இப்படி ஒரு நல்லநாளிலதான் நீங்களும் வந்திருக்கிறியள். நீங்கள்தான் நிகழ்வை ஆரம்பித்து வைக்க வேணும். அதிபர் வேண்டிக் கொள்கிறார்.

2007ல் களுத்துறை வலயத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவுடன் எத்தனை தமிழ்மொழி மூலப்பாடசாலைகள் அவற்றிற்கு எப்படிப்போவது போன்ற விபரங்களை அங்கு ஏற்கனவே வேலை செய்பவர்களிடம் கேட்டுக் குறிப் பெடுத்து விட்டேன். இருபத்திரண்டு தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் அவற்றில் பதினாறு முஸ்லிம் பாடசாலைகள், ஆறு தமிழ்ப் பாடசாலைகள். தமிழ்ப் பாடசாலைகள் ஆறும் தொடங்கொட கோட்டத்தில் அமைந்திருந்தன. நியமிக்கப்பட்டு இரண்டாம் நாள் இப்பாடசாலையைத் தரிசிக்கப் புறப்பட எண்ணினேன்.

அறப்பலாகந்த பாடசாலை தரம் ஒன்றிலிருந்து சாதாரணதரம் வரையான வகுப்புகளைக்கொண்ட தமிழ்ப்பாடசாலை. இங்கு இருநூற்று ஐம்பது வரை யான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். பாட சாலையில் விஞ்ஞான அழகியற்பாட ஆசிரியர்கள் இல்லை. பெரியளவு பெறுபேறுகளும் பாடசாலையி லிருந்து வெளிப்படவில்லை. அதிபர் எவ்வளவோ முயற்சி எடுத்தும் ஆசிரியர் பற்றாக்குறை , வளப் பற்றாக் குறை, பெற்றோரின் ஏழ்மை காரணமாக பாடசாலையின் அடைவை உயர்த்த முடியாமை காணப்படுகின்றது.

பாடசாலையின் அதிபரும் நன்றாகக் கதைக்கக்கூடியவர். யாழ்ப்பாணம் எப்படி இருக்கு,





உங்கள் குடும்பம் எங்கே? என்று வினவுகிறார். நான் யாழ்ப்பாணத்தை விட்டு வந்து கிட்டத்தட்ட பத்து வருடம் வரையில் ஆகின்றது. தற்போதைய நிலைமை பற்றி பெரிதாகத் தெரியாது. பத்திரிகை பார்த்து அறிவது மட்டுந்தான், கூறிக்கொண்டிருந்தபோது பாடசாலையை நோக்கி பஜிரோ போன்ற வாகனம் ஒன்று வருகின்றது. அதிபர் வாயெல்லாம் பல்லாகச் சிரித்துக் கொண்டே சரியான நேரத்திற்கு வந்திட்டாங்கள் என்று கூறியபடி வாகனத்தை நோக்கி நடக் கின்றார். முன்புறமிருந்து அதிகாரி போன்ற ஒருவரும், பின்புறமிருந்து ஆசிரியை போன்ற ஒருவரும் மாணவி கள் போன்ற இருவரும் இறங்குகின்றனர். அதிபர் அவர்களை அலுவலகத்திற்கு அழைத்து வந்து போடப் பட்டிருந்த கதிரைகளில் அமரச் சொல்கின்றார். அதிகாரி தன்னை அறிமுகப்படுத்தி பின் ஏனைய மூவரையும் அறிமுகஞ் செய்கின்றார்.அதிபர் தன்னை அறிமுகஞ் செய்துவிட்டு என்னையும் அறிமுகம் செய்கின்றார். அவர்கள் எழும்பி அதிபருக்கும், எனக்கும் கைகொடுத்துவிட்டு அமர்கின்றனர். முதலில் ரீ ஒன்று குடித்துவிட்டுக் கதைப்பமோ. அதிபர் கேட்க அவர்களும் தலையசைக்க தயாராக வைக்கப் பட்டிருந்த ரீ பரிமாறப்படுகின்றது. ரீ குடித்து முடித்த வுடன் அதிகாரி தான் புறப்படுவதாகவும் இரண்டு மணிக்கு வந்து ஏற்றிச் செல்வதாகவும் கூறிவிட்டு வாகனத்தை நோக்கிச் செல்கின்றார். அதிபர் கூடச் சென்று வழிஅனுப்பி விட்டு வருகின்றார்.

வந்திருக்கும் மூவரும் தங்களுக்குள் சிங்களத்தில் கதைத்துக் கொள்கின்றனர். அவர்களின் உரையாடலி லிருந்து இந்தப்பகுதிக்கு இன்றுதான் முதல்முதலில் வந்திருக்கின்றார்கள் என்று தெரிகிறது. எனக்கும் இது முதல்முறைதான் அவர்களிடம் கூறுகின்றேன். எனக்குள் சிந்தனை துளிர்விடுகின்றது. சகோதர இனத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். எப்படிப் பரதநாட்டியம் பழக்க வந்திருக்கிறார்கள். சில வேளை இந்தப் பாடசாலைப் பிள்ளைகள் கண்டிய நடனம்தான் படிக்கிறவர்களோ. அதைத்தான் பழக்க வந்தார்களோ. இந்த விபரத்தை அதிபரிடம் கேட்கவில்லையே.

அதிபர் ஆயத்தம் செய்யச்சொல்லி சொல்வதற் காக என்னைக் கதைத்துக் கொண்டிருக்கச் சொல்லி விட்டு மண்டபத்தை நோக்கிச் செல்கின்றார். என்னுள் எழுந்த புதிரை அவிழ்க்க கதையைத் தொடங்குகின்றேன். உங்கள் பெயரென்ன? எந்த ஊர்? எங்கு வேலைசெய்கிறீங்கள்? ஆசிரியர் போல் தோன்றியவரிடம் கேள்விகளைத் தொடுத்தேன். அவரோ தன் பெயர் கீத்மா என்றும் இந்தப் பிள்ளைகள் தனது மாணவிகள் என்றும் ஒருவரின் பெயர் திலினி, மற்றையவரின் பெயர் ஹேமாலி என்றும் கூறிவிட்டு தான் நுகேகொடையில் வசிப்பதாகவும் அங்கு பரதநாட்டியப்பள்ளி ஒன்றை நடாத்தி வருவதாகவும் கூற, நல்லது கனக்கப் பிள்ளைகள் படிக்கிறார்களோ எனக்கேட்டதற்கு ஓம் இருபத்திஎட்டு மாணவிகள் இப்போது பழகுகிறார்கள் என்றார். நீங்கள் பரதநாட்டியத்தை எங்கு கற்றீர்கள்? மீண்டும் எனது கேள்வி, நான் இந்தியாவின் கலா சேத்திராவில் மூன்று வருடம் கற்றேன். எனக்கு நன்றாகத் தமிழ்பேச முடியும். என்னுடன் வந்த மாணவிகளும் ஓரளவு பேசுவார்கள் என்று பதில் சொல்லிவிட்டு தனது கைப்பையைத் திறந்து சிறிய அல்பமொன்றை எடுத்துக் காண்பிக்கின்றார். அதில் ஒரு படத்தில் இந்திய நடிகை சுகன்யாவுடன் நிற்கின்றார்.

வாருங்கள், அதிபர் அழைக்க நாங்கள் எல்லோரும் மண்டபம் நோக்கி நடக்கின்றோம். வாசலில் மாலையுடன் மாணவர்கள் வரவேற்கத் தயாராக இருக்கின்றனர். நிறைகுடம் வைக்கப்பட்ட இடத்தை நெருங்கியதும் மாலை அணிவிக்கப்படு கின்றது. நான் அதிபருக்கும் ஒரு மாலையை அணிவியுங்கள் எனச் சொன்னதும் அதிபர் தனக்கு வேண்டாம் என்கிறார். நான் கட்டாயப்படுத்தி அதிபருக்கும் மாலை அணிவிக்கின்றேன். அடுத்து எல்லோரும் குத்து விளக்கு ஏற்றிவிட்டு மேடையில் அமர்கின்றோம். முதலில் இறைவணக்கம், ஓர் ஆசிரியர் அறிவிக்கின்றார். மாணவிகள் இருவர் தேவாரம் பாடுகிறார்கள். முடிந்தவுடன் அதிபர் இப்போது தலைமை உரையாற்றுவார். மறுபடியும் அறிவிக்கும் ஆசிரியர். அதிபர் எழுந்து என்னையும், நடனம் பழக்க வந்தவர்களையும் முதலில் விளித்து விட்டு பின்னர் ஏனையவர்களையும் விளித்து தனது தலைமையுரையை ஆரம்பிக்கின்றார். இன்று எங்களுக்கு இரட்டிப்புச் சந்தோசம், ஒன்று எங்கள் கல்வி வலயத் திற்கு ஒரு தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் வந்துள்ளார். அவர் முதலில் எங்கள் பாடசாலைக்குத் தான் வருகை தந்துள்ளார். அவர் எங்களது பாட சாலையின் வளர்ச்சிக்குத் தன்னாலான உதவிகளை வழங்குதல் வேண்டும். அடுத்து எங்களது மாணவி களுக்கு நடனம் பழக்குவதற்கு இந்தியாவில் பயின்ற ஓர் ஆசிரியை முன்வந்துள்ளார். இரண்டு விடயங் களும் தற்செயலாக ஒரே நாளில் நடந்துள்ளது. இதை ஒரு நல்ல சகுனமாக நான் கருதுகின்றேன். மாணவர் கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்


அதிபர் பேசிமுடித்து அமர்கின்றார். அறிவிக்கும் ஆசிரியர் தற்போது உதவிக் கல்விப் பணிப்பாளர் உங்களுக்கு உரையாற்றுவார் எனப் பகர்கின்றார். எழுந்து அதிபர், நடனம் பழக்க வந்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை விளித்து எனது பேச்சைத் தொடங்குகின்றேன். நான் ஆசிரியராக இருந்தபோது அவிசாவளையில் ஏழு வருடம் ஆசிரியராக இருந்துள்ளேன். கொழும்பிலிருந்து அவிசாவளைக்கு ஒன்றரை மணிநேரப்பயணம் செய்ய வேண்டும். அப்படி இருந்தும் நான் அங்கிருந்து ஓடி வரவில்லை. இங்கு வரவும் தூரம்தான். ஆனால் நான் ஓடிப்போய்விட மாட்டேன். என்னால் முடிந்தளவு உங்களுக்கு உதவுவேன். அடிக்கடி வருவேன், அவதானிப்பேன். உங்களுடைய இந்த நடன முயற்சிக் குப் பலன் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். இதற்கு உதவவந்திருப்பவர்களைப் பாராட்டுகின்றேன். முதல் அனுபவம், பெரிதாகப் பேச வரவில்லை. சுருக்கமாக முடித்துக்கொள்கின்றேன். அடுத்து கீத்மா தமிழில் உரையாற்ற, இறுதியில் நன்றியுரையுடன் ஆரம்ப நிகழ்வு நிறைவு பெறுகிறது.

முதலில் போட்டிக்குப் போகும் மாணவிக்குப் பழக்கிவிட்டு அதன்பின் தரம் 10, தரம் 11 மாணவி களுக்குப் பழக்கலாம். ஒரு மணிக்கு முடித்து விட்டு சாப்பிட்டுவிட்டுத்தான் எல்லோரும் போக வேணும். நான் சாப்பாடு ஒழுங்கு செய்துள்ளேன். என்று கூறிய அதிபர் நடனம் பழக்குவதற்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ள அறைக்கு அழைத்துச் செல்கின்றார்.

கீத்மா நட்டுவாங்கம் கொலுப்பித்துக் கொண்டு ஜதி சொற்கட்டை உச்சரிக்க திலினியும், ஹேமாலியும் நடனம் ஆடிக்காட்டி மாணவியை உற்சாகப்படுத்தி ஆட வைக்கின்றனர். அதன்பின் தரம் பத்து மாணவர்களுக்கும் அது முடிய தரம் பதினொன்று மாணவர்களுக்கும் நடன வகுப்பு நடை பெறுகின்றது. முத்திரைகளைப்பற்றிப் பார்ப்போம். ஒற்றைக்கை முத்திரைகள் இருபத்தி எட்டு, இரட்டைக்கை முத்திரைகள் இருபத்திநான்கு என்று சொல்லிவிட்டு ஒற்றைக்கை முத்திரைகளை ஒவ்வொன்றாகச் சொல்லி அபிநயம் பிடித்துக்காட்டுகின்றார். பதாகம், திரிபதாகம், அர்த்தபதாகம், கர்த்தரீமுகம், மயூரம்... சொல்லிக்கொண்டு போகின்றார். சிங்களவ ராக இருந்தாலும் இச்சொற்களின் உச்சரிப்பு நன்றாக இருக்கிறது. கீத்மாவின் தமிழும் இப்பாடசாலை மாணவர்களின் தமிழும் ஒரே மாதிரியாக இருந்ததால் தொடர்பாடல் பிரச்சினை எதுவும் எழவில்லை.

சரியாக ஒரு மணிக்கு மதிய உணவு வந்து விட்டது. பயிற்சி கொடுப்பதை முடித்துவிட்டு நடனம் பழக்குபவர்களும் அதிபரின் அலுவலகத்திற்கு வருகை தருகின்றனர். சந்தோசமாகக் கதைத்தபடி உணவு அருந்தும் வேளையில் கீத்மா என்னிடம் ஒரு கேள்வியைத் தொடுக்கின்றார். சிங்களவர்களாகிய நாங்கள் பரதம் பழகி நடராஜரை வைத்து அரங்கேற்றமும் செய்கின்றோம். ஆனால் உங்கள் யாழ்ப்பாணத்தில் கண்டிய நடனத்தை யாரும் பழகுவதில்லையே, ஏன்?

வாகனம் வந்து அவர்களை ஏற்றிச் செல்கின்றது. நானும் அதிபரிடம் விடை பெறு கின்றேன். சில மழைத்துளிகள் மண்ணை வந்து முத்தமிட எழுந்த மண்வாசனையொன்றை உணர்ந்தபடி கீத்மாவின் கேள்வியை மனசில் சுமந்தபடி நானும் வீடு செல்வதற்காக பஸ்தரிப்பை நோக்கி நடக்கின்றேன்.



தி.ஜெயசங்கரின் கவிதைகள்

## தாயினும் மேலான அன்புடையோராய்...

இயற்கையில் மனிதர்
மனிதரும் இயற்கை...

கடவுளர் உளரேல்,
தாயிலும் மேலான அன்புடையோராய்
எமக்கவர் இருப்பர்...

கோபம் கொள்ளார்.
தண்டிக்கவும் மாட்டார்.
சாம, பேத, தான, தண்டம்
எவையுமே அவர்கள் கொள்ளார்...

கடவுளர் உளரேல்,
தாயிலும் மேலான அன்புடையோராய்
எமக்கவர் இருப்பர்...

போக்குவரத்துக்கு இடைஞ்சலாக,
சந்திகளிலும், சாலைத்திருப்பங்களிலும்,
காலைத்தூக்கி நாய்கள் சிறுநீர்க்கழிக்க,
தெருவோரங்களிலும், சந்துபொந்துகளிலும்
மற்றைய மதத்தினர் கிலேசம் கொள்ள,
விறைத்துப் பெருத்து,
நிற்கவும் மாட்டார், இருக்கவும் மாட்டார்....

கடவுளர் உளரேல்,
தாயிலும் மேலான அன்புடையோராய்
எமக்கவர் இருப்பர்...

நேரடியாகவோ, முகவர்வழியாகவோ
கையூட்டு வாங்கவும் மாட்டார்,,.
திரிவதற்கு தங்கத்தில் வாகனமோ
தங்குவதற்கு மாடமாளிகையோ
கேட்கவும் மாட்டார்...
ஒருபோதும் ஏற்கவும் மாட்டார்
ஒப்பந்தங்கள் ஏதும் போட்டு
பிரச்சனைகள் தீர்க்க வரவும் மாட்டார்...
பலியோ, படையலோ ஏதுவுமே கேட்கவும் மாட்டார்...

இயற்கையில் மனிதர்
மனிதரும் இயற்கை..

கடவுளர் உளரேல்,
தாயிலும் மேலான அன்புடையோராய்
எமக்கவர் இருப்பர்....

எவரையும் அவர்கள்
வெறுக்கவும் சொல்லார்,..
ஒதுக்கவும் சொல்லார்,...
கொல்லென்றும் சொல்லார்..
தீட்டென்றும் சொல்லார்...

இயற்கையில் மனிதர்
மனிதரும் இயற்கை..

கடவுளர் உளரேல்,
தாயிலும் மேலான அன்புடையோராய்
எமக்கவர் இருப்பர்....

## காலம் வாய்ப்பாகி இருக்கிறது...

ஆழமானதும் நுண்ணிதானதுமான
வாசிப்பிற்கு உரியதாகி இருக்கின்ற உலகில்
பரீட்சைக்கான பாடத்திட்ட வாசிப்புக்குள்,
மூழ்கடிக்க முனைகிறது முறைமை.

தன்னை அறியும், சூழலை அறியும்
தன்னில் சூழலை, சூழலில் தன்னை
அறிதலின் வாசிப்பு
கல்வியாகி மலர்க அறிவு
காலம் வாய்ப்பாகி இருக்கிறது.

முகவர்கள் செயலற்றுப் போயினர்
முகவர் நிலையங்கள் செயலிழந்து போயின.
நம்பிக்கையின் பிறப்பிடம்
மீளவும், துளிர்க்கவும், தளைக்கவும்
காலம் வாய்ப்பாகி இருக்கிறது.

உள்ளம் பெரும் கோயில் ஆகிறது
புத்தியில், அறிவு ஆலயம் ஆகிறது.
உடலும் உள்ளமும்,
புத்தியின் சக்தியும்
ஆக்கவும் காக்கவுமான,
உணவே மருந்தாகிய அறிவுமுறை
காலனியம் புதைத்துவைத்த,
நவீன புதைகுழியில் இருந்து
மீண்டு எழுகிறது.
காலம்! வாய்ப்பாகி இருக்கிறது.

அறிவும், உணர்வும், அனுபவமும்
இணைந்த அறிவுப் பெருஞ்சுடர் படர்க!
ஆக்குதல் காத்தல் அணையாது ஒளிர்க!
காலம்! வாய்ப்பாகி இருக்கிறது....

## மண்ணில் நல்லவண்ணம் வாழ ...

வேகமாய் மிகவேகமாய்
விரைந்து வளர்கிறது உலகம்.
ஈடுகொடுத்துப் போகவில்லையெனில்,
இருப்பற்றுப் போய்விடுவீர்!
விற்பனர் எச்சரிப்பில்
விதிர்விதிர்த்தோம்
வேகங்கொண்டோம்!

ஏனென்றும் தெரியவில்லை.
எதற்கென்றும் புரியவில்லை.
விதிர்விதித்தோம் வேகங்கொண்டோம்!

வீடு வாசல், தொழில், சொத்து,
சேமிப்பு, காப்புறுதி, கட்டுப்பணம்
சுற்றம் சுழன்றடிக்கும் வாழ்வில்
விருத்தி கண்டோம்.

கேள்வியற்ற
கனவு வாழ்க்கை விருத்தியின்
வேகச்சூழலில்
அளவற்று அள்ளுண்டோம் .

இயற்கையின்
நுண்துளிர்ப்பில்
வேகங்கெட்டு உலகமே அடக்கம்.

தனித்து கிடக்கின்றோம்
ஏது செய்வதென்று அறியாமல்!

நின்று போய்விட்ட ஓட்டத்தில்
வெளிப்பட்டது,
இலக்கற்ற ஓட்டம்,
பாதுகாப்பற்ற வாழ்வு.

அதிகாரம் நிலை நிற்க,
அதலபாதாளம் தேடி,
எதிரிகளை இலக்கு வைக்கும்
அதிநுட்ப ஆயுதங்கள்
தும்மலுக்கும் இருமலுக்கும்
முகமழிந்து கிடக்கின்றன.

மண்ணில் நல்லவண்ணம் வாழ...
உடலெதிர்ப்பு சக்திகளே
பாதுகாப்பாம் மனிதருக்கு



சி.ஜெயசங்கரின் கவிதைகள்

## தம் நலனெனில் எவரையும் கைவிடுவர் இவர்

உயிர் காக்கப்போரிடுவோர்,
உரிமை காக்கப்போரிடுவோர்
துச்சமில்லை இவர்க்கு.
தம் நலனெனில்,
எவரையும் கைவிடுவர்
இவர்கள்.....

நண்பர்கள், எதிரிகள்,
தியாகிகள், துரோகிகள்,
சனநாயகவாதிகள், பயங்கரவாதிகள்
அழுத்தமாகக் கட்டமைத்த,
அச்சுறுத்தும் பிரிகோடுகள்
கலங்கி மறையும்
காலம் நிகழ்கிறது....

தெய்வங்கள் என்றும்,
தியாகிகள் என்றும்
போற்றித் துதிபாடி
பிரலாபித்துத் திரிவாரெனினும்,
தம் நலனென்று வருமெனில்,
எவரையும் கைவிடுவர்
இவர்கள்.

## உணர்வால் இணைந்து நாமெழுவோம்.

ஒருபொழுது உடலால் தனித்திருப்போம்.
ஒவ்வொருகணமும் உணர்வால் இணைந்தெழுவோம்.


மனிதம் எங்கும் தளைத்து ஓங்கிட,
ஒவ்வொரு பொழி நிலமும்,
ஒவ்வொரு துளி நீரும்,
கலந்து, மகிழ்ந்து, நெகிழ்ந்திட
விதைப்போம்! நடுவோம்! விளைவுசெய்வோம்!

பசியும் பிணியும் அற்று,
பல்லுயிரும் மகிழ்ந்து கொண்டாடும்,

உலகம் எமதென எமதென,
உணர்வால் இணைந்து நாம் எழுவோம்!.

ஒருபொழுது உடலால் தனித்திருப்போம்.
ஒவ்வொருகணமும் உணர்வால்
இணைந்தெழுவோம்.

மனிதம் எங்கும் எங்கெங்கும் தளைத்து ஓங்கிட,
உணர்வால் இணைந்து
நாம் எழுவோம்!
உலகம் எமதென எமதென,
உணர்வால் இணைந்து
நாம் எழுவோம்!.



சி.ஜெயசங்கரின் கவிதைகள்

## விபத்தாய் வாய்க்கப்பெற்றது...

முகவரிகள் அற்ற,
கூடகோபுரங்கள் அற்ற,
புராதனமான,
ஆதியான நம்பிக்கை
விபத்தாய் வாய்க்கப் பெற்றது.

தனித்து விடப்பட்டதன்
அச்சத்தில்,
மரணபயத்தில்
கேள்விக்குறி ஆகிவிட்ட
நாளை என்ற தேவை,
மனதிலும், புத்தியிலும்
சுடர் விட்டுப் படர்ந்து
பிரகாசிக்கும்
புராதனமான,
ஆதியான நம்பிக்கை
விபத்தாய் வாய்க்கப்பெற்றது.

மனிதரில் இயற்கையும்
இயற்கையில் மனிதரும்
துளிர்தலும், உதிர்தலும்
வாழ்தலும், வீழ்தலும்
நெஞ்சுறைய
விகசிக்கும் புத்தியில்
தன்னை,
பிறரை,
சமூகங்களை,

முழு உலகை
அதற்கும் அப்பால்....
கனவு காணும்
கற்பனை பண்ணும்
சிந்திக்கச் செய்யும்
வாய்ப்பு
விபத்தாய் வாய்க்கப் பெற்றது....

## உள்ளுறைந்து ஆழ்ந்தகன்று அறியும் காலம்

உலகத்தைப் படிக்கும் காலம்
உள்ளுறைந்து
உலகத்தைப் படிக்கும் காலம்...

மனிதர்கள் இல்லாதுபோகும் உலகை
கற்பனை செய்வது எளிதாகி வருகிறது....

அவலங்களும், அனர்த்தங்களும்
இயல்பான வாழ்க்கை ஆகிவிட்ட...
மனித சமூகங்களும் ஆச்சரியமுறும் காலம்....

குத்துமதிப்பாகவே, எதிர்க்கொள்ளப்பட்டு
வருகிறது ஆபத்து...

உலகத்தைப் படிக்கும் காலம்
உள்ளுறைந்து
உலகத்தைப் படிக்கும் காலம்...

கண்டம்விட்டு கண்டம் பாயும்
கோளம்தாண்டி கோளம் பாயும்
வித்தையறிந்த வீறாப்பு...

வரலாறு கொண்ட
கொள்ளை நோய்களை
கவனத்திற் கொள்ளாத செய்தி ஏதோ?

உலகத்தைப் படிக்கும் காலம்
உள்ளுறைந்து
உலகத்தைப் படிக்கும் காலம்....

ஆதிக்க நோக்கங்கள் ஆழ்ந்தகன்று அறிவோம்!
வாழ்வு செய்வோம் நல்வாழ்வு செய்வோம்!

உலகம் எல்லாம் தழைத்தோங்க
வாழ்வு செய்வோம்!
மனிதர் நாங்கள் வாழ்வு செய்வோம்!.



# மருந்தால் வருத்தம்

எம்.கே.முருகானந்தன்

"ஒரே உடம்பு உழைவும் இருமலுமாகக் கிடக்கு. மருந்து எடுத்தும் மாறவில்லை" என்றவள் பேசி முடிவதற்கிடையில் பக்கென இருமத் தொடங்கினாள். திடுக்கிட்ட நான் சட்டென கதிரையை தள்ளி சற்று அப்பால் நகர்ந்து கொண்டேன்.

பரந்த மனசு அவளுக்கு. தனக்கு கிடைத்தது மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற பொதுநல நோக்கு!

உயிர்கொல்லி கொரனோ வைரஸ் வந்தும் கூட இருமும் போதும் தும்மும் போதும் சளித் துகள்கள் பராவாது துணியால் மறைத்துக் கொள்ள வேண்டும் என்ற அரிவரிப் பாடத்தைக் கூட இன்னமும் படித்துக் கொள்ளாதிருக்கிறாள். இவள் மட்டுமல்ல சமூகத்தில் இவள் போன்ற பலர் நிரம்பிக் கிடக்கின்றனர். பஸ்சில், கடைகளில், கூட்டங்களில், தியேட்டர்களில் உணவகங்களில் ... எங்கெல்லாம் மனிதர்கள் நிரம்பிக் கிடக்கிறார்களோ அங்கெல்லாம் துணியால் மூடாமல் தும்மியும் இருமியும் கிருமிகளை வாரி இறைக்கும் வள்ளல்களை நிறையவே காணலாம்.

அவளுக்கு காய்ச்சல் வந்து 10 நாட்களாகிறது. அருகில் உள்ள மருத்துவரிடம் காட்டி மருந்து எடுத்திருந்தாள். சரியான அன்ரிபயோடிக் மருந்து தான் கொடுத்திருந்தார்கள். மருந்து முடிய காய்ச்சல் ஓரளவு தணிந்து விட்டது. ஆனால் இருமல் குறைந்த பாடில்லை.

அவ்ளைப் பரிசோதித்தபோது சற்று காய்ச்சல் இருப்பது தெரிந்தது. ஆனால் சளியோ நெஞ்சு நிறைய முட்டிக் கொண்டு கிடந்தது.

விரல் நுனியில் அவளது இரத்த சீனியின் அளவை குத்திப் பார்த்தபோது நான் மயங்கி விழாத குறை. பார்த்த எனக்கே அப்படியென்றால் அவள் கோமாவில் தான் போக வேண்டிய நிலையில் இருந் தாள். 410 என்று திகிலூட்டியது. பிரஸர் பார்த்தபோது அதுவும் எகிறிக் கிடந்தது. 180/100 எனப் பயங் காட்டியது.

"ஏனம்மா பிரஸர், நீரிழிவு குளிசைகள் போடவில்லையா" என கோபத்தை அடக்கிக்கொண்டு கேட்டேன்.

"இல்லை ஐயா. காய்ச்சலுக்கு தந்த மருந்துகளோடை மற்ற எல்லாக் குளிசைகளையும் சேர்த்துப் போட என்னமோ மாதிரிக் கிடந்தது. வயிற்றைப் பிரட்டி பசியும் இல்லாமல் போச்சு. அதுதான் பிரஸர் டயபற்றிஸ் மருந்துகளை நிப்பாட்டிப் போட்டன்."

"நீங்கள் வழக்கமாகப் போடுகிற மருந்துகள் தானே அவை. அதுகளுக்கு ஏன் பசியில்லாமல் போகுது. காய்ச்சல் சளி வந்ததால்தான் உங்களுக்கு பசிக்காது வயிற்றையும் பிரட்டுகிறது. மருந்துகளை ஒழுங்கா போட்டால் தானே நோய் குணமாகும். பசியும் வரும்"

நீரிழிவு இருந்தால் வேறு பல நோய்களும் வரலாம். வந்த நோய்களும் மோசமாகும் முக்கியமாக புண், காய்ச்சல் சளி போன்ற எந்தத் தொற்று நோய் என்றாலும் நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்காவிட்டால் விரைவில் குணமடையாது. மாறாக, மோசமாகவே செய்யும். இதற்குக் காரணம் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகரித்து இருப்பதால் கிருமிகள் பெருகுவதேயாகும்.

கட்டுப்படாத நீரிழிவு காரணமாக கால் புண்கள் மோசமாகி கால்களை அகற்ற நேர்வதை அறிவீர்கள். அது போலத்தான் கட்டுப்பாட்டில் இல்லாத நீரிழிவினால் வேறு நோய்களும் மோசமாகும். இந்தப் பெண்ணுக்கும் அவ்வாறுதான் நடந்தது. மருந்து போடாததால் நீரிழிவு மோசமாகியிருந்தது. இதனால் சுவாசப் பையில் அவளுக்கு ஏற்பட்டிருந்த சளித் தொல்லை முழுமையாகக் குணமடைய மறுத்தது.

அது மாத்திரமல்ல நீரிழிவு அதிகமானால் மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரகக் பாதிப்பு, கண் பார்வை இழப்பு போன்ற வேறு பல மோசமான தாக்கங்களும் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் உண்டு. அதே போல பிரஸர், கொலஸ்டரோல் போன்றவற்றாலும் ஏற்படலாம். எனவே வேறு நோய்கள் வந்தாலும் இந்த மருந்துகளை நிறுத்தக் கூடாது, மருத்துவ ஆலோசனையுடன் தொடர்ந்து போட வேண்டும் என்பதை அவளுக்கு புரிய வைக்க வேண்டியதாயிற்று.

நீரிழிவு, பிரஸர், கொலஸ்டரோல், தைரொக்சின் போன்ற நோயுள்ளவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் அவற்றிற்கான மருந்துகளை தங்கள் மருத்துவரின் ஆலோசனை இன்றி நிறுத்தவே குறைக்கவோ கூடாது.

அடுத்த வாரம் அவள் வந்தபோது அவளது காய்ச்சல் இருமல் யாவும் காணாமல் போனோர் பட்டியலில் சேர்ந்திருந்தன.

பிரஸர், சீனி அளவுகளும் கட்டுப்பாட்டில் வந்திருந்ததை அவளுக்கு சொன்னேன்.

,"அப்ப சல ரோக பிரசர் குளிசைகளை நிப்பாட்டலாமோ" என்று அப்பாவித்தனமாகக் கேட்டாள்.

எனது மொட்டந்தலை தகதகவென பற்றி எரியத் தொடங்கியது போல உணர்ந்தேன்.



# நேர்காணல்

சபாபதி உதயணன் என்ற இயற்பெயரையுடைய சித்தாந்தன் ஈழத்துப் படைப்பாளிகளில் முக்கியமானவர். யாழ்ப்பாணம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். காலத்தின் புன்னகை (2000) துரத்தும் நிழல்களின் யுகம் (2010) என்ற இவரது இரு கவிதைத் தொகுப்புகளும் கவனக் குவிப்புக்கு உரியன. மேலும், மறுபாதி சிற்றிதழின் ஆசிரியராகவும் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது


சித்தாந்தன்
சந்திப்பு : இ.சு.முரளிதரன்


**இ.சு.முரளிதரன்:**

**உதயணன் “சித்தாந்தனாக” மாற்றமடைந்த பின்னணியைத் தெளிவுபடுத்துங்கள்.**

**சித்தாந்தன்:**

1995 இல் ஏற்பட்ட யாழ்ப்பாண இடப் பெயர்வுக்குப் பின்னர் நான் முல்லைத் தீவு புதுக்குடியிருப்பில் வசித்தேன். இந்தக் காலப்பகுதியிற்தான் நான் கவிதைகள் எழுதத்தொடங்கினேன். என்னுடைய முதற் கவிதை நமது ஈழநாட்டில் வெளிவந்தது. அதனை வாணிதாசன் என்ற புனைபெயரில் எழுதினேன். தொடர்ந்தும் அந்த இதழில் கவிதைகளை எழுதினேன். பின்னர் வெளிச்சம் இதழில் கவிதைகள் எழுதத்தொடங்கினேன். இக் காலப்பகுதியிற்தான் கவிஞர் கருணாகரனுடனான நட்பு ஏற்பட்டது. அதுக்குக் காரணமாக இருந்தவர் வளநாடன். வெளிச்சம் இதழுக்கு எனது முதல் கவிதையை நான் அனுப்பிய பின்னர் கருணாகரனைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்தான் ஏற்கனவே வாணிதாசன் என்ற பெயரில் கவிஞர் ஒருவர் இருந்ததை தெரியப்படுத்தினார். எனது சொந்தப் பெயரில் ஒரு எழுத்தாளரும் இருக்கின்றார். எனவே பெயரை மாற்றினால் நல்லது என்ற அபிப்பிராயத்தைச் சொன்னார். சில பெயர்களையும் எனக்கு பரிந்துரைத்தார். எனது அப்பாவின் பெயரை இணைத்ததாக சபாபதிகுமாரன் போன்ற வகை மாதிரிகளில் அமைந்த பெயர்கள். நான் சித்தாந்தன் என்ற பெயரை எனக்குச் சூட்டிக்கொண்டேன் தொடர்ந்தும் இந்தப் பெயரிலேயே எழுதி வருகின்றேன். இதுதான் சித்தாந்தன் என்ற பெயரின் பின்னாலுள்ள வரலாறு.






**இ.சு.முரளிதரன்:**

**துன்பியலையும் அனுதாபத்தையும் மட்டுமே தொற்றச் செய்யாமல் அனைத்து அதிகார மையங்களை நோக்கிய எதிர்ப்புணர்வினை முன்னிறுத்தும் போக்கினையும் உங்கள் படைப்புக்களில் இனங்காண முடிகின்றதே.**

**சித்தாந்தன்:**

அடிப்படையில் நான் அதிகார மனோநிலைகளுக்கு எதிரானவன். எப்போதும் சுயாதீனமாக இயங்கவேண்டும் என்ற விருப்புடையவன். என்னுடைய இந்த நிலைப்பாடுதான் என்னுடைய கவிதைகளிலும் வெளிப்படுகின்றது. நீண்ட துன்பியல் வரலாற்றைக் கொண்ட ஒரு இனத்தின் கவிஞன் என்ற அடிப்படையில் எனது கவிதைகளில் கடந்த காலத்தை வரலாற்றை அணுகும் முறைமையுடன் பதிவு செய்திருக்கின்றேன். என்னால் எழுதப்பட்ட நீள் கவிதைகள் யாவுமே வரலாற்றுச் சாயல் கொண்டவை. எனது ஆரம்ப காலக் கவிதைகள் – “காலத்தின் புன்னகை” தொகுப்பில் உள்ள கவிதைகள்- பலவும் துன்பியலையே அதிகமும் வெளிப்படுத்தும் கவிதைகள். அனுதாபத்தைக் கோரி நிற்காது நம்பிக்கை உணர்வை வெளிப்படுத்தி நிற்கும் கவிதைகள் அவை. ஆனால் தொண்ணூறுகளின் பிற்பகுதியில் என்னிடம் நம்பிக்கை வரட்சி ஏற்படத் தொடங்குகின்றது. எல்லாவற்றுக்கும் பின்னாலுள்ள அதிகாரமையங்கள் என்னை அலைக்களிக்க தொடங்குகின்றன. நம்பிக்கையை எழுதுவதென்பது அந்தச்சூழலில் எனக்கு அபத்தமாகத் தெரிந்தது. எனவே மக்களை அச்சுறுத்தும் அதிகார மையங்களை நோக்கிய எதிர்ப்புணர்வை எனது கவிதைகளில் வெளிப்படுத்தத் தொடங்கினேன். எனது இரண்டாவது தொகுப்பிலுள்ள கவிதைகள் இதனையே வெளிப்படுத்துகின்றன.


மிகு உணர்சிகளிலும் நம்பிக்கையூட்டுதல்களிலும் எனக்கு உடன் பாடில்லை. அதிகாரம் என்பது எப்போதும் பிரச்சினைக்குரிய ஒன்று தானே. அதைக் குறைந்தபட்சம் என் கவிதைகளால் என்றாலும் எதிர்த்து நிற்கின்றேன்.

**இ.சு.முரளிதரன்:**

**குழந்தைகளின் அகப்புறவுலகின் வாழ்வியலை யுத்தம் காவு கொண்ட யதார்த்தத்தை கவிதைகளில் பதிவு செய்துள்ளமை குறித்து.**

**சித்தாந்தன்:**

குழந்தைகள் இந்த உலகின் அற்புதங்கள். இந்த உலகை இயற்கை அழகுபடுத்துவதுபோல குழந்தைகளும் அழகுபடுத்துகின்றனர். யுத்தகாலத்தின் குழந்தைகளாக நாங்கள் இருந்தோம் ஆனால் எங்கள் குழந்தைமையை நாங்கள் இழந்திருந்தோம். தொடர்ச்சியான போரும் அச்சுறுத்தல்களும் எங்களின் சந்தோசங்களைத் தின்றிருந்தன. ஆதலால் நாம் இழந்துபோனவைகளை எமக்கும் பின்னால் வருகின்றவர்களும் இழந்துபோய்விடுவார்களோ என்ற பயமும் பதட்டமும் எனக்கும் எப்போதும் இருந்தே வந்திருக்கின்றது. எனது மகாஜனங்களின் அழுகை அல்லது அரசர்களின் காலம் என்ற கவிதையில் "அனோஜ்" என்ற சிறுமியை முன்னிலைப்படுத்தியே எழுதியிருக்கின்றேன். அனோஜ் எனது நண்பன் பிரகாசின் அக்காவின் மகள். நானும் பிரகாசும் மடுக்கோயிலுக்கு போனபோதுதான் நான் அவளைச் சந்தித்தேன். என்னுள் இருக்கும் பயமும் பதட்டமும் மிக்க மனதின் வெளிப்பாடுதான் அந்தக் கவிதை. சமாதான காலத்தின் நம்பிக்கையீனத்தை அது வெளிப்படுத்துவதாக இருந்தாலும் மனதில் நிறைந்திருக்கும் அச்சத்தின் பிரதிபலிப்பாகத்தான் இருந்தது. இந்த அச்சவுணர்வின் நீட்சியை தெருக்களை இழந்த குழந்தைகளின் என்ற கவிதையில் காணமுடியும். அது யாழ்ப்பாணம் மூடுண்டு இராணுவ அச்சுறுத்தலுக்குள் உள்ளாகியிருந்த காலத்தில் எழுதப்பட்ட கவிதை. இராணுவமயமான தெருக்கள் குழந்தைகளை இழந்து விட்டதையும் குழந்தைகள் தெருக்களை இழந்து விட்டதன் துயரத்தையும் அந்தக் கவிதை வெளிப்படுத்துகின்றது. யுத்தத்தை வளர்ந்தவர்கள் பார்ப்பதற்கும் குழந்தை கள் பார்ப்பதற்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கின்றனவல்லவா? நான்



இந்த வேறுபாடுகளை என் குழந்தை பருவ அனுபவங்களில் இருந்து பெற்றிருக்கின்றேன். அதைத்தான் எழுதியிருக்கின்றேன். எனது இன்னொரு கவிதை "குழந்தை களின் உலகத்தில் துப்பாக்கி களையோ பீரங்கிகளையோ அனுமதிக்காதீர்கள் பூக்களை..." என்ற எதிர்பார்ப்போடு தான் முடிகின்றது.

**இ.சு.முரளிதரன்:**

**செறிவான கருத்தியலை எளிய வார்த்தை களில் கட்டமைக்கும் ஆற்றல் படைத்தவர் களாக சமகாலச் சூழலில் உங்களால் இனங்காணக்கூடிய கவிஞர்கள் யாவர்?**

**சித்தாந்தன்:**

உங்களின் இந்தக் கேள்வியின் பின்னால் "புரிதலுக்கு கடினமான கவிதைகள் எழுதப்படுகின்றன" என்ற பொதுவான குற்றச்சாட்டு மறைந்திருப்பதாகவே படுகின்றது. பொதுவாக கவிதைகள் குறித்த நீண்ட விவாதங்கள் தமிழ்ச் சூழலில் நிறையவே நடந்திருக்கின்றன. கவிதையைப் புரிதல் என்பது வாசக மனநிலை சார்ந்தது. என்னைப் பொறுத்தவரை வலிந்து சொற் களை அடுக்கி நான் கவிதைகள் எழுதுவதில்லை. என்னளவில் என் சொற்கள் என்பவை எளிமை யானவை தான். புரிதலுக்கான சிரமங்களை முன்வைத்து கவிதையை கூறுகட்டுவதுடன் எனக்கு உடன்பாடில்லை. ஆதலினாலேயே நான் பட்டியல் படுத்தலை இங்கு தவிர்க்க விரும்பு கின்றேன். ஆனால் கவிதை குறித்த ஆழமான புரிதலுடன் ஒரு தலை முறை எழுச்சிச் பெற்றிருக்கின்றது. இவர்கள் மூத்தவர்களின் அனுபவங் களையும் தங்களுக்கிடையிலான உரையாடல்களையும் விரித்துச் செல்கின்றபோது ஒரு ஆரோக்கிய மான சூழல் ஏற்படும் என்பது என் நம்பிக்கை. இத்தகைய உரையாடல் கள் முகப்புத்தகச் சின்னத்தனங்களி லிருந்து மாறுபட்டு ஆழமான உரை யாடல்களாக வளர்த்துச் செல்லப் பட வேண்டும்.

**இ.சு.முரளிதரன்:**

கவிதை குறித்து "சித்தாந்தனின் சித்தாந்தம்" எவ்வாறான அணுகு முறையில் அமைந்துள்ளது?

சித்தாந்தன்:

மொழிவழியிலான எல்லாப் படைப்பிலக்கியங்களுள்ளும் அதித சாத்தியங்களைக் கொண்டது கவிதை. சுதந்திரமானது. ஒரு கவிதை அனுபவங்களைப் பகிர்வதாக இருக்க வேண்டும். அதை எழுதியவனின் அனுபவத்தை ஒத்த அனுபவமாக இருக்க வேண்டுமில்லை. சில தருணங்களில் ஒத்த அனுபவமாகவும் அமையலாம் அல்லது அது கவிஞர் கருதிய அனுபவத்திற்கு மாறானதாக அமையலாம். வாசகர்களின் அனுபவத்தை அது கிளர்த்த வேண்டும் என்பதையே நான் முதன்மையானதாகக் கருதுகின்றேன். இதனாற்தான் கவிதைகளில் சொற்கள் தமக்கான நியமமான அர்த்தங்களுடன் இயங்குவதில்லை. கவிதையில் சொற்கள் அர்த்தம் பெறுவது என்பது அது வாசக அனுபவத்திற்கு ஒன்றிணையும் போதுதான் நிகழ்கின்றது. நான் நண்பர்களின் கவிதைகளைப் படித்துவிட்டு அது பற்றிய அனுபவத்தை அவர்களுடன் பகிரும் போது பல நண்பர்களும் இதை நான் கருதி இந்தக் கவிதையை எழுதவில்லை என என் அனுவத்துக்கு மாற்றான தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்திருக்கின்றார்கள். இதை விட முக்கியமானது கவிதை நேரடியான வெளிப்பாட்டுக்குரிய ஒன்றானதாக நான் கருதவில்லை. வாசகர்களை கவிதை சிந்திக்கத் தூண்டுவதாக இருக்க வேண்டும். படித்த பின்னும் யோசிக்க வைக்க வேண்டும். கவிதை வாசித்தலை சாகச உணர்வுநிலைக்குரியதாகவே நான் கருதுகின்றேன். இதை மிகைப் படுத்தப்பட்ட கூற்றாக கருதவும் கூடும். இது என் நிலைப்பாடு.



இ.சு.முரளிதரன்:

முதன்மை ஆசிரியராக அமைந்து மறுபாதி என்னும் கவிதைக்கான சிற்றிதழை முன்னெடுத்துச் செல்வதற்கு வாழ்த்துக்கள். மறுபாதியின் வெளியீட்டில் என்னவிதமான தடைகளை எதிர் கொண்டு வருகின்றீர்கள்.

சித்தாந்தன்:

யுத்தத்தின் முடிவுக்குப்பின்னர் 2009 ஆம் ஆண்டிலிருந்து மறுபாதியை வெளியிட்டு வருகின்றோம். பத்து ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் எட்டு இதழ்களையே வெளிகொண்டு வந்திருக்கின்றோம். மறுபாதியை காலாண்டு இதழாகத் தான் தொடங்கினோம். முதலாம் ஆண்டு சிறப்பிதழ் வரையிலும் சீரான வெளிவருகையுடனிருந்தது. பின்னர் அதன் தொடர்ச்சி என்பது நிலையான தொடர்ச்சியாக அல்லாமல் அவ்வப்போது வரும் இதழாக அமைந்து விட்டது. மறுபாதியைப் பொறுத்தவரை அதன் விற்பனை ரீதியாக நாங்கள் எவ்விதமான தடைகளையும் எதிர்கொள்ளவில்லை. இங்கும் புலம்பெயர்ந்து வாழும் நண்பர்களும் விற்பனை ரீதியாக பங்களிப்புக்களைச் செய்திருக்கின்றனர். இன்றும் பங்களிக்கத் தயாராகவே இருக்கின்றனர். மறுபாதியை தொடங்கிய போது அதனை கவிதைபற்றி விமர்சனங்களையும் உரையாடல்களையும் ஏற்படுத்தும் நோக்கத்தையே கொண்டிருந்தோம். மறுபாதியின் ஆரம்ப இதழ்கள் இதனை ஓரளவுக்கு சாத்தியமாக்கியிருக்கின்றன என்று நம்புகின்றேன். பலரும் ஆர்வமாக படைப்புக்களைத் தந்துதவினர். ஆனால் பின் வந்த காலங்களில் படைப்புக்களுக்காக அதிகமும் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. இதழின் தொடர்ச்சியைப் பேண முடியாமைக்கு இதுவே பிரதான காரணமாக இருக்கின்றது. தமிழகத்தி லிருந்து வரும் இதழ்களுக்கு தொடர்சி எழுதிக்கொண்டிருக்கும் பலரும் இங்கிருந்து வெளிவரும் இதழ்களுக்கு படைப்புக்களை அனுப்ப பின் நிற்கின்றனர். கவிதைக்கான இதழாக மட்டும் இருப்பதால் ஒரு தரமான இதழாக கொண்டுவர வேண்டிய தேவை இருக்கின்றது. ஆதலினாலேயே இதழின் தொடர்ச்சி பற்றிக் கருதிக் கொள்ளாது தரத்தை பிரதானமாக கருதுகின்றோம்.

இ.சு.முரளிதரன்:

மருதம் கேதீஸின் "தமயந்தி கண்ணாடிக் குவளையில் எனது உலகைப் புள்ளியாகக் காணகின்றேன்." என்னும் உவமையினைப் பற்றி நண்பர் சி.ரமேஷ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "தமிழிலக்கண ரீதியாக தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாததை விளக்கும் உவமை இக்கவிதையில் தெரியாத, யாருமறியாத தமயந்தியைக் கொண்டு தெரிந்த குவளையை விளக்குகின்றது. அதீத புனைவுகளால் இயங்கும் கேதீஷின் கவிதைமுகம் தமிழ் இலக்கியத்துக்குப் புதியது" ஆனால் இலக்கணகாரர் இதனைத்தான் விபரீத உவமை(தொல் 284) என்கின்றனர். இவ்வாறு சி.ரமேஷ் உங்களது சில கவிதைகளைக்கூட மிகைப்படுத்திக் கொண்டாடுவதைக் காணமுடிகின்றது... இவ்வகையான மிகைப்படுத்தல்கள் குறித்து...

சித்தாந்தன்:

இந்தக் கேள்வி நண்பர் ரமேஷிடமே கேட்க வேண்டியது. கேதீஸின் கவிதை குறித்த ரமேஷின் கருத்துத் தொடர்பான அபிப்பிராயத்தை என்னால் கூற முடியும். விபரீத உவமை என்பது உவமையாய் வருவதனைப் பொருளாக்கி பொருளாய் வருவதனை உவமையாக்கி உரைப்பது. உமையணியில் நாம் உவமானமாக காண்பதை உவமேயமாக்குவது எனச் சுருக்கமாகச் சொல்லலாம். வில் போன்ற புருவம் என்பதை புருவம் போன்ற வில் என்று கூறுவது. கேதீஸின் கவிதையிலும் இதுதான் நிகழ்ந்திருக் கின்றது. அவர் தமயந்தியை உவமையாக்கி கண்ணாடிக் குவளையைப் பொருளாக்கியிருக்கின்றார். நீங்கள் கூறுவதன் படியாக இது விபரீத உவமையணி தான். ஆனால் ரமேஷின் கருத்து எந்த அடிப்படை யானது என்று நான் கருதுவதை சொல்வதுதான் பொருத்தமானது. பொதுவாக நாங்கள் அணி என்று கருதும் போது உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி அணி போன்ற அணிகளையே திரும்பத் திரும்ப பயன்படுத்தி வருகின்றோம். விபரீத அணி போன்றவற்றை நாம் வழக்கில் பயன்படுத்துவது குறைவு. இந்த அடிப்படையிலேயே ரமேஷ் இதனைக் கூறியிருக்கக்கலாம் என நினைக்கின்றேன். ரமேஷிடம் இதற்கான விளக்கம் இருக்கவும்கூடும்.

மற்றது எனது கவிதைகள் குறித்து ரமேஷிடம் இருக்கும் மிகைப்படுத்தல் பற்றிக் கேட்டிருந்தீர்கள். என்னிடமும் இந்த அபிப்பிராயம் இருக்கின்றது. நீள்கரைப் பயணத்தில் நடந்த உரையாடல்களிலும் நான் ரமேஷிடம் இருக்கும் இந்த மிகைப்படுத்தல் தொடர்பாக கூறியிருக்கின்றேன். நான் கவிதைகள் பற்றி ரமேஷோடு நிறையவே உரையாடியிருக்கின்றேன். என்னுடைய பல கவிதைகள் பிரசுரமாவதற்கு முன்னாக ரமேஷால் படிக்கப்பட்டவை. ரமேஷிடம் கவிதை பற்றிய தெளிவான முன்மொழிவுகள் இருக்கின்றன. கவிதையை அதிகமதிகம் உணர்வு நிலையிலிருந்து கருத்துக்களை பகிர்ந்துகொள்பவர் ரமேஷ். ரமேஷின் கவிதைகள் தொடர்பான விமர்சனக் கட்டுரைகளிலும் இந்த உணர்வுக் கொந்தளிப்பைக் காணமுடியும். அவர் கட்டுரைகளில் பயன்படுத்தும் சொற்கள் கட்டிறுக்கமான கருத்துச் செறிவு மிக்கவை. இதுவும் இத்தகைய மிகைப்படுத்தலுக்கு காரணமாக இருக்கலாம்.

உண்மையில் விமர்சகர்கள் மிகைப்படுத்தல் களைத் தவிர்க்க வேண்டும். ஒரு கவிஞன் அல்லது படைப்பாளி தன்னை இனங்காணவும் தன்னை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்குமான வழிப்படுத்த லாக விமர்சனங்கள் அமைய வேண்டும். ஏனெனில் உயர்வான படைப்பிலக்கியச் செழுமைக்கு விமர்சனங் கள் தான் அடிப்படையானது.

**இ.சு.முரளிதரன்:**

**"அம்ருதாவின் புதிர்வட்டங்கள்", "XY மற்றும் கறுப்பு வெள்ளைப் பிரதி" முதலான கதைகளை அ- நேர்கோட்டுப் பாணியில் எழுதியுள்ளீர்கள். இவ்வகையான பரிசோதனை முயற்சிகள் சமகாலத்தில் போதுமான அளவிற்கு நிகழ்ந்து வகின்றனவா?**

சித்தாந்தன்:

நான் மிகவும் குறைந்த அளவான கதைகளையே எழுதியிருக்கின்றேன். ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு விதத்திலான சொல்லல் முறையைப் பயன்படுத்தியிருக் கின்றேன். வெறுமனே கதையை அப்பட்டமாகச் சொல்லிவிட்டுப்போவதில் எனக்கு விருப்பமில்லை. புதுமைப் பாங்கான சொல்லல் முறையை பின்பற்ற வேண்டு மென்பதில் எனக்கு ஆர்வமிருக்கின்றது. இத்தகைய பரிசோதனை முயற்சிகள் தமிழுக்கு புதியனவல்ல என்பதும் முக்கியமானது. எனக்கு முன்னால் உள்ள பலரும் இதைச் செய்திருக்கின்றார்கள். பின்னாலும் நிறைய மாற்றங்களும் புதுமைகளும் கதை சொல்லல் முறைமையில் நிகழ்ந்திருக்கின்றன. ஆயினும் சம காலத்தில் பெரும்பாலான கதைகள் நேர்கோட்டுப் பாங்கிலமைந்த கதைகளாகவே இருக்கின்றன. மாற்றம் பெரிய அளவுக்கு நிகழவில்லை என்றே நான் கருது கின்றேன். எனது "XY மற்றும் கறுப்பு வெள்ளைப் பிரதி"





கதை "தவிர" இதழில் வெளிவந்த போது ஒரு மூத்த கதைசொல்லி உரையாடல் முறையில் அமைந்த கதைகள் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கின்றன. இது புதிய வடிவம் அல்ல என தவிரவின் ஆசிரியர் தானா. விஷ்ணுவுடன் தனது ஆதங்கத்தைப் பகிர்ந்திருந்தார். அது அவரது கருத்து, பார்வை. நான் அதை வரவேற்கின்றேன். ஆனால் மாற்றங்களை எமது படைப்பிலக்கியச் சூழலில் எத்தனைபேர் ஏற்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதையும் நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும். மாற்றங்கள் மாறுதல்கள் என்பவை இயல்பாக நடைபெறுபவை. எல்லாவற்றிலும் மாற்றங்களையும் புதுமைகளையும் எதிர்பார்க்கும் நாம் படைப்பிலக்கியம் என்று வரும்போது எதிர்த்து நிற்பது ஆரோக்கியமான படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு உகந்ததாக அமையாது. மருதம் கேதீஸின் ஹெல்மரும் நானும் + மட்டைத்தேளும் றோறாவும் = ஒன்றுமேயில்லை கதை வெளிவந்தபோது அக்கதை என்னத்தை சொல்ல வருகின்றது என்று என் நண்பர் ஒருவருக்கு நான் விளக்கவேண்டியிருந்தது. பழக்கப்பட்டுப் போன வாசிப்பு முறைமைகளிலிருந்து பலரும் வெளிவரத் தயாராக இல்லை என்பதுதான் உண்மை. என்றாலும் வியப்புக்குரியதான மாறுதல்கள் கதை சொல்லல் முறைகளில் முன்னெடுக்கப்பட்டு வருவதை ஆரோக்கியமானதாகவே கருதுகின்றேன்.

இ.சு.முரளிதரன்:

**ஷோபாசக்தியின் படைப்புக்களைக் கொண்டாடியவர்களில் நீங்களும் ஒருவர். ஆனால் "இச்சா" உங்களுக்கு மன நிறைவைத் தரவில்லை போல உள்ளதே...**

சித்தாந்தன்:

ஷோபா சக்தியின் கதை சொல்லல்முறை எனக்கு பிடித்தமானது. ஆனால் பெரும்பாலான கதைகளின் வழி அவர் முன்வைக்கும் அரசியலோடு எனக்கு உடன்பாடில்லை. அவரின் புலி எதிர்ப்பு மனநிலை என்பது பல கதைகளில் வக்கிரமான வெளிப்பாடாக இருந்திருக்கின்றது. கருத்தியல் ரீதியான எதிர்நிலைப் பாட்டுக்கும் வக்கிரத்துக்கும் இடையில் வேறுபாடு இருக்கின்றது. அவரின் பெரும்பாலான கதைகள் கலைத்துவ ரீதியாக வெற்றி கொண்டளவிற்கு கருத்தியல் ரீதியாக வெற்றி கொண்டவையாக நான் கருதவில்லை. அவரது சிறுகதைகளும் கொரிலா, ம், Box போன்றவற்றில் நுட்பமான கதைசொல்லல் முறை காணப்பட்டது. ஆனால் இச்சாவில் அது இல்லை. இச்சாவின் கதையின் பின் பகுதி தமிழ் வணிக சினிமாவின் சாகசத் தனங்களுடன் இருக்கின்றது. ஆலாவின் மீது கணவன் வெறுப்புக் கொள்வதற்கு எந்தக் காரணங்களும் நாவலில் இல்லை தமிழ் நாட்டில் பலரும் அதைக் கொண்டாடுகின்றார்கள் நீங்கள் கடுமையாக விமர்சிக்கின்றீர்கள் என்று நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டிருந்தார். நான் அவருக்கு அது தமிழ்சினிமாவின் வழியில் வந்த ரசனை முறையாக இருக்கலாம் என்று சொன்னேன். இதை விட என்ன சொல்வது. புலம்பெயர் நாடுகளிலும் தமிழ்நாட்டிலும் நடைபெற்ற இச்சாவுக்கான அறிமுக நிகழ்வுகளுக்காக செய்யப்பட்ட விளம்பரங்கள் இச்சாவுடன் வீழ்ந்துபட்ட ஷோபா சக்தியை தூக்கிவிடுவதற்கான முயற்சிகள் போலவே காணப்பட்டன. எங்களது நீள்கரைப் பயணத்தின் இறுதி உரையாடல் நந்திக்கடலோரந்தான் நடைபெற்றது. இச்சா பற்றிய உரையாடலாகவே இருந்தது. ரமேஷ் கடுமையான தன் விமர்சனத்தை முன்வைத்திருந்தார். அதற்கு புலம் பெயர் தமிழ் எழுத்தாளர் ஒருவர் தன் முகநூல் பதிவில் "ஷோபா சக்தி கஸ்ரப்பட்டு எழுதிய படைப்படை அது நாவலே அல்ல என கூறுவது அவரது உழைப்பை இகழ்வது போன்றது" என்ற சாரப்பட பதிவிட்டிருந்தார். இயக்குனர் சங்கரும் அதிக செலவிலும் உழைப்பிலும்தான் எந்திரனை எடுத்திருந்தார். அதற்காக எந்திரனை சிறந்த படம் என்று கொண்டாட முடியுமா? ஒவ்வொன்றுக்கும் பின்னால் உழைப்பிருக்கின்றது. அந்த உழைப்பை மதிக்கலாம் பாராட்டலாம். அதற்காக இச்சாவை பாராட்ட வேண்டும் என்ற அவசியமில்லை. என்னைப் பொறுத்தவரை இச்சா கருத்தியலால் மட்டுமல்ல கலையாகவும் முழுமை பெறவில்லை என்றே சொல்லுவேன்.

கணப்பொழுதில் முடிவை எடுத்துச் செயலாற்றிவிட்டாள். எவ்வளவு திறமைசாலி. நிர்வாகம் அவளையிட்டுப் பெருமை அடைந்தது. அந்த ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் அவளைப் பெருமையுடன் பார்த்தனர். அவள் மட்டும் ஒரு புன்னகையோடு கடந்துவிடுவாள்.

அவள் பெயர் மாதவி.

அழகான முகம். கவர்ச்சியான புன்சிரிப்பு. அளவான உயரம். நீளமான கூந்தல்.

உடலுக்கேற்ற உடைகளை அழகாக அணிந்து கொள்வாள்.

மாதவி படிப்பில் படு சுட்டி. பாடசாலைக் காலங்களில் அவளே எல்லாப் பாடங்களிலும் முதன்மை பெறுவாள். சர்வகலாசாலையில் முதற் பிரிவிலேயே சித்தி பெற்றாள்.

அவளையிட்டு அவளின் பெற்றோர் எப்பொழுதும் பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

சர்வகலாசாலையில் படிக்கும் காலத்தில்தான் அவனைச் சந்தித்தாள்.

அவன் பெயர் முகுந்தன். அவளின் உயரத்திற்கு ஏற்ற பையன். ஓரலான முகம்.

ஆரம்பத்தில் இருவரும் நண்பர்களாகவே பழகினர். ஒரே பிரிவில் ஒரே துறையில் படித்ததால் படிப்பு சம்பந்தமாக இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர்.

முகுந்தன் மாதவியளவுக்குப் புத்திசாலியல்ல. அவனுக்கு மாதவியின் உதவி தேவையாக இருந்தது. மாதவி அவனுக்கு ஓர் ஆசிரியையாகவே செயற் பட்டாள்.

லண்டன் நகரத்தின் மத்தியில்தான் அவர்களின் கலாசாலையும் இருந்தது. இங்கிருந்து ஒரு மணித்தியாலம் புகையிரத வண்டியில் பயணம் செய்தால்தான் வீட்டினை அடைய முடியும்.

மாதவியின் வீட்டிலிருந்து மேலும் அரைமணி நேரம் பயணம் செய்தால்தான் முகுந்தனின் வீட்டையடைய முடியும்.

மாதவியின் அப்பா மிகச் சாதுவானவர். அவர் கதைக்கும் போது அருகில் சென்றால்தான் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மாதவியின் அம்மா மிகுந்த கடவுள் பக்தி கொண்டவர். மற்றவர்கள் மனம் நோகும்படி அவர் கதைத்ததேயில்லை.

மாதவிக்கு ஒரு அக்கா இருக்கிறாள். மிகமிக அமைதியானவள். தானுண்டு தன்பாடுண்டு என்று இருப்பவள். ஒரு அழகான சிறு குடும்பம்.


முகுந்தனின் அப்பா மிகவும் கடுமையானவர். தான் நினைத்ததைச் செயற்படுத்தும் பிடிவாத குணம் கொண்டவர். முகுந்தனுக்குப் பின் ஒரு தம்பியும் தங்கையும் இருக்கிறார்கள்.

முகுந்தனின் அப்பா தன் பிள்ளைகளின் மீது தன் விருப்பங்களைத் திணிப்பவர். முகுந்தனின் அம்மா ஒரு செத்த பிராணி.

கணவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு வாழும் ஒரு பெண்.

# ஒரு காதலின் முடிவு

மு.தயாளன்



இப்படியான ஒரு பின்னணியில் முகுந்தனும் மாதவியும் நல்ல நண்பர்களாகப் பழகி வந்தனர்.

ஒரு ஆணும் பெண்ணும் நண்பர்களாகப் பழகினாலும் எங்களின் சமூகம் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. ஆணும் பெண்ணும் நண்பர்களாகப் பழகினாலும் அவர்களுக்கிடையில் பாலியல் சம்பந்தமான தொடர்புகளை வலுக்கட்டாயமாகத் திணித்து மகிழ்வு கொள்ளும் ஒரு சமூகத்தில்தான் வாழ்ந்து வருகிறோம்.

மாதவிக்கும் முகுந்தனுக்கும் இதுதான் நடந்தது. எவ்வளவுதான் நண்பர்களாக அவர்கள் பழகினாலும் சமூகம் அவர்களை இணைத்து வைப்பதில் மும்முரமாக இருந்தது.

முகுந்தனின் அப்பாவுக்கு சாடைமாடையாக இவர்கள் இருவர்பற்றிச் சொல்வதும் அதனால் அவரின் கொதிப்பை ரசிப்பதிலும் சிலர் இன்பம் காணத் தொடங்கினர்.

முகுந்தனின் அப்பா நேரடியாகவே அவனிடம் கேட்டபோது நாங்கள் வெறும் நண்பர்கள் தானப்பா என்று முகுந்தனும் கள்ளம் கபடமின்றிக் கூறினான்.

இந்த வாக்கு மூலத்தை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

முகுந்தனுக்கே தன் வாக்கு மூலத்தில் சந்தேகம் இருந்தது.

மாதவியைப் பொறுத்தளவில் தன்னைப் பற்றியும் முகுந்தனைப் பற்றியும் மற்றவர்கள் கதைப்பது வேடிக்கையாகவே இருந்தது. ஒரு தடவை மாதவியின் அப்பா அவளைக் கேட்டபோது "Appa He is not for me" என்று கூறியிருந்தாள்.

உண்மையும் அதுதான். முகுந்தன் அவளுக்கு ஒரு நண்பனாகவே தெரிந்தான். அதற்கு மேலால் அவனைப்பற்றிச் சிந்திக்க அவளால் முடியவில்லை.

முகுந்தன் எதிர் மறையாக இருந்தான். அவனுக்குள் ஒரு ஐயம் இருந்தது. மற்றவர்கள் சொல்வதுபோல் மாதவியைத் தான் நண்பனுக்கு மேலால் காதலிக்கிறேனோ என்ற சந்தேகமும் இருந்தது. ஏன் அப்படி இருக்கக் கூடாது எனத் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். இப்படிச் சிந்திக்கும்போது தனக்குள் ஒருவித கிளுகிளுப்பு தோன்றுவதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

முகுந்தன் ஒரு அப்பா பிள்ளை. அப்பா என்ன சொல்கிறாரோ அதனை உடனே செய்து முடிக்கும் தன்மையானவன். இதனால் அவன் தன் விருப்பு வெறுப்புகளை மூட்டைகட்டி வைத்து விட்டான்.

இப்போதான் தன் தகப்பன் சொல்லாமல் மாதவியைப் பற்றி எண்ணத் தொடங்கியுள்ளான்.

முகுந்தனின் இந்த அப்பா பிள்ளைக் குணமெல்லாம் மாதவிக்கும் தெரியும்.

மாதவி மிகவும் சுதந்திரமான எண்ணங் கொண்டவள். அவளுடைய விடயங்கள் எதிலும் மற்றவர்களின் தலையீடு ஆதிக்கம் பெறுவதை அவள் விரும்புவதில்லை. மற்றவர்களிடம் ஆலோசனை கேட்பாள் ஆனால் தன் முடிவையே இறுதி முடிவாக எடுப்பாள்.

இப்படியான எண்ணங்கொண்ட அவளுக்கு முகுந்தனை தன் அருகில் நிறுத்திப் பார்ப்பதில் அவ்வளவாக நாட்டம் இருக்கவில்லை. உண்மையில் அதனை அவள் தனக்குள் மறுத்துக் கொண்டிருந்தாள்.

தமிழர்களின் புலம் பெயர்வில் பெண்கள் தான் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். பெண்கள் சுயமாகச் சிந்திப்பதற்கும் முடிவுகளை எடுப்ப தற்கும் புலம்பெயர் வாழ்வு இடமளித்திருந்தது. ஆங்கிலப் பெண்களின் வாழ்வியல் புலம் பெயர்ந்த தமிழ்ப் பெண்களின் வாழ்க்கையிலும் ஆதிக்கம் செலுத்தின. குறிப்பாக லண்டனில் பிறந்த பெண் பிள்ளைகளின் வாழ்வில் மாற்றம் இருக்கத்தான் செய்தது. இந்த நிலைமையை அப்பா அம்மாக்கள் "இஞ்சை பிறந்தது கள்" என்ற அடைமொழிக்குள் அடக்கித் தங்களின் இயலாமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

முகுந்தன் ஒருதடவை மாதவியுடன் கதைக்கும் போது " ஏன் நாங்கள் காதலிக்கக் கூடாது?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டான்.

அவன் இப்படிக் கேட்பான் என்று மாதவி எதிர்பார்க்கவே இல்லை. கொஞ்சம் குழப்பமாகவே இருந்தாலும் மெல்லிய ஒரு சிரிப்போடு சமாளித்துக் கொண்டாள்.

அந்தச் சிரிப்புக்குப் பல அர்த்தங்கள் இருப்பினும் முகுந்தன் அவளின் சம்மதமாகவே எடுத்துக் கொண்டான். அவன் மனதுக்குள் சந்தோசப்படவும் செய்தான். பதிலாக

மாதவியைப் பார்த்து அழகாகத் " தாங்ஸ்" என்றான்.

எதற்கு இந்தத் தாங்ஸ் என்று அவளுக்குப் புரியவேயில்லை.

முகுந்தன் கனவுலகத்தில் மிதந்தான். மாதவியைப் பொறுத்தவரை குழப்பமாக இருந்தது.

ஒரு நல்ல நட்பு கேள்விக்குறியாக மாறியதை அவள் மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது.

மாதவி தன் பிரச்சினைகளை மனம்விட்டு கதைக்கக் கூடிய ஒரு நபர் அவளின் அப்பா தான்.

இந்தப் பிரச்சினையையும் தகப்பனோடு கதைக்கவே அவள் விரும்பினாள்.

அன்று மாலையே தகப்பனிடம் தன் பிரச்சினையைக் கூறினாள். மாதவியின் அப்பாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன் மகளையிட்டு கொஞ்சம் பெருமிதமும் கொண்டார்.

அவளின் பிரச்சினைக்கு அவரால் தீர்வு சொல்ல முடியவில்லை.

" இந்தப் பிரச்சினைக்கு நீ தானம்மா முடிவு எடுக்க வேணும். கொஞ்சநேரம் அமைதியாக இருந்து யோசி. இது உன் வாழ்க்கை சம்பந்தப்பட்டது." என்று கூறுவதோடு நிறுத்திக் கொண்டார்.

அடுத்தநாள் முகுந்தனைக் கண்டபோது வழமை போல் சகஜமாகப் பழக முடியவில்லை. நட்பு என்பதைத் தாண்டிய ஏதோ ஒன்று அவளைக் கட்டுப்படுத்தியது.

முகுந்தனுக்கும் அவளின் மாற்றம் புரிந்தது. ஆனால் அவன் அதனை மாதவியின் வெட்கப்படும் தன்மையாகவே புரிந்து கொண்டான். இதனால் அவனது உரையாடல் தன்மையும் மாறியிருந்தது. வழமையான உரையாடல் இல்லாமல் கொஞ்சல் நிறைந்ததாக இருந்தது.

மாதவிக்கு இது அவ்வளவாகப் பிடிக்க

வில்லை. முகுந்தனிடம் தான் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை என்றும் அதுவரை இப்படிக் கதைப்பதை நிறுத்தும் படியும் கேட்டுக் கொண்டாள்.

இது முகுந்தனுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் அவளின் வேண்டுகோளை மதித்துக் காத்திருப்பிற்குத் தயாரானான்.

இப்படியே சில மாதங்கள் அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது.

ஒரு நாள் மாதவியின் வீட்டில் அவள் தன் அறையில் புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள்.

வெளியே அவளின் அம்மாவும் அப்பாவும் கதைத்தது அவள் காதுகளில் விழுந்தது.

அவர்களைப் பொறுத்தவரை மூத்த பெண்ணின் கல்யாணம் இழுபட்டுச் செல்வது ஒரு துயரமாக இருந்தது. பல கல்யாணங்கள் பேசப்பட்டாலும் சிலவேளை அவள் நிராகரிப்பதாகவோ அல்லது பெற்றார் நிராகரிப்பதாகவோ நடந்து கொண்டிருந்தது.

இந்த உரையாடலில் மாதவியின் அம்மா மாதவி பற்றியும் முகுந்தன் பற்றியும் விசாரித்து "அதுகளை எண்டாலும் கட்டி வைப்பமே" என்று கணவனிடம் கேட்பதை மாதவி அறைக்குள்ளிருந்து கேட்டாள்.

தமக்கையின் கல்யாண விடயத்தில் அம்மாவும் அப்பாவும் கவலையோடிருப்பதை மாதவி உணர்ந்தாள். அந்தத் துயரத்தைத் தன் கல்யாணம் மூலமாக நிறைவு செய்யத் தாய் விரும்புவதையும் உணர்ந்து கொண்டாள். இந்த உணர்வு மாதவிக்குள்ளே பூகம்பமாக வீசத் தொடங்கியது. இந்தப் பூகம்பம் அவள் மனதில் சில விடையற்ற வினாக்களையும் எழுப்பத் தயங்கவில்லை.

தன் தாய் தகப்பனின் துயரம் நிறைந்த சிந்தனைகள் மாதவி மனதில் முகுந்தன் பற்றிய நேர்மறையான சிந்தனைகளைத் தோற்றுவிக்க ஆரம்பித்தது.

ஏன் முகுந்தனாக இருக்கக்கூடாது என்ற பார்வையில் சிந்தனைகள் தடம்மாறி இருந்தன.

முகுந்தனைப் பார்க்கும் போது நட்பைக் கடந்த ஒருவித மாற்றுச் சிந்தனை உருவாவதை அவள் உணர்ந்தாள்.

இந்தச் சிந்தனை மாற்றம் அவர்களுக்கிடையில் காதலைப் பாலமாகக் கொண்டது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருந்தது.

இதற்குப் பின் அவள் முகுந்தனைப் பார்க்கும்போது தனக்குள் ஒருவித வெட்கம் பரவுவதாக உணர்ந்தாள். இந்தக் காதல் ஆரம்பித்து மூன்று வருடங்கள் இவர்களைக் கடந்து செல்கிறது.

இந்த மூன்று வருடங்களில் இருவருக்கும் இடையில் பெரிய அளவில் எந்த மோதலும் ஏற்படவில்லை. காதலைவிடக் கல்வியை முடிப்பதிலேயே இருவரும் நேரத்தைச் செலவிட்டார்கள். காலம் வந்துவிட்டதாக இருவரும் உணர்ந்து பெற்றாரிடம் தங்கள் உறவு நிலைபற்றிக் கதைப்பதாக தீர்மானித்துக் கொண்டார்கள்.

முகுந்தன் அப்பாவின் சொல்லை என்றும் தட்டி நடந்தவனில்லை. அவனைச் சிறுவயது தொடக்கம் அப்பா பிள்ளை என்றே கூறுவார்கள். இந்த விடயத்தை எப்படி அவரிடம் கதைப்பது என்பதே பிரச்சினையாக இருந்தது.

இதை அவன் மாதவியிடம் கூறியபோது அவள் நகைத்தாள். அவனிடம் மறைந்திருக்கும் இந்தக் கோழைத்தனம் அவளுக்கு அசௌகரியத்தைக் கொடுத்தது.

உங்கள் அப்பா மறுத்தால் என்ன செய்வீர்கள்? என்று அவள் கேட்டபோது உடனடியாகப் பதில் கூறாது மௌனம் சாதித்தமை அவளுக்கு ஒருவித கோபத்தை உண்டு பண்ணியது.

அன்று அவனோடு மேற்கொண்டு எதுவும் கதைக்காமல் வீட்டுக்கு வந்து விட்டாள்.

ஒரு பிள்ளைக்குப் பசிக்கும்போது தாய் உணர்வதுபோல் பிள்ளையின் அமைதியின்மையை தகப்பன் புரிந்து கொள்வார். இன்றும் மாதவியின் மனக் குழப்பத்தை மாதவியின் அப்பா புரிந்துவிட்டார். அவளின் அருகில் சென்று முதுகில் மெதுவாகத்தட்டி அவளின் கண்களை உற்று நோக்கினார். அவளுக்கு மனப் பிரச்சினை வரும் போதெல்லாம் இந்த நிகழ்வு அங்கே நடக்கும்.

மாதவி கண்கலங்கியபடி தன் பிரச்சினையைத் தகப்பனிடம் கூறினாள். இவள் இப்படிக் கூறியதை சமையலறையில் இருந்த அம்மாவும் செவிமடுத்ததால் தன் வேலைகளையெல்லாம் அப்படியேவிட்டுவிட்டு வந்துவிட்டாள்.

மாதவியின் தாய் வந்ததும் கேட்டது "பிள்ளை உன்னை அவர் விரும்பிறாரே"

"இப்ப அதுவல்ல பிரச்சினை அம்மா. அவருடைய குடும்பம் என்னை விரும்பயில்லை. அவரின்ரை அப்பா முடியாதெனறால் என்ன செய்வியள் என்று கேட்டதற்கு அவர் பதிலே சொல்லயில்லை."

"சரி அதுக்கென்ன. நானும் அப்பாவும் போய்க் கதைக்கிறம்" என்று தாய் கூறியதும் மாதவி தகப்பனை நிமிர்ந்து பார்த்தாள்.

மாதவியின் அப்பா அதனைப் புரிந்து கொண்டு "இது உன்ரை வாழ்க்கைப் பிரச்சினையம்மா. நீ வடிவாக யோசிச்சு ஒரு முடிவெடம்மா" என்று கூறி அவளை அவள் அறைக்கு அனுப்பி விட்டார்.

மாதவியின் அம்மாவுக்குத் திருப்தியாக இல்லை. மகளுக்கு வருகின்ற இந்தச் சந்தர்ப்பம் நழுவப் போகிறதே என்ற மனக் கலக்கம். பையனை அவள் பார்த்திருக்கிறாள். மாதவியைத் தேடிப் படிப்பு சம்பந்தமாகக் கதைக்க வந்திருக்கிறான். மாதவி அவனை தன்னுடைய நல்ல நண்பர் என்றே அறிமுகம் செய்திருக்கிறாள். அப்போதே மாதவியின் அம்மாவின் மனதில் மாதவியின் மாப்பிள்ளையாகப் பதிந்திருந்தான்.

இப்போ அது காதலாக மாறும் சூழ்நிலை உருவானதால் விட்டுவிடக் கூடாது என்கின்ற வேகமே அவளிடம் இருந்தது. ஒரு சாதாரணதாயின் சராசரி விருப்பம்.

அதை அவள் செயற்படுத்துவதற்காகக் கணவனோடு கதைக்கவிரும்பியபோது அவர் அவளைக் கட்டுப்படுத்திப் பிள்ளையின் போக்கில்விட்டு அவள் எங்களைக் கதைக்கச் சொன்னாலொழிய நாங்கள் எதுவும் செய்யக் கூடாது என்று கூறிவிட்டார்.

"என்றாலும் நல்ல பொடியனப்பா" என்று கூறித் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள்.

முகுந்தன் தன் காதல் விடயத்தை வீட்டில்

சொன்னபோது அவனது தாய் உடனேயே மறுத்து விட்டாள். முகுந்தன் எதிர் பார்த்ததுதான். ஆனாலும் தான் 7 வருடமாகக் காதலிப்பதாகவும் மாதவியே தனக்கு வேண்டுமென்றும் வாதிட்டான். அவனுடைய அப்பாவும் சம்மதிக்கவில்லை. அம்மாவும் சம்மதிக்க வில்லை. முகுந்தனும் விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. இரு வாரங்களாக அவன் அவர் களுடன் கதைக்கவில்லை அதேநேரம் மாதவியையும் சந்திக்கவில்லை.

மாதவி பல தடவை முயற்சித்தும் அவனைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஏதோ நடக்கிறது என்பதை மட்டும் அவள் உணர்ந்து கொண்டாள். அவளுக்குப் பதற்றமாகவும் அதேநேரம் வேதனையாக வும் இருந்தது.

முகுந்தனின் அம்மா மிகுந்த பதற்றமாக இருந் தாள். தன் பிள்ளை கைநழுவிப் போய்விடுவானோ என்ற பயத்தால் அவளால் உறங்கவும் முடியவில்லை. அவளைப் பொறுத்தவரை மாதவியின் குடும்பம் தங்களுக்கு ஏற்ற குடும்பமில்லை என்ற எண்ணம் அவளை நெருப்பின்மேல் நிற்க வைத்துக் கொண்டி ருந்தது. எந்த வகையிலும் இந்தக் காதலை அடியோடு அழித்துவிட வேண்டுமென்பதில் விடாப்பிடியாக நின்றாள். அவளின் அந்த ஆக்ரோசமும் முகுந்தனின் அப்பாவின் கண்டும் காணாத போக்கும் மாதவி முகுந்தனின் காதல் வாழ்வில் பல பிரச்சினைகளை உண்டு பண்ணப் போகிறதென்ற உண்மையை ஓரளவுக்கு உணர்ந்து கொண்ட மாதவியின் அப்பா செய்வதறியாமல் கலங்கி நின்றார்.

முகுந்தனின் பிடிவாதமும் அசமந்தமான போக்கும் அவனின் பெற்றோரை கொஞ்சம் இறங்கிவர வைத்தன. மாதவியின் அம்மா எப்படியும் இந்த வரனை முடித்துவிட வேண்டுமென்பதில் தீவிரமாக இருந்தாள். முகுந்தனின் அப்பா அம்மா ஓரளவு இறங்கி வந்ததும் மாதவியின் அப்பா அம்மா அவர்கள் வீட்டுக்குச் சென்று முறையாகக் கதைத்து திருமணநாளும் குறிக்கப்பட்டது.

இதற்குப்பின் ஒரு நாள் மாதவியைத் தங்கள் வீட்டுக்குக் கூட்டிச் சென்றான் முகுந்தன். முகுந்தனின் அம்மா மாதவியோடு கதைத்தபடி கல்யாணத்துக்குப் பின் நீங்கள் இருவரும் எங்களோடைதான் இருக்க வேணும் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டா.

மாதவிக்கு உள்ளூரக் கோபம் வந்தாலும் அடக்கிக் கொண்டு நாங்கள் இரண்டுபேரும் வீடு வாங்குமட்டும் உங்கள் இருவரோடும் இருப்பம். அதற்குப் பிறகு எங்கள் வீட்டில் இருப்போம் என்று சிரித்தபடி கூறினாள்.

அவளின் இந்தப் பதில் முகுந்தனின் அம்மாவுக்கு எரிச்சலை ஊட்டினாலும் தன்னை அடக்கிக் கொண்டாள்.

மாதவிக்குக் கொஞ்சமும் முகுந்தனின் அம்மாவைப் பிடிக்கவில்லை. இதைச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது முகுந்தனிடம் கூறவும் தவற வில்லை. அவளுடைய உள்மனம் முகுந்தனின் அம்மா தங்களுடைய வாழ்க்கைக்கு ஒரு தடைக்கல்லாகவே இருக்கப் போகிறாள் என்று சொல்லிக் கொண்டது. தங்களின் கல்யாணம் முடிந்ததும் இருவரும் தனிவீட்டில் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையை முகுந்தனிடம் கூறினாள்.

முகுந்தன் "பார்ப்போம்" என்று கூறினானே யொழியத் தீர்மானமாகச் சொல்லவில்லை. முகுந்தனுக்குத் தாயின் குணம் நன்றாகத் தெரியும். கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைக்கவே போதும் போதுமென்றாகிவிட்டது. இந்தப் பிரச்சினையை இப்போ கிளப்பினால் கல்யாணமே நின்றுவிடும் என்று பயந்தான்.

மாதவியைப் பொறுத்தவரை மனதளவில் அவள் இப்போ பயப்படத் தொடங்கியிருந்தாள்.

கல்யாண வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. கல்யாணத்துக்கான வரவேற்பு மடல் இந்தியாவிலிருந்து பதிப்பித்து எடுத்திருந்தனர். அவற்றை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வழங்குவதில் மாதவியின் பெற்றார் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஆனால் மாதவி மட்டும் எதையோ பறி கொடுத்தவள் போல் ஒன்றிலும் ஆர்வமாக ஈடுபடாது ஒதுங்கியே இருந்தாள்.

மாதவியின் இந்தப் போக்கை அவளின் சகோதரி சிந்தியா அவதானிக்கத் தவறவில்லை. சிந்தியா அவளை அணுகிக் காரணம் கேட்டபோது மாதவி மனந்திறந்து சிந்தியாவிடம் சொல்லிவிட்டாள்.

"நான் இந்தக் கல்யாணத்தை நிறுத்தினால் என்னவென்று யோசிக்கிறன்" என்றாள் மாதவி. சிந்தியா திடுக்கிட்டுப் போய்" நீ என்ன கதைக்கிறாய் என்று புரிஞ்சுதான் கதைக்கிறியா. நீ விரும்பின ஆளைத் தானே அம்மா அப்பா செய்து வைக்கினம். இன்னும் மூன்று கிழமைதான் இருக்குது" என்று சிந்தியா கூறியபோது மாதவி அழத் தொடங்கி விட்டாள்.

சிந்தியாவுக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை. அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. மாதவி யின் அழுகைக்கான காரணம் அவளுக்குப் புரியவில்லை.

சிந்தியா காலத்தை விரயம் செய்யாமல் தாயிடமே நேரே சென்றாள். தாயிடம் மாதவியின் நிலைபற்றிக் கூறியபோது அவள் இடிந்துவிட்டாள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த மாதவியின் அப்பாவும் தான் செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு வந்தார்.

குழப்பமான சூழ்நிலை. நான் நினைச்சனான் என்று மாதவியின் அப்பா கூறினார்.

பிரச்சினை வேறுபோக்கில் திரும்புவதை மாதவியின் அம்மா விரும்பவில்லை.

"இதப்பா கல்யாணம் முடிஞ்சாப்போலை அவை தீர்மானிக்கிற விசயம். இதை ஏன் முன்னுக்கே கேட்டுக் குழம்புவான். மாதவியிட்டை இதைச் சொல்லம்மா" என்று விடயத்தைக் காவி வந்த மாதவி யின் அக்காவிடம் கூறினாள் மாதவியின் அம்மா.

அதன்பின்பு சிந்தியா மாதவியிடம் வந்து பக்குவமாக அதை அவளுக்குக் கூறியபோதும் ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டாலும் மாதவியால் முழுமை யாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவளுடைய மனம் என்னவோ கல்யாணத்தை நிறுத்துதல் நல்லதென்றே நினைத்தது.

ஆனால் காலம் கடந்துவிட்டது. அம்மா

ஒத்துக் கொள்ளப் போவதில்லை. தாயின் மனதைப் புண்படுத்த மாதவி விரும்பவில்லை. நடக்கிறது நடக்கட்டுமென்று விட்டுவிட்டாள்.

கல்யாண ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

மாதவி பக்கத்தில் மாதவியும் முகுந்தனின் பக்கத்தில் அவனின் தாயும் சகோதரிகளும் இந்தக் கல்யாணம் குழம்பாதா என்ற எதிர் பார்ப்பிலேயே இயங்கிக் கொண்டிருந்தனர்.

கல்யாண நாளும் வந்தது. மிக ஆடம்பர மாகக் கல்யாணம் நடைபெற்றது. அம்மி மிதித்து அருந்ததி பார்த்து சூரியனைச் சாட்சியாக வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்க கல்யாணம் நடந்து முடிந்தது.

மாதவி கல்யாணத்தின்பின் முகுந்தனின் வீட்டில் வாழ ஆரம்பிக்கிறாள்.

சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் மாதவிக்கும் முகுந்தனின் சகோதரிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. இது மாதவி எதிர் பார்க்காத ஒன்று. முகுந்தன் எதிர் பார்த்திருந்தா லும் இவ்வளவு சீக்கிரம் அது ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கவில்லை. இந்தப் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. மாதவிக்கு இது ஒரு தலையிடியாகப் போய்விட்டது.

முகுந்தனுக்கு இதனைச் சொல்லித் தான் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த வீட்டுக்குச் செல்வோமா எனக் கேட்கிறாள். மாதவி கல்யாணத்துக்கு முன்பே தனக்கென ஒரு வீடு வாங்கியிருந்தாள். அந்த வீட்டுக்கு போவதற்குத்தான் முகுந்தனிடம் கேட்டாள்.

முகுந்தனுக்குத் தர்மசங்கடமான நிலை. மாதவிக்கு நடக்கும் பிரச்சினைகளை அவனும் அவதானித்துக் கொண்டு தானிருந்தான். மாதவிக்குச் சார்பாக முடிவெடுத்தால் வீட்டாரோடு முரண்பட வேண்டி வரும். வீட்டாருக்குச் சார்பாக எடுத்தால் மாதவியோடு முரண்படவேண்டி வரும். அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

இது நடந்து இரு கிழமைகள் ஆகிவிட்டன.

இந்த இடையில் மாதவிக்குப் பதவி உயர்வும் கிடைத்திருந்தது.

இதனைப் பயன்படுத்த முகுந்தன் திட்ட மிட்டான். தகப்பனிடம் சென்று மாதவியின் பதவி உயர்வு பற்றிக் கூறி மாதவியின் வீடு வேலை செய்யும் இடத்துக்கு அருகில் இருப்பதால் தானும் மாதவியும் அங்கே சென்று இருக்கப் போவதாகவும் கூறினான்.

இதற்கு முகுந்தனின் தகப்பன் எதுவும் கூறவில்லை. அமைதியாகவே இருந்தார்.

அடுத்தநாள் மாதவி வேலையால் வந்த பின்பு மாதவியைக் கூப்பிட்டு அவளுக்குப் பதவி உயர்வு கிடைத்ததற்காக வாழ்த்திவிட்டு இப்போ இந்தப் பதவி உயர்வு அவசியம்தானா என்றும் கேட்டார்.

கல்யாணம் நடந்த புதிதில் இப்படியான வேலையைப் பொறுப்பேற்றால் வாழ்க்கை நிம்மதியாக இருக்காது. என்னைப் பொறுத்தவரை நீ இதனை ஏற்றுக் கொள்ளவேண்டாம் என்று கட்டொன்று வெட்டொன்றாகச் சொல்லிவிட்டார்.

மாதவி பதில் கூறக் கூட விடவில்லை. மாதவி எதுவும் கூறாமல் அறைக்குள் சென்றுவிட்டாள்.

அறைக்குள் சென்றவளது மனம் கொதித்தது. எதையும் தாய்க்குக் கூறிப் பழக்கப்பட்ட மாதவி இந்த விடயத்தையும் தொலைபேசி மூலமாகக் கூறிவிட்டாள்.

மாதவியின் அம்மாவுக்கு விடயத்தைக் கேள்விப்பட்ட நேரந் தொடக்கம் ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்ட மாதிரி ஒரு உணர்வு. தன் பிள்ளையின் திறமைக்குக் கிடைத்த உயர்வை மறுத்தது மிகமிகத் தவறு என்றே பட்டது. அதே வேகத்தில் முகுந்தன் வீட்டுக்குத் தொலைபேசி எடுத்து முகுந்தனின் அப்பாவை திக்குமுக்காட வைத்துவிட்டாள்.

இங்கேதான் பிரச்சினை அவர்கள் குடும்பத்துள் தாராளமாக நுழைந்தது.

முகுந்தன் வேலையால் வந்தபோது யாரும் அவனோடு கதைக்கவில்லை. வீட்டில் உள்ள அமைதி ஏதோ பெரியளவில் நடந்துள்ளதென்பதை முகுந்தனுக்கு உணர்த்தியது.

யாருடனும் கதையாமல் நேரே தன் அறைக்குள் சென்றுவிட்டான். அறைக்குள் மாதவி கலங்கியபடி இருந்தாள். முகுந்தன் அவளை விசாரித்தபோது அவளும் நடந்தவற்றைக் கூறினாள்.

"சரி அதையேன் உம்மடை அம்மாவுக்குச் சொன்னனீர்?"

"அம்மாவுக்குச் சொல்லாமல் வேறை யாருக்குச் சொல்றது. உம்மடை அப்பா ஏன் எங்கடை தனிப்பட்ட விசயத்திலை தலையிடுறார்?"

"அவர் அறிவுரை மாதிரிச் சொல்லியிருப்பார். நீர் அதை ஏன் சீரியசாய் எடுக்கிறீர்?"

"அப்ப உங்கடை அப்பா சொல்றது.. சரி யெண்டு நினைக்கிறீரோ?" மாதவிக்குக் கோபம் வந்து விட்டது.

"நான் சரியெண்டு சொல்லயில்லை. அதுக்கு முக்கியத்துவம் குடுத்திருக்கத் தேவையில்லை."

"சரி உதை விடும். நாங்கள் எப்ப போறம்" என்றாள் மாதவி.

"அப்பாவிட்டைச் சொல்லியிட்டன். இப்ப வேறை பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறீர். பார்ப்பம்"

"இல்லை. நாளைக்கே போகவேணும்."

பிடிவாதம் பிடித்தாள் மாதவி. முகுந்தனுக்குக் குழப்ப மாக இருந்தது. மனைவி சொல்வதிலும் நியாயம் இருப்பதாக அவனுக்குப்பட்டது. அதேநேரம் தாய் தந்தையர் சொல்லும் நியாயங்களையும் தட்டிக் கழிக்க முடியவில்லை.

மாதவியைப் பொறுத்தவரை கணவன் தனக்காக இல்லையே என்கின்ற துன்பம் அவ்ளை நிலை இழக்கச் செய்து கொண்டிருந்தது. லண்டனில் பிறந்து வளர்ந்த பெண்ணாக இருந்தாலும் மனதளவில் அவள் தமிழ்ப் பெண்ணே.

முகுந்தன் ஒரு முடிவு எடுக்கவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்ட நிலையில் மாதவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மாதவியின் திறமையும் துடிதுடிப்பும் அவனுக்குத் தெரியும். அதேநேரம் தகப்பனின் அடாவடித்தனமும் சூழ்ச்சித் தன்மைகளும் அவன் அறிந்தவையே.

இந்த இரண்டு இயல்புகளையும் தூக்கிப்

பார்த்த முகுந்தன் மாதவியைப் பார்த்து

"நீர் சாமான்களைக் கட்டும் நாங்கள் அந்தவீட்டுக்குப் போவம்" என்றான்.

மாதவி எதிர்பார்க்கவேயில்லை. துரிதமாக இயங்கினாள்.

முகுந்தன் தகப்பனிடம் சென்று நிரம்பக் கதைக்காமல் தாங்கள் போகப்போவதைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு அவருடைய பதிலுக்கும் காத்திராமல் அறைக்குள் சென்றுவிட்டான்.

முகுந்தனின் அப்பா தன்னைச் சுதாகரித்துக் கொள்வதற்குள் முகுந்தனும் மாதவியும் தயாராகி விட்டார்கள். விடயத்தைக் கேள்விப்பட்டு முகுந்தனின் அம்மாவும் தங்கச்சியும் வருவதற்குள் முகுந்தனும் மாதவியும் பெட்டிகளுடன் வெளியில் வந்துவிட்டார்கள்.

முகுந்தனின் அப்பா தன் மனைவியையும் மகளையும் எதுவும் கதைக்கவிடவில்லை.

முகுந்தனும் மாதவியும் புறப்பட்டு விட்டார்கள்.

வீடு நிசப்தமாக இருந்தது. யாரும் யாருடனும் கதைக்கவில்லை. எதிர்பாராத இந்த நிகழ்வு அவர்களை அதிர்ச்சியடைய வைத்துவிட்டது. முகுந்தனின் தாய் குமுறிக் கொண்டிருந்தாள். முகுந்தனின் சகோதரி சுடு எண்ணையில் போட்ட மிளகாய்போல் பொரிந்து கொண்டிருந்தாள். தகப்பன் அமைதியாகவே இருந் தார். உள்ளுக்குள் இதனை எப்படி வெற்றியாக்குவது என்பது பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

மொத்தத்தில் அந்தக் குடும்பமே வெறி பிடித்த நிலையிலேயே இருந்தது.

மூன்று கிழமைகளாக எவ்வித தொடர்பு மில்லாமல் இருபக்கமும் இருந்தனர்.

இடையில் முகுந்தனின் அப்பா எத்தனையோ தடவை தொலைபேசி எடுத்தும் முகுந்தன் பதிலளிக்க வில்லை. இதனை மாதவியும் அவதானித்தே வந்தாள்.

மாதவிக்கு முகுந்தனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

முகுந்தன் தன் தந்தையின் மீது அதிகமான பாசங் கொண்டவன் என்பது மாதவிக்குத் தெரியும். இதனால் முகுந்தனைப் பார்த்து "நீர் ஒருக்கால் அப்பாவைப் பார்த்துவிட்டு வாருமன்" என்று கூறினாள். மாதவி இப்படிக் கூறியதும் முகுந்தனுக்கு மனதுக்குள் சந்தோசம் ஏற்பட்டது. இதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "பார்ப்பம்" என்று மட்டும் கூறிவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டான்.

வேலைக்குச் சென்ற முகுந்தன் இன்று வேலை முடிந்ததும் அப்பா அம்மா வீட்டுக்குச் சென்று வருவதாக மாதவிக்குக் குறுஞ்செய்தி அனுப்பினான்.

குறுஞ்செய்தியைப் பார்த்த மாதவி "பாவம்" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

வேலை முடிந்து பயத்துடனும் பாசத்துடனும் தன் வீட்டுக்குச் சென்றான் முகுந்தன்.

பெரிதாக வரவேற்பு இருக்கவில்லை. முதலில் தகப்பன் தான் கதைத்தார். அதவும் சாதாரண வழமை யான உரையாடலாகவே இருந்தது. கொஞ்சநேரம் இருந்துவிட்டுப் புறப்பட்டான்.

அவன் தன் வீட்டுக்கு வந்தபோது மாலை ஆறரையாகி இருந்தது. அப்போதான் மாதவியும் வேலையால் வந்திருந்தாள்.

முகுந்தன் எதுவும் கூறவில்லை. மாதவியும் எதுவும் கேட்கவில்லை. அமைதியாக இருவரும் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

அவள் கேட்பாளென்று அவனும் அவன் சொல்வானென்று அவளும் மௌனமாக இருந்தனர்.

கணவன் மனைவிக்கிடையில் உள்ள இந்த மௌனம் அழகு நிறைந்தது. சில சமயங்களில் சில விடயங்கள் சொல்லப்படாமலே போய்விடும். இங்கே யும் அதே நிலைதான். முகுந்தன் வீடு சென்றதும் அங்கு நடந்த விடயங்களும் இருவருக்கும் பேசா விடயங் களாகி விட்டன.

முகுந்தனின் முக மாறுதலை வைத்து சில விடங்களை மாதவி ஊகித்து விடுவாள்.

அடுத்த நாளும் வேலை முடிந்ததும் தன் வீட்டுக்கு முகுந்தன் சென்றான்.

அங்கு உருவான நிலைமை நேற்றையதைவிட எதிரானதாக இருந்தது. வரவேற்பு பலமாக இருந்தது. நன்றாகக் கதைத்தார்கள். அம்மாவின் உபசரிப்பு வித்தியாசமாக இருந்தது. அப்பா சந்தோசமாக கலகலவென்று கதைத்தார். முகுந்தனுக்கு இந்த மாற்றம் உள்ளூரப் பயத்தையும் கொடுத்தது.

இரவு எட்டு மணியாகி விட்டது. புறப்பட எழுந்தான்.

அப்போது அவன் தங்கை அவனை இன்னும் சிறிது நேரம் இருந்து போகச் சொன்னாள். மாதவிக்கு விடயத்தை குறுஞ் செய்தி மூலம் அனுப்பிவிட்டு இருந்தான். சிறுவயதுக் கதைகளெல்லாம் கூறி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இரவு பத்து மணியாக முகுந்தன் எழுந்து புறப்பட ஆயத்தம் செய்தான்.

நல்லாய் நேரமாகியிட்டுது இஞ்சை தங்கியிட்டுப் போவன் தம்பி என்று தாய் கூறியபோது அவனால் மறுக்கமுடியவில்லை.

பத்துமணி மட்டும் முகுந்தன் வராதது மாதவிக்கு மனதில் ஒரு பயத்தை உருவாக்கியது.

ஏதோ ஒரு இனம் புரியாத பயம் அவளின் மனதை அலைக்களித்தது.

அப்போது அவளது கைப்பேசி அடித்தது. முகுந்தன்தான் தொடர்பில் வந்தான். பயத்தோடு கைப்பேசியை எடுத்தாள்.

"மாதவி இண்டைக்கு வரமாட்டன். நான் அப்பா அம்மாவோடை இருந்திட்டு நாளைக்கு வாறன்" மாதவிக்குப் பகீரென்றிருந்தது.

அவள் எதுவும் சொல்லவில்லை. சரியென்று சொல்லிவிட்டுக் கைப்பேசியை வைத்துவிட்டாள். தாய்க்கு எடுத்துச் சொல்லலாமா என்று நினைத்தாள். ஆனால் சொல்லவில்லை அது பிரச்சினையைக் கொண்டுவரும் என்பதால் சொல்லவில்லை.

பலவிதமான யோசனைகளுடன் படுக்கைக்குச் செல்லமுன் வீட்டுக் கதவுகளெல்லாம் சரியாகப் பூட்டப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனித்துவிட்டுப் படுக்கப் போய்விட்டாள்.

மறுநாள் காலையும் அவன் வரவில்லை. அங்கிருந்தே காரியாலயத்துக்குச் சென்றுவிட்டான்.

மாதவிக்கு மனம் பாரமாக இருப்பதுபோல் தோன்றியது.

என்ன நடக்கின்றது என்பது அவளுக்குப் புரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டாள். அன்றுமாலை முகுந்தன் வீட்டுக்கு வந்திருந்தான். மாதவி எதையும் காட்டிக் கொள்ளவில்லை. நேற்று ஏன் வரவில்லை என்று அவள் கேட்பாளா என்று விரும்பினான். அவளும் கேட்கவில்லை. அமைதியான நகர்வு அங்கே இருந்தது.

உணவைத் தயார் செய்து மேசையில் வைத்தாள்.

"சாப்பிடலாமே?" என்றாள்.

கலகலவென்று கதைக்கும் மாதவியாக அவள் இல்லை. முகுந்தனுக்குப் புரியவேயில்லை. அவனுக்கு மாதவிமேல் கோபம் வந்தது.

அம்மா அப்பா வீட்டுக்குத்தானே சென்றேன். இதற்கு ஏன் இவ்வளவு கோபம். அவளைச் சமாதானப் படுத்த அவன் விரும்பவேயில்லை. மேசையில் வைத்த சாப்பாட்டை இருவரும் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போய்விட்டனர்.

மாதவிக்குத் தூக்கம் வரவில்லை. அவள் மன அழுத்தத்தால் புரண்டு புரண்டு படுத்தாள்.

அடுத்தநாள் அவள் எழும்பியபோது முகுந்தன் வீட்டில் இல்லை. மேசையில் ஒரு துண்டு இருந்தது. அதில் "நான் வேலை முடிந்ததும் அம்மா அப்பா வீட்டுக்குப் போகிறேன். எனக்காகக் காத்திராமல் நீ சாப்பிட்டுவிட்டுப் படு"

என்று முகுந்தன் எழுதியிருந்தான். மாதவி ஏதோவெல்லாம் கற்பனை செய்யத் தொடங்கி விட்டாள்.

"இன்றைக்குப் போகவேண்டாம் . வீட்டுக்கு வாருங்கள். எனக்கு உடல் நிலை சரியில்லை" என்று குறுஞ்செய்தி அனுப்பினாள்.

செய்தி பார்த்தது தெரிந்தது. ஆனால் பதில் வரவில்லை.

அவளுக்குத் தலையிடியாக இருந்தது. வேலைத்தலத்துக்கு சுகயீனவிடுப்புக்கு அறிவித்து விட்டுக் கதிரையில் சிறிது நேரம் இருந்தாள். அவனுடைய பதிலுக்காகக் காத்திருந்தாள். எதுவுமே வரவில்லை.

இரண்டு பரசிற்றாமோல் எடுத்துப் போட்டாள். அப்படியே படுத்துவிட்டாள்.

முகுந்தன் அவள் அனுப்பிய செய்தியைப் பார்த்தும் உதாசீனம் செய்துவிட்டான்.

அவனைப் பொறுத்தவரை "மாதவி நடிக் கிறாள். தன்னைத் தன் பெற்றாருடன் பழகவிடாமல் தடுக்கிறாள்." என்பதுதான் எண்ணமாக இருந்தது.

அன்று மாலையும் அவன் பெற்றார் வீட்டுக்குச் சென்றுவிட்டான்.

அங்கு அவனுக்கு வார்த்தைகளாலும் அளவுக் கதிகமான உபசரிப்பாலும் மெல்லக் கொல்லும் விசம் வழங்கப் படுகின்றதென்ற உண்மையை முகுந்தன் உணரத் தவறிவிட்டான். தன் பெற்றாரை மாதவியை விட நம்பத் தொடங்கினான் முகுந்தன்.

மாதவி வீட்டில் தலையிடியினால் அங்குமிங்கும் புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். அவள் மோசமான மன அழுத்தத்துக்கு ஆளாகி இருந்தாள்.

முகுந்தன் அன்றிரவும் வீட்டுக்கு வரவில்லை. அதை அவன் மாதவிக்கு அறிவிக்கவுமில்லை.

காலை மாதவியால் கட்டிலிலிருந்து எழும்ப முடியவில்லை. காய்ச்சல் காய்ந்து கொண்டிருந்தது. தொலைபேசியை எடுத்துத் தாய்க்கு விடயத்தைக் கூறினாள்.

மாதவியின் அம்மாவும் அப்பாவும் பதறிப் போய் வந்தபோது மாதவி சுயநினைவற்று இருந்தாள். அங்கே முகுந்தன் இல்லை. முகுந்தனின் கைப்பேசிக்கு மாதவியின் அப்பா எடுத்தார்.

முகுந்தன் கண்டும் காணாதவன் போல் சத்தத்தைக் குறைத்துவிட்டு இருந்துவிட்டான்.

அவரும் தொடர்ந்து அடித்துக் கொண்டேயிருந்தார். இறுதியாக தவிர்க்க முடியாமல் கைப்பேசியை முகுந்தன் எடுத்தான். மாதவியின் அப்பா முகுந்தனிடம் மாதவியின் நிலையைக் கூறினார்.

"நீங்கள் ஏதாவது செய்யுங்கோ. நான் வேலையைவிட்டு வரேலாது"

என்று கூறிவிட்டுக் கைப்பேசியை வைத்து விட்டான்.

மாதவியின் அப்பா திடுக்கிட்டுவிட்டார். இவர்களுக்குள் ஏதோ பிரச்சினை உள்ளதென்பதை அவரின் உள் மனம் கூறியது.

அதற்குள் அம்புலன்ஸ் வந்துவிட்டது.

மாதவியை பரீட்சித்துப் பார்த்தார்கள். மாதவி அப்போது கண் முழித்திருந்தாள்.

மாதவி மன அழுத்தத்தில் இருப்பதாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்கள்.

திருமணம் முடிந்து ஆறுமாதத்தில் அவள் மன அழுத்தத்துக்கு ஆளானமை அவளின் பெற்றாரை கலங்க வைத்தது. மாதவியின் அம்மாவுக்கு முகுந்தன் சம்பந்தப் பட்ட விடயங்களை மாதவியின் அப்பா மறைத்து விட்டார்.

முகுந்தன் வேலையால் வருமட்டும் காத்திருந்தார்கள். இந்த இடைவெளியில் மாதவியின் அம்மா உணவு தயாரிக்கும் பணியில் இறங்கி முடிக்கும் தறுவாயில் முகுந்தன் கதவைத் திறந்து வந்தான். வந்தவன் நேரே மாதவியின் அறைக்குச் செல்லவில்லை.

இதை அவதானித்த மாதவியின் அப்பா இனி இருந்தால் அவர்களின் விடயத்தில் நாம் தலையிட வேண்டியதாகிவிடும் என்று நினைத்து மனைவியையும் கூட்டிக் கொண்டு வெளியேறினார்.

அவர்கள் போனதும் முகுந்தன் மாதவி படுத்திருந்த இடத்துக்கு வந்தான்.

மாதவி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"மாதவி" முகுந்தன் அழைத்தான். மாதவி பதில் எதுவும் கூறவில்லை.

"உம்மைத்தான் கூப்பிடுறன்."

இம் முறை மாதவி அவனைத் திரும்பிப் பார்த் தாள். அவளுக்கு அழுகை வந்துவிட்டது. விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டாள். முகுந்தன் அவளுக்கருகி லிருந்து கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறினான். இருவரும் சமாதானமாகி மாதவியின் அம்மா சமைத்து வைத்த உணவை சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குப்

போய்விட்டார்கள்.

அடுத்த நாள் இருவரும் சந்தோசமாகவே வேலைக்குப் போனார்கள். தொடர்ந்து இரு நாட்கள் எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. மூன்றாம் நாள் முகுந்தன் நேரத்திற்கு வீட்டுக்கு வரவில்லை. மாதவிக்கு குழப்பமாக இருந்தது. தனது கைப்பேசியைப் பார்த்தாள் . முகுந்தனது குறுஞ்செய்தி இருந்தது.

வேலை முடிந்து அம்மா அப்பா வீட்டுக்குப் போய் வருவதாகக் குறிப்பிட்டிருந்தான்.

மாதவிக்கு தாங்க முடியவில்லை. மாதவி ஏதோ ஒருவிதத்தில் தன்னையும் முகுந்தனையும் முகுந்தனின் பெற்றார் பிரித்து விடுவார்களென்ற பயம் இருந்தது.

இதனை யாரிடமும் சொல்லாமல் வைத்திருந்தலால் அவளுக்கு ஒருவித மன அழுத்தம் ஏற்பட ஆரம்பித்திருந்தது. அவளுடைய மன அழுத்தத்தை அதிகரிக்கும் விதமாக முகுந்தன் அன்றிரவு வீடு திரும்பவில்லை.

முகுந்தன் வீட்டில் அவன் வீட்டிற்குச் செல்ல புறப்பட்டபோது முகுந்தனின் அம்மா திடீரென்று மயங்கிவிழுந்து நாடகமாட அந்த நாடகத்திற்கு அவனின் தங்கை சேர்ந்து தாளமிட நேரம் போய் விடுகிறது. இனிமேல் போகவேண்டாம் படுத்துவிட்டு நாளைக்குப் போ என்று சொல்ல முகுந்தனும் மாதவிக்குக் குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு அங்கு படுத்துவிட்டான்.

இது இன்னும் மாதவியின் மனதில் காயத்தை ஏற்படுத்த அவள் மன அழுத்தத்தால் துன்பப்பட லானாள். அவள் யாரிடமாவது இதைக் கூறினால் அழுத்தத்திலிருந்து வெளிவருவது சுலபமாக இருந் திருக்கும். தன்னால் தன் குடும்பம் அழுத்தத்தில் துன்பப்படக் கூடாது என்று நினைத்ததினால் எல்லா வற்றையும் தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டாள்.

முகுந்தனின் அம்மாவுக்கு மாதவியைப் பிடிப்பதில்லை. கல்யாணத்துக்கு முன்பும் பிடிவாத மாக நின்றவள் அவள். முகுந்தனின் பிடிவாதத்தால் தான் இக் கல்யாணமே நடந்தது.

கல்யாணத்தின் பின் எல்லாம் சரிவரும் என்றே முகுந்தன் நினைத்தான்.

கல்யாணத்தின் பின் இன்னும் மோசமான கட்டத்துக்கே சென்றது.

முகுந்தனைப் பொறுத்தவரை அம்மா அப்பா வீட்டில் தங்குவது பிரச்சினையாக இருக்கவில்லை. அதே நேரம் மாதவி தனிய இருக்கிறாளே என்ற சிந்தனை அவனுக்கு வராததுதான் பிரச்சினையை உந்தித் தள்ளுகிறது. அவனை அந்தக் கோணத்தில் சிந்திக்கவிடாது அவன் அம்மாவும் தங்கையும் காய் களை நகர்த்துகிறார்கள் என்ற விடயம் கடைசிவரை யும் அவனுக்குத் தெரியாமல் போய்விட்டது.

மாதவியின் விடயம் அவளின் அப்பாவுக்குக் கசிந்துவிட்டது. கலங்கிப் போய்விட்டார்.

அமைதியாக இருந்து தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டார். பின்பு முகுந்தனோடு தான் கதைக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டார்.

அவர் புறப்பட்ட கொஞ்ச நேரத்தில் மாதவி வீட்டுக்குத் தொலைபேசி எடுத்து நடந்த விடயங்களை தாயிடம் கூறிவிட்டாள்.

விடயம் கேள்விப்பட்ட நேரம் தொடக்கம் மாதவியின் அம்மாவால் நிம்மதியாக இருக்க முடிய வில்லை.

தொலைபேசியை எடுத்து முகுந்தனின் அம்மாவை தன்னால் முடிந்தளவு பேசிவிட்டு கதிரையில் அப்படியே சாய்ந்து படுத்துவிட்டாள்.

முகுந்தனின் அம்மா இதனைத் தனக்குச் சாதகமாக்கித் தொலைபேசியை எடுத்து மாதவியின் அம்மா பேசியதையிட்டு அழுது அழுது சொல்ல முகுந்தன் கோபத்தின் உச்சத்துக்குச் சென்றுவிட்டான்.

இந்த நேரம் பார்த்து மாதவியின் அப்பா அங்கு வந்தார். அவர் ஒரு அப்பிராணி. முகுந்தனோடு தன்மை யாகக் கதைக்கவே வந்தார். ஆனால் முகுந்தன் அந்த நிலையில் இல்லை. அவரைக் கண்டதும் முகுந்தன் முந்திக் கொண்டான். அவருடைய வயதுக்குக் கூட மதிப்புக் கொடாமல் பேசிவிட்டான்.

மாதவியின் அப்பாவால் எதுவுமே சொல்ல முடியவில்லை. கடைசியாக முகுந்தன் சொன்ன வார்த்தைகள் அவரைத் திடுக்கிட வைத்துவிட்டன.

"உம்மட மகளை இண்டைக்கே கொண்டுவந்து விடிறன். எனக்கு இனி அவள் வேண்டாம்"

இந்த வசனங்கள் ஆயிரம் சுட்டியலால் அவரது தலையில் அடித்ததுபோல் இருந்தது.

எதுவுமே கதைக்காமல் வந்துவிட்டார்.

மாலை வேலை முடிந்து வீட்டிற்குப் போன முகுந்தனை மாதவி ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

"உம்மடை அம்மா எப்பிடி என்ரை அம்மா வைப் பேசேலும்?" என்று கோபமாகக் கேட்டான்.

"போதாக்குறைக்கு கொப்பர் ஏன் ஒவ்விசுக்கு வந்தவர்"

மாதவி கோபமாக அவனை நோக்கித் திரும்பி "எல்லாம் உன்னாலை தான வந்தது" என்று ஆங்கிலத்தில் கத்தினாள்.

" ஏன் நான் என்ன செய்தனான்? அம்மாவிட்டை போனது தப்பே"

" தப்புத்தான். போன நீ இரவு வந்திருக்கலா மில்லே. ஒவ்வொரு நாளும் அங்கை போறதும் ..அங்கையே படுக்கிறதும் எந்த வகையிலை சரி" மாதவி பேசினாள் என்பதைவிட கத்தினாள் என்பதே சரி. கையில் கிடந்த சாமானையெல்லாம் தூக்கி எறிந்தாள்.

"உமக்கென்ன விசரே?" என்று அவனும் பதிலுக்குக் கத்தினான்.

"இனி உன்னோடை வாழேலாது."

என்று அவள் கத்த "அப்ப வெளிக்கிடடி" என்று அவன் சொல்ல அவளும் வெளிக்கிட கோபத்தில் அவளைக் கொண்டுபோய் அவளின் தாய் தகப்பன் வீட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டான்.

எதுவுமே திட்டமிடப்படாமல் கணப் பொழுதுகளில் நடந்து முடிந்துவிடுகிறது.

உணர்ச்சிவசப்பட்டு ஆணும் பெண்ணும் எடுக் கின்ற முடிவுகள் பல சமயங்களில் அவர்களுக்கிடையே யான பிரிவை நிரந்தரமாக்கி விடுகிறது.

மாதவியும் முகுந்தனும் ஏழு வருடங்கள் காதலர்களாக இருந்தும் அவர்கள் தங்கள் மன

அதிர்வுகளைப் புரியத் தவறிவிட்டார்கள்.

இதன் வெளிப்பாடு சிறு பிரச்சினை ஒன்று பூதாகரமாக்கப்பட்டு இருவரும் விவாகரத்துச் செய்யுமளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

இதற்கு எந்தவகையிலும் பெற்றார்கள் குற்றவாளிகளாக முடியாது. முழுக்கமுழுக்க மாதவியும் முகுந்தனுமே பொறுப்பாளிகளாவர்.

மாதவியை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டபின் முகுந்தன் தன் பெற்றாரிடம் சென்று விட்டான்.

இரு வாரங்கள் கழிந்தபின் முகுந்தன் பெற்றாரின் வற்புறுத்தலினால் வழக்கறிஞர் மூலமாக விவாகரத்துப் பத்திரத்தை மாதவி வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

முகுந்தனைவிட்டு வந்த நாள் தொடக்கம் மாதவி அதி கூடிய மன அழுத்தத்தில் இருந்தாள். அவளால் எதையும் சரியாகச் செய்யமுடியவில்லை. குழப்பமான ஒரு மனநிலையிலேயே இருந்தாள். இதனை அவதானித்த மாதவியின் சகோதரி தகப் பனிடம் இதனைக் கூறி முழுக்குடும்பமும் இரண்டு கிழமைகளுக்கு வெளியில் செல்வதென்று தீர்மானித்து பல நாடுகள் ஆலயங்களுக்குச் சென்று வந்தனர்.

மாதவியின் உடம்பு மட்டும்தான் இவர் களுடன் சென்றதேயொழிய அவளின் அந்தரங்க ஆன்மா எங்கோவெல்லாம் தறிகெட்டுச் சுற்றித் திரிந்தது.

மாதவியின் பெற்றோரும் தங்களால் முடிந்தளவுக்கு அவளின் புலனை ஒரு நிலைக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்தனர்.

எதுவும் வெற்றியளித்ததாகத் தெரியவில்லை.

அவர்கள் மீண்டும் நாட்டுக்கு வந்த மறுநாள் முகுந்தனால் அனுப்பப்பட்ட விவாகரத்துக் கடிதம் வந்திருந்தது.

மாதவியின் அம்மாவால் அதனைத் தாங்கமுடியவில்லை.

மாதவி அதனைப் பெரிதாக எடுக்கவில்லை.

அவளின் சிந்தனை வேறு உலகத்தில் இருந்தது.

மன அழுத்தம் என்பது ஒரு நோய். இந்த மன அழுத்தம் ஒரு கட்டத்தில் மன நோயாக மாறிவிடுகிறது. உலகத்தில் உள்ள நோய்களில் இந்த நோயால் பாதிக்கப் பட்டவர்கள் மட்டும்தான் தங்களுக்கு என்ன நடக் கின்றது என்பதை வைத்தியருக்குப் புரியவைக்க முடியாதவர்களாக உள்ளனர். உறவினர்கள் கூறுகின்றதை வைத்தே வைத்தியர்கள் வைத்தியம் செய்கின்றனர். இது கூடுதலாக உறவு முறிவுகளினால்தான் பெரும்பாலும் ஏற்படுகிறது. இது தற்கொலைக்கும் இட்டுச்சென்று விடும்.

மாதவியைப் பொறுத்தளவில் முகுந்தனின் அவசரமுடிவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. வேலைக்குப் போவதும் வந்து அறைக்குள் முடங்குவது மாகவே இருந்தாள்.

யாரோடும் கதைப்பதில்லை.

அவளின் மனம் துடித்துக் கொண்டிருந்தது. மூளை ஒழுங்கற்ற சிந்தனைகளில் இருந்தது. கத்தியைக் கண்டால் அதனால் தன்னைக் குத்த வேண்டும் போல நினைப்பாள். வாழ்க்கையை வெறுக்கத் தொடங்கி யிருந்தாள். வாழ்வதில் ஒரு அர்த்தம் இருப்பதாக அவளுக்குப்படவில்லை.

அன்று அப்படியான சிந்தனையோடு காரையெடுத்துக் கொண்டு போய்விட்டாள்.

மாலை ஏழுமணியாகியும் அவள் வரவில்லை. மாதவியின் குடும்பம் அவள் போகக்கூடிய இடம் எல்லாம் விசாரித்துப் பார்த்தார்கள்.

விடை கிடைக்கவில்லை.

நேரம் இரவு பத்து மணியாகிவிட்டது.

மாதவியின் அப்பா அம்மா சகோதரி மூவரும் இருட்டுக்குள் அமர்ந்திருந்தனர்.

அப்போது கதவு தட்டப்பட்டது.

வந்தது மாதவியல்ல. மாதவியின் கார் இலக்கத்தோடு ஒரு பொலிஸ்காரர் நின்றிருந்தார்.

---

# வைத்தியம் இல்லாப் பைத்தியம்



மலர்தலை உலகில் மனிதம் நிறைத்து
அலகிலா அற்புத உள்ளமும் வைத்து
உயர்வுகள் யாவும் உன்கைக் கொடுத்து
தெய்வம் நீயென ஆகிடும் திறமும்
நல்கி அனுப்பிய நான்முகன் அஞ்சி
விலங்குள் கூட விலக்கிடும் வழியில்
மலங்கள் நிறைந்த பாதை வெளியில்
நடக்கத் துணிந்து நலங்கள் இழந்தாய்
கடந்து நீதியின் கரைகள் உடைத்தாய்
தருமம் என்றொரு பொருளும் உண்டென
கருமம் எதிலும் காட்ட மறந்தாய்
நான்முகன் அனுப்பிய நலங்கொள் மனிதா?
ஏன்முகம் மாறி ஏவற்பேய் ஆனாய்
சூழலும் மையம் சிதைந்த கறங்காய்
விழலுள் வீழ்ந்து வீணில் இறந்தாய்
அறஞ்செய விரும்பென் றௌவைக் கிழவி
திறம்படச் சொன்னாள் அதனை மறந்து
சுயநலம் என்னும் கவரினை எழுப்பி
அயலர் தன்னை அடுத்துக் கெடுத்தாய்
கதியினி யாரென்று கதறுவோர் தமக்கும்
சதிசெய் மனத்தொடு சமரசம் செய்வாய்
பெரியோரை மதிக்கும் இயல்புகள் இல்லை
சிறியோரைக் காக்கும் முறைகளும் இல்லை
கத்தியை தீட்டிப் புத்தியை புதைத்தாய்
சத்தியம் என்பதே சாத்தியம் இல்லை
வைத்தியம் இல்லாப் பைத்தியம் ஆனோம்.

நா.நவராஜ்


■ சி.ஜெய்சங்கர்




# வங்களாதேஷ்: புதிய தேசத்தின் குரல்

## ( Bangladesh The Voice Of A New Nation)

## சில கவிதைகளும் சிறு முன்னுரையும்



கவிஞர் தம்பிமுத்து

"வங்காள தேசத்திலிருந்து கவிதைகள் : புதிய தேசமொன்றின் குரல்" என்ற ஆங்கிலக் கவிதைத் தொகுப்பு 1972இல் இங்கிலாந்தில் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. வங்காள தேசத்து மக்களுக்கு காணிக்கை ஆக்கப்பட்டிருக்கும் இந்தக் கவிதைத் தொகுப்பு பல வகைப்பட்ட முக்கியத்துவங்களை உடையது. எனினும், பெரிதும் அறியப்படாத அல்லது மறக்கப்பட்ட விடயமாகப் போயிருப்பது சிந்தனைக்குரியது.

கவிஞராகவும், கவிதைகளைத் தெரிந்து, தொகுத்துப் பதிப்பித்தவராக வும், இங்கிலாந்தில் பெரிதும் அறியப்பட்டிருந்த, ஈழத்தவரான கவிஞர் தம்பிமுத்து அவர்கள் மேற்படி தொகுப்பை வெளிக்கொண்டு வந்திருந்தார். பிரிட்டிஷ் நந்தி என்ற இந்திய எழுத்தாளர், வங்காள தேசத்திலிருந்து கவிதைகள் (Poem from Bangladesh) வங்காள தேசம் ஒரு புதிய தேசத்தின் குரல் ( Bangladesh : A Voice Of A New Nation) என்ற இருதலைப்புகளில் வங்காள மூலத்திலிருந்து ஆங்கிலத்திற்கு இரு தொகுப்புகளைக் கொண்டு வந்திருந்தார்.



பிலிக்ஸ் ரொப்பொல்ஸ்கி

மேற்படி இரு நூல்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் தொகுப்பாக வங்காள தேசத்திலிருந்து கவிதைகள் : ஒரு புதிய தேசத்தின் குரல் (POEMS FROM BANGLADESH -The Voice Of A New Nation) என்ற தலைப்பில் கவிஞர் தம்பிமுத்து அவர்கள், அவரது லைரே பர்ட் பதிப்பகம் ( LYRE BIRD PRESS, POETRY LONDAN EDITION) மூலம் வெளிக்கொண்டு வந்திருந்தார். வங்காள தேச போராட்டத்தின் நியாயக் குரலை, புதிய தளங்களுக்கும் காலங் கடந்தும் ஒலிக்க வைக்கும் இலக்கியச் செயல்வாதமாக மேற்படி கவிதைத் தொகுப்பின் ஆக்கம் விளங்குகின்றது. உலகின் ஒரு பகுதியில் நிகழ்த்தப்படும், ஒரு தொகுதி மக்களுக்கு எதிரான அனர்த்தத்தினை, உலகின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் கலை ஆளுமைகள் இணைந்து எதிர்க்கொள்ளும் கலைப்பண்பாட்டு நடவடிக்கையின் ஓர் உதாரணமாக இக்கவிதைத் தொகுப்பின் உருவாக்கம் காணப்படுகின்றது.

இந்தியரான பிரிட்டிஷ் நந்தி, இங்கிலாந்தில் வசித்த ஈழத்தவரான கவிஞர் தம்பிமுத்து, கவிதைகளுக்கான கோட்டோவியங்களை வரைந்திருந்த இங்கிலாந்தின் பிலிக்ஸ் ரொப்பொல்ஸ்கி (Feliks Topolski) என வெவ்வேறு நாட்டினர் புதிய தேசத்தின் குரலை வெளிப்படுத்த இணைந்திருந்தனர். அரசாங்கங்கள் அதிகார நலன்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குபவை, ஆனால் ஆளுமைகளின் இணைவு, மக்களின் இணைவு நீதிக்கானது, நியாய வெளிப்பாட்டிற்கானது. இந்தவகையிலான முக்கியத்துவம் கொண்டதே இக்கவிதைத் தொகுப்பு. இக்கவிதைகளை வாசிக்கும் பொழுதும், மொழிப் பெயர்க்கும் பொழுதும் ஈழத்துக் கவிதைகளின் ஆங்கிலத் தொகுப்பொன்றின் தேவை பற்றிய ஆதங்கம் தவிர்க்க முடியாதது. வங்காள தேசக் கவிதைகள் வெற்றி பெற்ற போராட்டமொன்றின் கதை. ஆயினும், இரண்டாம் உலகப் போருக்குப் பின் வெற்றி பெற்ற போராட்டங்களும் சரி, தோல்வி அடைந்த போராட்டங்களும் சரி ஒருமித்து எதிர்க்கொள்ள வேண்டிய போராட்டமாக, அண்மைகால உரையாடலாக அமையும் உலகமயமாக்கத்திற்கெதிரான போராட்டமாக, நவகாலனியம் எனப்படும் தாராளவாதப் பொருளாதார ஆதிக்கங்களை எதிர்கொள்ளுவதற்கான போராட்டமாக, நடைமுறைக்குரிய தாக இருக்கிறது.



பிரிட்டிஷ் நந்தி

## தனியனான மனிதன்

களைத்து துக்கத்துடன்
கண்ணீர் படிந்த முகத்துடன்
அவன் தனியனாக அமர்ந்திருந்தான்
ஏன்? என அவனிடம் கேட்டேன்..

மௌனமாக என்னைப் பார்த்தவன்
அமைதியாக இருந்தான்

ஏன்? என மீண்டும் அவனிடம் கேட்டேன்
என் கண்களை ஊடுருவிப் பார்த்தவன்
எதுவுமே பேசவில்லை...

பிறகு, எழுந்தவன் போய்விட்டான்
மௌனத்தை வைத்து விட்டு....

– ஒமர் அலி

## பெண்

கடந்த இலையுதிர் காலத்தில்
கணவனைப் பறிகொடுத்திருந்தாள்.
அவளது குடில் எரியுண்ட பொழுதில்
அந்தச்செய்தி ஊர் முழுதும் பரவியது.
அதே குளிர்காலத்தில் அவள் தாயும் இறந்து போனாள்.
அந்தப்பெண் அழுதாள்
அதுமுதல் மீண்டுமொரு தடவை
அவள் சிரிக்கவேயில்லை
அந்தப் பெண்ணின் பெயரை
நான் வெளிப்படுத்த மாட்டேன்.

அவளுக்கொரு குழந்தை இருந்தது
அது அப்பக்கமும் இப்பக்கமுமாக
அசைந்து தவழ்ந்தது.
ஒரு நாள், குழந்தை தவழ்வதை நிறுத்தியது
இந்தச் செய்தியைக் கேட்ட பொழுதில்
அயலவர் அனைவரும் அழுதனர்
அவள் மட்டும் அழவில்லை
அவள் சிரித்தாள்.
அந்தப்பெண்ணின் பெயரை
நான் வெளிப்படுத்த மாட்டேன்...

– அபு ஜபார் ஒபாய்துல்லா

## ஒரேயொரு வண்ணம்

ஒரேயொரு வண்ணமே இன்று : அது சிவப்பு
ஒரேயொரு பாடலே உண்டு : அது சுலோகம்
ஒரேயொரு இடத்திலே முட்டிகள் உயரும்: அது ஊர்வலம்
ஒரு புதினப் பத்திரிகை : அது சுவரொட்டி
ஒரேயொரு வண்ணம்: அது சிவப்பு

எனது மக்களின் சிரிப்பு கண்ணீராகிவிடும் பொழுதில்
எனது மக்களின் பாடும்குரல் வேதனையின் அழுகையாகிவிடும் பொழுதில்
வண்ணமயமான நிலப்பரப்பில் இருந்து
அனல்கக்கும் எரிமலையில் பெருகிவரும்
எரி குழம்பென..
வெளிவரும் சுவரொட்டி
எங்களுக்கு வேண்டும்
உணவு உடை வாழும் உரிமை

இந்த நிலம் எனது
இந்த மண் எனது
அதன் புழுதியெல்லாம் என் குருதியில் கலந்தது
தங்களுக்குரியதை உரித்துடையதாக்க
அழகிய இந்நிலத்தின் மனிதர்கள்
கிளர்ந்தனர்..

வெற்றியும் தோல்வியும் போரின் அருகருகிருப்பவை
நம்பிக்கையைக் கைவிட காரணங்கள் எமக்கில்லை

சுவரொட்டி சுவரொட்டி சுவரொட்டி
ஊர்வலம் ஊர்வலம் ஊர்வலம்
மக்கள் மக்கள் மக்கள்

– கவி ஹஸன் ஹபிப்

## வெற்றி எனதே

குற்றவுணர்வு செத்துப்போய்விட்டது,
அதனை சாகவிடுங்கள்:
நாங்கள் அறிவுடைமையை அறுவடை செய்வோம்.
அனர்த்தம் அதன் அண்ணங்களை விரிக்க விடுங்கள்
பூச்சிகளை எனது மூளைக்குப் படையெடுக்க விடுங்கள்.

எனது இதயம் குளிர்ந்தே போய்விட்டது,
அதனை சாகவிடுங்கள்
நகங்கள் பிறாண்டி,
குருதி கொப்பளித்துப் பாயவிடுங்கள்
மனம் பலவீனப்பட்டிருக்கிறது,
வடுக்களே எஞ்சியுள்ளன:
நானே வெற்றிப் பெற்றவன், அவற்றைச் சாகவிடுங்கள்.

– சனாயுல் ஹக்

## தீர்மானம்

பல மனிதர்கள் மௌனமாக இருக்கிறார்கள்:
பல தெருக்கள் குருதியினால் செம்பாரித் திருக்கின்றன
பல பூக்கள் வதங்கிப் போய்விட்டன
இரவின் இருண்மை எங்கள் மீது கவிந்திருக்கின்றது.

இருந்த பொழுதும் நாங்கள் நிச்சயமாக உள்ளோம்
ஒருநாள்
புதிதாக மலரும் பூக்களிடை
தெருக்களில் தலை நிமிர்ந்து
நடைபயில்வோம்

உதிர்ந்துவிட்ட மலர்களை நாங்கள் தேடுவோம்
கிடைத்த மாத்திரத்தில் அவற்றை
எங்கள் இதயங்களில் நெருக்கமாக
வைத்துக் கொள்வோம்

– சகியுல் ஹக்

கதை இல்லாக் கதைகள் - 7

# அவரும் நாயும்

கொற்றை
பி.கிருஷ்ணானந்தன்

கனகசபை அண்ணை இலங்கை போக்கு வரத்துச் சபையில் பஸ் நடத்துனராகக் கடமையாற்று பவர். கஞ்சனாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர் கள் அவரிடம் தான் பாடம் கேட்க வேண்டும். வசதி யிருந்தும் ஆடை அணிவதில் கூட அவ்வளவு சிக்கனம். இரண்டு செற் ஜீன்ஸ் - சேர்ட் மட்டும் ஐந்து ஆண்டு களுக்கு அவருக்குப் போதுமானது.

கொழும்பு போன்ற தூரப் பயணங்களுக்கு பஸ் போகும் போது சாப்பாட்டுக்காக இடையில் நிறுத்தப் படும் கடைகளில் வழங்கப்படும் சலுகையான ஓசிச் சாப்பாட்டை ஒரு பிடி பிடிப்பார். மற்றும்படி காசு செலவழித்துச் சாப்பிடுவதில்லை.

சாதாரண நேரங்களில் சிற்றுண்டிச் சாலை களுக்குப் போனால் அங்கு கண்ணாடிப் பெட்டிக்குள் நிறைந்திருக்கும் சிற்றுண்டிகளைக் காட்டி,

தம்பி... வடை என்ன விலை...?

சுசியம்...?

றோல்...?

அந்த வாய்ப்பன்...?

அ... ஒரு பிளேன் ரீ மட்டும் போதும். தாருங்கோ... என்பார். அந்த உணவுப்பண்டங்களின் விலையைக் கூட்டிப்பார்த்து அவ்வளவு தொகையையும் தான் மிச்சம் பிடித்துச் செல்வதாக ஒரு மனத்திருப்தி அவருக்கு

கடந்த வாரம் தான் கனகசபை அண்ணை இந்த டிப்போவுக்கு மாற்றலாகி வந்தார். டிப்போவில் நிற்கும் போது தாவர போஷினியான அவர் வீட்டிலிருந்து கொண்டு வரும் சாப்பாட்டைச் சாப்பிடுவார்.

முதலாம் நாள் சாப்பிட்டு முடிந்தபின் மீதியை ஒரு ஒதுக்குப் புறத்தில் கொட்டினார்.

சூ...சூ...சூ...

சத்தமாக நாயைக் கூப்பிட்டார்.

டிப்போவில் நிற்கும் நாய் ஆவலோடு ஓடி வந்தது.

கருவேப்பிலை, சப்பித்துப்பிய முருங்கைகாய், கறிமிளகாய்காம்புகள், சப்பி விழுங்க முடியாத முற்றிய வெண்டிக்காய்த் துண்டங்கள். இத்தியாதியைத் தவிர வேறொன்றுமில்லை. நாய் மணந்து பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிப்போனது.

இரண்டாம் நாள்...
மூன்றாம் நாள்...
நான்காம் நாள்...

நாய் ஓடி வந்து விட்டு ஏமாற்றத்துடனே திரும்பிப் போனது.

ஐந்தாம் நாள் கனகசபை அண்ணை அட்டகாச மாக நாயைக் கூப்பிட்டார். நாய் படுத்திருந்த படியே தலையை நிமிர்த்திப் பார்த்தது. ஆளைப் பார்த்ததும் திரும்பவும் படுத்துக் கொண்டது.

கதை இல்லாக் கதைகள் - 8

# எடி ஆம்பிளையளடி

தம்பியண்ணைக்குத் தாய் தகப்பன் இட்ட பெயர் தம்பிப்பிள்ளை. வசதிகருதி பேரைச் சுருக்கி வயது கருதி "தம்பி" என்றோ அழைக்கப்பட்டு பின்பு இளைஞர்களால் "தம்பியண்ணை" என்றழைக்கப்பட்டு அதுவே நிரந்தரமாகி விட்டது.

மெல்லிய, சற்று வளைந்த உருவம், ஒன்றே முக்கால் கண்; உச்சி பகிடு பிரிக்காமல் மேவி இழுத்த தலைமுடி, அரையில் சாரம், சேர்ட்ட அணிவதில்லை. இதுதான் அவருடைய தோற்றம்.

இப்போது தம்பியண்ணைக்கு நாற்பத்திரண்டு வயதாகி விட்டது. பதினாறு வயதில் கூலி வேலைக்குப் போகிற பெண்களோடு தானும் கூலி வேலைக்குப் போகத் தொடங்கியவர். இப்போதும் பெண்களோடு தான் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றார். உரம் பலம் ஆன வேலைகள் செய்ய மாட்டார். வெங்காயம் நடுதல், கிண்டுதல், களை பிடுங்குதல், தலையில் பொதி சுமத்தல் இவைகள் தான் அவரால் முடியும்.

கல்யாண வயதில் எல்லோரையும் போலவே தம்பியண்ணைக்கும் கல்யாண ஆசை இருந்தது தான். ஆனால் எவருமே தம்பியண்ணைக்குப் பெண் கொடுக்க முன்வரவில்லை. எந்தப் பெண்ணுமே இவரை ஒரு "ஆம்பிளை"யாக நினைத்து ஏறெடுத்துப் பார்க்கவு மில்லை.

ஆகவே பிரம்மச்சரியத்தைச் சந்தர்ப்ப வசத்தினால் பேணி பாதுகாத்துக் கொண்டிருந்து விட்டார்.

ஒருநாள் தோட்டத்தில் கூலி வேலை செய்து விட்டு கோகிலத்துப்பெண்களுக்குள் ஒரு கண்ணனாக பெண்களோடு வந்து கொண்டிருந்தார். இடையில் சனநடமாட்டம் குறைந்த ஒரு வெளியில் தம்பி யண்ணைக்குச் சிறுநீர் கழிக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது.

"கொஞ்சம் நில்லுங்கோ வாறன்"

கூறிக் கொண்டே அவர்கள் பார்த்துக் கொண்டு நிற்க அவர்களுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றபடி சாரத்தைத் தூக்கி "ஒண்டுக்கு" அடித்தார். பெண்களும் அதைப் பொருட்படுத்தாமல் தம்பி யண்ணை வரும்வரையும் அப்படியே காத்துக் கொண்டு நின்றார்கள்.


இப்படி வழமையாக நடக்கிறது தான்.

எதிரே தூரத்தில் இரண்டு இளைஞர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் வருவதை தம்பியண்ணை கண்டு விட்டார்.

"எடி... ஆம்பிளையளடி" என்று கூறிக் கொண்டே தனது கருமத்தை இடையில் நிறுத்திவிட்டு ஓடி வந்து பெண்டுகளோடு நின்று கொண்டார் தம்பியண்ணை.

இ.சு.முரளிதரன்

# சொற்களில் "Helihopter Shot" அடிக்கும் கவிஞர் ச. முகுந்தன்



தேர்ந்தெடுத்துச் சீவிய வார்த்தைகளின் நயாதீதமான ஒழுங்கமைப்பினையே கவிதை என நம்புகிறேன். விதிகளுக்குள்ளும் விதி மீறல்களுக் குள்ளும் நிகழும் சொற்களின் ஆட்டமாகக் கவிதை அமைகின்றது. ஒழுங்கினைக் குலைத்து வெளியேறும் கவிதைகள் கூட மாற்றொழுங்கு ஒன்றினைக் கட்டமைத்து விடுவதனை அவதானிக்க முடிகிறது. சொற்களின் துடுப்பாட்டமான மரபுக்கவிதையிலே "ஹெலிக்கொப்ரர் சொட்" அடிக்கும் ஆளுமை மிகமிகச் சிலரிடமே காணப்படுகின்றது. இத்தகைய ஆளுமை மிகு கவிஞராக ச.முகுந்தன் காணப்படுகின்றார். ஓசையின் வரம்புக்குள்ளே நின்று சொற் துடுப்பாட்டத் திலே அற்புதங்களை நிகழ்த்தி விடுகின்றார். இளம் வயதிலேயே இலக்கியத்தில் ஈர்ப்புக் கொண்டு ச.வே.பஞ்சாட்சரம், சோ.பத்மநாதன், இ.முருகையன் என்போரிடம் மரபுக் கவிதைகளை முழுமையாகக் கற்றுணர்ந்தவர். தனித்துவமான பல அடையாளங் களையும், மரபின் நீட்சியினையும் கொண்டனவாக ச. முகுந்தனின் கவிதைகள் அமைந்துள்ளன.

சொற்களால் முழுமைச் சுற்றினை உரு வாக்கிக் கவிதையினை உச்சத்திற்கு அழைத்துச் செல்ல இவரால் முடிகின்றது.

வாய்ப்பூட்டு வழிப்பூட்டு வாசற்பூட்டு
வதைப்பூட்டும் நம் இளைஞர் மனதை என்றும்
காய்ப்பூட்டும் தரப்படுத்தற் கல்விப்பூட்டு
களைப்பூட்டும் போரால் நம் கனவும் பூட்டு
நோய்ப்பூட்டு கொழும்பில் நாம் நுழைந்தால் பூட்டு
நொந்தென்ன ஆவதென்று கிடந்த என்னை
பாப்பூட்டு எனப்பணித்து கற்பின் பாவை
பாதத்தில்பூட்டி வைத்த பொருளைத்தந்தான் என்
நாப்பூட்டுப் பட்டிடையில் சலிப்பூட்டாமல்
நான்பூட்டும் த்மிழ் உம்மை மலைப்பூட்டட்டும்

என்னும் இக்கவிதை "கண்ணகியின் காற் சிலம்பாக" தன்னை உருவகித்துக் கவியரங்கொன்றிலே அவராற் பாடப்பட்டது. முழு நீளப் பந்தாகவோ துடுப்பின் அடியில் விழும் பந்தாகவோ வந்து விழுகின்ற கருப் பொருளை சரியாக உள்வாங்கி வார்த்தைகளின் முழுமைச்சுற்றுக்குக் கொண்டு சென்று உயர்த்தி அடிக்கின்ற இவ்வகைப் பணிபினையே "ஹெலி கொப்ரர் சொட்" என்று சுட்டினேன். கண்ணதாசன் இப்பணிபினை திரையிசைப்பாடல்களில் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வார்த்தை வங்கியினை தன்னகத்தே கொண்ட வல்லமை மிகுந்தவர்களாலேயே இத்தகைய கவிதைகளை எழுத முடியும்.

"வணங்குதலை வாலாட்டி இணங்குதலை
எல்லைதனைச் சுரண்டுதலை மேற்குலகின்
தூண்டுதலைச் சுணங்குதலைத் தீர்வென்று
சொல்லுதலைப் புதுக்கட்சி தொடங்குதலை
இடைநடுவில் தொங்குதலை இவ்வாறு
விளங்குதலைக் கண்டெமக்கு
விக்கி தலை சுற்றாச்சு"

என்று சமகால ஈழத்து அரசியலை அங்கதப் படுத்துகின்றார். இத்தகைய அதிரடிச் சொற்குத்துகள் மட்டுமே அவரது அடையாளமில்லை என்பதும் கவனத்

திற்குரியது. சிலேடை வெண்பாக்கள் பலவற்றினை எழுதியுள்ளார். இத்தகைய வெண்பாக்கள் புதுமை யான தளத்திலே அமைந்திருக்கும்.

"தோப்படிக்கச் சொல்வதால் துண்டகற்றி செந்தமிழில்
பாப்படிக்கும் ஞானமது பருக்குவதால் - வாய்ப்பிருந்தால்
முத்தி அருளும் முறைகளால் "சீனியரும்"
சித்தி விநாயகரும் சேர்த்து"

என்று பல்கலைக்கழகத்தில் பகிடிவதையினை நிகழ்த்தும் "சீனியர்" சிலேடை வெண்பாவிலே பகிடிக்குள்ளாக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

வடக்கன் மாடு, குட்டிச் சுவர், சங்கிலிய மன்னன் திருத்தசாங்கம் போன்ற எண்ணற்ற கவிதை கள் ச.முகுந்தனின் ஆளுமையினை வெளிப்படுத்தி நிற்கின்றன. "சிகரெட்டின் சீக்கிரெட்" என்ற கவிதை யிலே "புற்று நோயதன் புகுமனை விழாவில் நட்டுமே வைத்த நாலிஞ்சி வாழை" என்று "சிகரெட்டை" அற்புதமாகப் படிமப்படுத்தியுள்ளார். நாவலர் வீதி யினை பாகற்காயின் மேற்பரப்பிற்கு உவமித்த விதம் அன்றைய கால சஞ்சீவி வாசகர்களின் ஞாபக இடுக்குகளில் என்றென்றும் புதைந்திருக்கும்.

"முட்கம்பி விடு தூது" கவிதை ஊடாக பலரது கவனத்தினை ஈர்த்துள்ளார். எழுத்தாளர் சுஜாதா அவர்கள் "கற்றதும் பெற்றதும்" என ஆனந்த விகடனின் எழுதிய தொடரில் பின்வரும் கவிதையினை பதிவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

"வேட்டுக் கோதினைப் போல நிறத்தவள்
வெட்கத்தில் "பரா" லைற்றாய் ஒளிர்பவள்
றோட்டுச் சோதனைச் சாவடி போலவென்
இரவுத் தூக்கப் பயணம் தடுப்பவள்
காட்டிக் காட்டி முகத்தை மறைப்பதில்
கண்ட தீர்வுப் பொதியினைப் போன்றவள்
வீட்டைத் தேடிப் பிடித்து என்னிலை
எஃகுக் கம்பியே சொல்லிவா சீக்கிரம்"

வாழ்வின் அபத்தங்களையும், புதிர்களையும், பொய்மைகளையும், முரண்களையும் வாசகனைத் தொந்தரவு செய்யும் வகையிலே வெளிப்படுத்தும் "மாயக் கண்ணாடியாக" ச. மு.குந்தனின் கவிதைகள் அமைகின்றன.

"சந்தர்ப்பச் செட்டைகளை
சமுதாயப் புற்றுக்குள்
சென்றுரித்துச் சென்றுரித்துச் சீவிக்கும்
சாரைகள் முன்
தோல் கழற்ற விரும்பாத சீவன் நான்
ஒத்தோடத் தெரியாத செம்மறி நான்"

என்று நுண்மொழி முகாமைத்துவத்தோடு சித்திரிக்கும் பண்பு நிறைந்ததாகவே அவரது கவிதைகள் அமைகின்றன.

"ஊற்று நீர் கிணறுகளின்
ஓரத்தில் வான்கிழித்து
ஆச்சரியக் குறிகளாய்
அசத்துகிற கமுகாள்
தலைபலது முறிந்தாலும்
தளைப்பமென விண்ணோக்கிக்
கலையழகு சேரக் காற்றில் சபதமிடும்"

என இயற்கையின் வசீகரத்தை வார்த்தைகளில் படம் பிடிக்கும் இக்கவிஞரின் பிரதிகளைப் பூரணமாக ஆய்வுக் குட்படுத்தும் போது புதிய பல பக்கங்களையும் தரிசிக்க முடியும்.


## ஜீவநதி நடாத்தும் "கொரோனா" கவிதைப் போட்டி



இந்தப் போட்டியின் முக்கிய நோக்கம் - காலத்தைப் பதிவு செய்தல்
முதல் பரிசு 5000/-
இரண்டாவது பரிசு 3000/-
மூன்றாவது பரிசு 2000/-



முதல் மூன்று இடங்களைப் பெறும் கவிதைகளுடன் மேலும் முதல் 25 இடங்களையும் பெறும் கவிதைகள் "கொரோனா" கவிதைத் தொகுப்பில் இடம்பெறும்.

விதிமுறைகள்

- கருப்பொருள் - கொரோனாவும், கொரோனாவின் பாதிப்புகளும் .
- கவிதைகள் அனுப்ப வேண்டிய ஈமெயில்- jeevanathy@yahoo.com
- உங்கள் முழுப்பெயர் (புனைபெயர் இருப்பின்.. புனைபெயரையும் குறிப்பிடுக), தொலைபேசி இலக்கம், விலாசம் தனியான பக்கத்தில் அனுப்பவும் (தொலைபேசி இலக்கம் கட்டாயம்)
- ஈழத்தவர்களும், ஈழத்தை சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களும் பங்கு கொள்ளலாம்.
- ஒருவர் ஒரு கவிதை மட்டும் அனுப்பலாம்.
- ஜீவநதி குழுமத்தினர் பங்கேற்க முடியாது
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- வேறு எங்கும் பிரசுரமாகாததாக இருக்கவேண்டும்.
- கவிதைகள் புதுக்கவிதைகளாகவோ/ மரபுக் கவிதைகளாகவோ அமையலாம்
- கவிதை வரிகள் 10 இற்கு குறையாமலும் 30 இற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
- முடிவுகள் ஆனி மாத ஜீவநதி இதழில் வெளியாகும். முதல் மூன்று இடங்களைப் பெறும் கவிதைகளும் ஜீவநதி ஆனி இதழில் பிரசுரம் ஆகும்.
- கொரோனா தொடர்பான படங்களை அனுப்பினால் தொகுப்பின் அட்டை, ஜீவநதி அட்டை, தொகுப்பின் உள் சேர்க்கலாம்.

• முடிவு திகதி 20.5.2020

க.பரணீதரன் - ஆசிரியர் ஜீவநதி

# பாடுமீன் புத்தகத் திருவிழா ஓர் அனுபவப் பகிர்வு

**இரா. சுலக்ஷனா**

மீன் பாடும் தேன் நாடாம் மட்டு நகரில், 2020.03,08மற்றும் 09 ஆம் திகதிகளில், பாடுமீன் புத்தகத் திருவிழா, அரசடி தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. பாடுமீன் புத்தகத் திருவிழா, எண்ணிறைந்த வாசர் வருகையில், விழாக்கோலம் பூண்டமையை இரண்டு நாட்களிலும் அவதானிக்க கூடியதாக இருந்தது. மூன்றாவது கண் உள்ளூர் பதிப்புக்கள், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையப் பதிப்புக்கள், பெரியார் வாசகர் வட்டம் என இன்னோரன்ன பதிப்புக்களும், பதிப்பகங்களும் இணைந்து நடாத்திய புத்தகத் திருவிழாவானது, இரண்டு நாட்களும் காலை 8 மணியிலிருந்து இரவு 9 மணிவரை நடைப்பெற்றது.

"வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்" என்ற சிந்தனையில் நிலைக்கொண்டிருக்கும் சிந்தனாவாதிகள், வாசிப்பு பழக்கம் நலிவடைந்து விட்டதென புலம்புதல், மனிதர் அவர்தம் சமூகவாழ்வில், புத்தக வாசிப்பு, நலிவடைந்து விட்டதான பார்வையை அடியொட்டிக் கூட இருத்தல் கூடும். ஆயினும், என்னளவில், "வாசிப்பு பழக்கம் நலிவடைந்து விடவில்லை: அதன் ஊடகம் தான் மாற்று வடிவம் பெற்று, வாசிப்பு முறையை, முறைமையை மாற்றியமைத்திருக்கின்றது." என்ற நிதர்சனநிலை எப்போதும் நிலைக்கொண்டுள்ளது.

ஆனால் வாசிப்பு என்பது, எதன் அடிப்படையில், எந்த நோக்கத்திற்கானதாக இருக்கின்றது? என்பது ஆராயப்பட வேண்டிய தொன்றாகும். இத்தகையதொரு பின்னணியில் நின்றுக் கொண்டு, பார்க்கும் போது அன்றைய இரு தினங்களிலும், வாசகர் வட்டம், குறிப்பாக மாணவர் சமுகத்தேவை என்பது, பரீட்சைக்கான முன்னோடி வாசிப்புக்குள்ளும், பாடத்திட்ட வாசிப்புக்குள்ளும் மட்டிட்டு நின்றமையை காண முடிந்தது. அதன் அடுத்த படிநிலையில் இருக்கும் பல்கலை மாணவர் தேவை என்பதும் துறை சார்ந்த தேடலுக்கான தேவையை பூர்த்திச் செய்து கொள்வதாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தம் துறை சார்ந்த தேடல் வாசிப்பில் இருத்தல் தவறு என்பதற்கில்லை: ஆனால், அத்தோடு மட்டும் நிற்றல் என்பதுதான் தவறு என்பது என் நிலைப்பாடு.

"கண்டது கற்க பண்டிதனாவான்" என்பதற்கமைய, வாசிப்பு என்பது எப்போதும் பன்மைத்துவமுடையதாய், பல்துறைசார்ந்ததாய் இருக்க வேண்டும்.









குறிப்பாக, மாணவர் ஆளுமை விருத்தியில் வாசிப்பின் வகிபாகம் என்பது அளப்பெரியது. ஆக இத்தகைய வாசிப்பு என்பது, பல்துறை சார்ந்ததாக விரிவடையும் போது தான் அங்கு மனிதர் பூரணமடைகின்றனர். குறிப்பாக இங்கு மனிதர் பூரணமடைகிறார் என்பது, அறிவு சார்ந்த பூரணத்துவத்தையே, வெளிப்படுத்துகிறது. அறிவுசார் பூரணத்துவம் என்பது, எப்போது சாத்தியமாகுமெனில், பல்துறை சார் வாசிப்பிற்கு, மனிதர் இயல்பாகப் பழக்கப்படும் போது தான்.

ஆக, இத்தகைய பல்துறை சார் வாசிப்பு என்பதை, சிறுபராயத்திலிருந்தே உருவாக்கி விட வேண்டிய தேவையும் கடப்பாடும், பெற்றோரின் பால் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. இவ்வாறு பல்துறை சார்ந்து வாசிப்புகள் விரிவடையும் போது தான், சமூக சமத்துவம் அல்லது சமூக நல்லிணக்கம் என்பதும் சாத்தியப்பாடுடையதாகின்றது. ஏனெனில், பல்துறை சார்ந்த வாசிப்பின் வழிதான் சமூககட்டுக்கள் கட்டவிழ்க்கப்பட்டு, கட்டப்படுவதுடன் ஏற்கனவே, சமூகத்தில் இருக்கின்ற அசமத்துவப் போக்குகளை கேள்விக் கிடமாக்கி, சமத்துவ நிலையை நோக்கி பிரவேசிக்க முடிகின்றது. குறிப்பாக, "சக மனிஷியை மனிஷியாக அங்கீகரித்துக் கொள்ளுதல் என்பது வாஞ்சையான அன்பின்பாற்பட்டது." என்ற ஓரின சேர்க்கை தொடர்பான தெளிவினை, சமூகம் இத்தகைய வாசிப்பின் அடிப்படையிலேயே, பெற்றுவருகின்றமையைக் குறிப்பிடலாம்.

இதேவேளை வாசிப்பு என்பது, பிரபலமாக பேசப்படுகின்ற, அல்லது உள்ளங்கை நெல்லிக்கனிப் போல், அடையாளப்படுத்தப்பட்டுக் கிடக்கும், நபர்கள் தொடர்பான, அல்லது அவர்களின் படைப்புகள் தொடர்பான வாசிப்பாகவே, சம காலத்திலும் நிலவி வருகின்றது. இந்த அடிப்படையிலேயே, பாரதியும், திருவள்ளுவரும், பெரியாரும், வைரமுத்துவும் உலகளாவிய வாசிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றனர். இவர்கள் தொடர்பான வாசிப்பு என்பதும், அவர்களது படைப்பு சார்ந்து மாத்திரம் மட்டிட்டு நில்லாமல், சமூக பார்வையில் அவர்களது படைப்புகள் கட்டவிழ்க்கப்பட்டு, கட்டப்பட்டுள்ள திறனாய்வு சார்ந்த வாசிப்பாகவும், தம் பார்வையை அகலித்துக் கொள்ள வேண்டிய தேவையும் இருக்கின்றது.

இவ்வாறு, உலகளாவிய வாசிப்பு என்பது எவ்வாறு, இன்றியமையாததோ, அவ்வாறு தான் உள்ளூர்ப் படைப்புக்கள் சார்ந்த வாசிப்பும் அவசியமாகின்றது. ஏனெனில், மேலைத்தேய அறிவுசார் பரப்பில், உருவாக்கப்படுகின்ற கோட்பாடுகளும், சிந்தனாவாதங்களும் கீழைத்தேயம் தொடர்பான அவர்களின் வாசிப்பின் பாற்பட்டதே. இந்த பின்னணியில் தான், மேலைத்தேய படைப்புகளை, மையப்படுத்தி ஏனைய படைப்புகளை வாசிக்கின்ற, ஒருவகையான காலனித்துவ மனோபாவம் பரவலாக நிலவி வருகின்றது. எனவே இத்தகைய காலனிய மனோபாவத்திலிருந்து விடுபட உள்ளூர் படைப்புகள் தொடர்பான வாசிப்பு என்பது இன்றிய மையாத தாகின்றது. ஆக, உள்ளூர் படைப்புகள், உள்ளூர் படைப்புகள் சார்ந்த படைப்பாளிகள் தொடர்பான வாசிப்பு என்பது அவசியமாகின்றது.

எவ்வாறு, உலகளாவிய படைப்புகள் நோக்கப்படுகின்றதோ, அவ்வாறே உள்ளூர் படைப்புகளும் பரந்தளவில் வாசிப்பிற்கு உட்படுத்தப் படல் வேண்டும். இவ்வாறு உள்ளூர் படைப்புகள் சார்ந்த வாசிப்பு அகழ்த்துச் செல்லும் போது தான், தத்தம் குழுமம் சார்ந்த தெளிவினை பெறுவதுடன், தத்தம் பாரம்பரிய கலைகள் தொடர்பாகவும், மரபுரிமைகள் தொடர்பாகவும் புரிதல் நிலை ஏற்படுவதுடன், அவற்றின் காப்பீடாகவும் செயற்படுவதற்கான வாய்ப்புகளும் கிட்டும் என்பது திண்ணம். இந்த அடிப்படையில், அனைத்து வகையான வாசிப்பிற்கும் இடமளிக்கும் வகையில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, "பாடுமீன் புத்தகத் திருவிழா" ஏற்பாட்டுக்குழுவிற்கு பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.

## கனிபோல் இனித்திடுமா காசு?

அணில்கள் அந்தரித்துக் கத்தும்
சத்தங்கள் கேட்டன
வீட்டுக் கதவினைத் தாண்டி
வெளியில் வந்து பார்த்தேன்
முற்றத்து மாமரக் கொப்புகளில்
சுற்றித் திரிந்த அணில்கள்
வாலைக் கிளப்பிக் கிளப்பி
வளைத்துக் கொண்டே
அந்தரித்துக் கத்தின
தலையைக் குனித்து
நிமிர்த்தி எதையோ
தேடித் தேடிக் கத்தின.

பாவமே யந்த அணில்கள்
வயிற்றுப் பசியில் வாடித் தவித்தன
தின்னக் கனிகளைத் தேடி அலைந்தன
மாமரத்து மாங்காய் முழுவதையும்
நேற்றுத்தான் விற்றேன் விலைபேசி
காய்கனி பிஞ்செல்லாம் சேர்த்து
ஆய்ந்துகொண்டு சென்றனரே.
சூறா வளியொன்று வந்து
சுழற்றிவிட்டுச் சென்ற மரம்போல்
முற்றத்து மாமரம் நின்றது.

சின்ன மகளும் ஓடி வந்தாள்
கத்தும் அணில்களைக் கண்டாள்
"இனியிந்த மாமரம் எப்போது
காய்த்துக் கனிதரும் அப்பா? என்றாள்.
"இன்னும் கொஞ்சநாட் சென்றதும்
மீண்டும் காய்கள் தோன்றிடும்" என்றேன்.
"மருந்தோடு வந்து
மாங்காய் பிடுங்குமந்த
மாமாவை மீண்டும் மரத்தில்
ஏற விடவேண்டாம்"
என்றென்னைத் தீண்டினாள்.
காய்விற்றுப் பெற்ற காசெந்தன்
நெஞ்சுக்குள் வந்து புகைந்தது.
"சந்தையிற் பத்து மாம்பழங்கள்
இன்றுவாங்கி வந்திடுவேன் – அவற்றை
உனக்கே தந்திடுவேன்" என்றேன்.
"அந்தப் பழமொன்றும் வேண்டாம்
சந்தையில் விற்கும் பழங்களில்
உண்டாம் நச்சு மருந்து அவற்றை
உண்டால் நலங்கெட்டுப் போய்விடுமாம்
பள்ளியில் நாங்கள் படித்தோம்" என்றாள்.
அம்மா வென்று அழைத்துக் கொண்டே
சும்மா வெங்கோ ஓடி மறைந்தாள்.

– இராஜகிருபன்

# திரும்பி பார்க்கிறேன் - 13

தெணியான்



ஆசிரிய பணியில் வெளிமாவட்டச் சேவை அக்காலத்தில் கட்டாயமாக இருந்தது. நான் ஆசிரிய பயிற்சியைக் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் நிறைவு செய்து கொண்டு, 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஊவா மாகாணம் பண்டாரவளை அட்டம்பிட்டிய சிங்கள மகா வித்தியாலயத்தின் தமிழ் பகுதிக்கு ஆசிரியராகச் சென்றேன். மலையகத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் பிள்ளைகள் அங்கு கல்வி கற்றார்கள். அந்தப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கக் கிடைத்தமை பெரும் பேறாக இன்றும் நான் கருதுகின்றேன்.

தேயிலைத் தோட்டத்து உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் அங்கிருந்து பன்னிரண்டு மைல் தூரத்தில் இருந்த பதுளை நகரத்துக்கு பஸ் ஏறி இறங்கிச் சென்று கல்வி கற்பதே கௌரவமாகச் செல்வது வழக்கம். அவர்களுள் அந்தத் தோட்டத்துப் பெரிய கணக்குப்பிள்ளைகள், பிள்ளைகள் அங்கிருந்த மகாவித்தியாலயத்திலேயே படித்தார்கள். அவரது பெண்பிள்ளைகளில் ஒருவர் பாக்கியலீலா. நான் கல்வி கற்பிக்கச் சென்ற காலத்தில் அந்தப் பிள்ளை ஆறாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தார். நான் அங்கிருந்து 1969 இல் மாற்றலாகி வந்த பின்னர் அவர்களுடைய தொடர்புகள் அறுந்து போய் விட்டன.

ஒருதினம் பாக்கியலீலா திடீரென என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அவருடைய மகள் கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு புதிய நியமனம் பெற்று வந்திருந்தார். அங்கு வந்து பணியை ஏற்றுக் கொண்டு என்னைப் பற்றி விசாரித்திருக்கிறார். எனது மூத்த மகன் அங்கு பணிபுரிகின்றார் என்ற தகவலைக் கூறி இருக்கிறார்கள். அவர் மகனை சந்தித்துப் பேசினார். அந்தப் பிள்ளையின் தாயார் பாக்கியலீலா தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு பேசினார். நான் கரவெட்டிப் பிரதேச செயலகம் சென்று அந்தப்பிள்ளையுடன் பேசினேன். எனது வீட்டுக்கு ஒரு தினம் அழைப்பதற்குத் தீர்மானித்தேன். ஆனால் எனது எண்ணம் நிறைவேறவில்லை. நியமனம் பெற்று வந்த வேகத்தில் மாற்றலாகி மலையகம் சென்று விட்டார். அந்தப் பிள்ளையின் தாயார் எனது மாணவி பாக்கியலீலாவுக்கு அப்பொழுது வயது அறுபது.

வடக்கு மாகாண கலாசார அமைச்சின் கலை இலக்கிய ஆலோசனைக் கூட்டம் 16.09 2012 இல் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெற்றது. ஆலோசனைக்கு கூட்டத்துக்கு எனது மகன் ஆதவனுடன்மோட்டார் சைக்கிளில் சென்றிருந்தேன்.


தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இரண்டாம் நாள் நிகழ்வில் மேடையில் பொன்னாடை போர்த்தி என்னைக் கௌரவித்தார்கள். விழாப் போட்டிக்கு வந்திருந்த சிறுகதைகளை மதிப்பீடு செய்து தேர்வு செய்து கொடுத்தமையினால் கௌரவிப்பு செய்தார்கள். இதன் பின்னணியில் ஆசிரியர் க.குணேஸ்வரன் இருந்து செயற்பட்டார். திரு. செல்லக்குட்டி கணேசன் விழாவுக்கு மோட்டார் சயிக்கிளில் ஏற்றிச் சென்றார் என்பது குறிப்பிட வேண்டியது.

நான் இதுவரை சொல்லாது இருந்த அனுபவங்களை "இன்னும் சொல்லாதவை" என்ற தலைப்பில் எழுதியிருக்கிறேனல்லவா? அந்த நூலுக்குரிய நூல் மதிப்பீடு பரணியின் "ஜீவநதி" சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. நூல் மதிப்பீட்டினை ஜீவநதி பிரதம ஆசிரியர் பரணீதரன் அவர்கள் எழுதி 2012செப்ரெம்பர் மாத ஜீவநதியில் வெளிவந்தது. மதிப்பீட்டினை "அர்ச்சுனன்" என்ற புனைபெயரில் எழுதியிருக்கின்றார்.

இக்கட்டுரைத் தொடரினை 2012 ஆம் ஆண்டு காலகட்டம் வரையும் எழுதி முடித்திருக்கின்றேன். இக்காலகட்டத்துக்குப் பின்னுள்ள சம்பவங்களை பின்னர் சந்தர்ப்பம் வரும் போது எழுதுவதற்கு உத்தேசித்துள்ளேன்.

இத்துடன் இந்த தொடர் முடிவுற்றது.


northern PC Park



வடக்கின்
கணினிப் பூங்கா

# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna


கணினி
உலகில்
நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு
மேலாக
யாழ் மண்ணில்

தரமான
கணினிகளைப்
பெற்றுக் கொள்ள
நம்மை நாடுங்கள்...

www.pcpark.co
info@pcpark.co

0215675566
0212229581
0212222050
0212220388
0777570124
0773366443
0755557327
0717772377

Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.